
# குறிஞ்சி மலர்கள்



தொகுப்பு
அந்தனி ஜீவா

KUMARASA
M.A., Ph.D.
REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
JAFFNA

# குறிஞ்சி மலர்கள்

29/03/2000

தொகுப்பாசிரியர்

**அந்தனி ஜீவா**

மலையக வெளியீட்டகம்
த. பெ. எண். 32
கண்டி.

# குறிஞ்சி மலர்கள்

(மலையக பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்)

தொகுப்பாசிரியர் :- அந்தனி ஜீவா
முதற்பதிப்பு :- சர்வதேச மகளிர் தினமான
மார்ச் 8 (08-03-2000)
அட்டை அமைப்பு :- ஓவியர் எஸ். டி. சாமி
வெளியீடு :- மலையக வெளியீட்டகம்
த. பெ. எண். 32,
கண்டி

# KURINJI MALARGAL

**Hill Country Female Writers Short Stories.**

*First Edtion* :- *8 March 2000*
*(International Women's Day)*
*Edited By* :- *ANTHONY JEEVA*
*Published By* :- *Hill Country Publishing House*
*P. O. Box 32, Kandy.*

*Cover Design* :- *S. D. Samy*

*Printed By* :- *GREEN LEAF Print House*
*416, Colombo Road, Pilimathalawa.*
*08-575219*

*Price* :- *Rs 100/=*

*ISBN 955-9084-08-9*

# பதிப்புரையும்
# சில குறிப்புகளும்

மலையக இலக்கிய வளர்ச்சியில் சிறுகதைக்கு ஒரு முக்கிய இடமுண்டு 1930களில் மலையகத்தில் ஆக்க இலக்கிய முயற்சிகள் முகிழத் தொடங்கின. மலையக ஆக்க இலக்கிய முன்னோடி பத்திரிகையாளரான கோ. நடேசய்யராவர். இவரின் வெற்றிக்கெல்லாம் துணை நின்ற இவரின் துணைவியார் மீனாட்சி அம்மையாரை மலையகத்தின் முதல் பெண் எழுத்தாளர் என்று குறிப்பிடலாம்.

மலையகத்தின் முதல் பெண்மணி என்றழைக்கப்படுகின்ற மீனாட்சி அம்மையார் கவிதை, கட்டுரை, தேசபக்தனில் ஆசிரியத் தலையங்கம் எழுதியது மாத்திரமின்றி மலையக மக்களின் எழுச்சிக்காக பாடல்களை எழுதியது மட்டுமன்றி மேடையேறிபாடியும் பிரசங்கம் செய்தும் அந்த மக்களை விழிப்புறச் செய்துள்ளார்.

பெருந்தோட்டத்துறையில் பெண்கள் எப்படி ஒடுக்கப்பட்டார்களோ, ஒதுக்கப்பட்டார்களோ அதே போல மலையக சிறுகதைத் துறையில் ஆண் எழுத்தாளர்களின் ஆதிக்கமே நிலவியது. அவர்களின் படைப்புகளே பேசப்பட்டன. அவர்களின் எழுத்துக்களே நூலுருவம் பெற்றன.

மலையக பெண் எழுத்தாளரான நயீமா ஏ. சித்தீக் (முன்னர் நயீமா பஷீர்) ''வாழ்க்கைச் ஒரு புதிர்'', ரூபராணி ஜோசப்பின் ''ஒரு வித்தியாசமான விளம்பரம்'', நாளாயினி சய்பையாவின் ''அவள் தனி மரமல்ல.......'' ஆகிய தனி நபர்களில் தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஆனால் தனித்தொகுதிகளாக வெளியிடும் அளவிற்கு பேராதனை ஷர்புன்னிஷா, பூரணி, புசல்லாவை ஸ்மாலிஹா, சாந்தாராஜ், பாலாரஞ்சனி ஆகியோர் சிறுகதைகள் எழுதியுள்ளனர். மலையக சிறுகதைத்துறையில் சூரியனாக சுட்டெரிக்க வேண்டிய பூரணி இப்பொழுது வடபுலத்தில் குளிர் நிலவாக (சகோதரி யதீஸ்வரியாக) வாழ்கிறார். இவரது கதைகள் இதுவரை தொகுதியாக வராதது பெரும் குறைப்பாடாகும்.

சிறுகதைகள் மாத்திரமின்றி புனைக்கதைத்துறையான நாவல்களில் தம் கைவண்ணத்தைக் காட்டியுள்ளார் கோகிலம் சுப்பையா இவர் எழுதிய ''தூரத்துப் பச்சை'' எனும் நாவல் முதல் மூன்று

தலைமுறை வாழ்வை அற்புதமாக சித்தரித்து காட்டுகின்றது. இந்த நாவல் 1946ம் ஆண்டில் சென்னையில் தமிழ்ப் புத்தகாலயத்தினால் வெளியிட்டது. பின்னர் வீரகேசரி பிரசுரமாக 1973ம் ஆண்டு வெளிவந்தது.

இலங்கை சுதந்திர பொன் விழாவையொட்டி இலங்கைக் கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியக் குழுவினால் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட தொகுதிகளில் ஐம்பது சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இதில் பெண் எழுத்தாளர்களின் நான்கு கதைகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் மலையக பெண் எழுத்தாளர்களின் ஒரு கதை கூட இடம் பெறவில்லை.

மலையக பெண் எழுத்தாளர்களின் ஆக்க இலக்கிய முயற்சிகளுக்கு நான் எப்பொழுதும் ஊக்கம் கொடுத்தே வந்துள்ளேன். நான் ஆசிரியராக பொறுப்பேற்றிருந்த ''குன்றின் குரல்'' சஞ்சிகையில் பெண் படைப்பாளிகளின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளேன். புதிய தலைமுறைக்கு களம் அமைப்பதற்காக மலையகத்தின் பல பகுதிகளிலும் பயிற்சி பட்டறைகளை நடத்தியுள்ளோம்.

குறிஞ்சி மலர்கள் என்ற தொகுதியில் பன்னிரு சிறுகதைகள் இடம் பெறுகின்றன. மலையகத்தின் மூத்த பெண் எழுத்தாளரான பேராதனை ஷர்புன்னிஷா முதல் இன்றைய இளைய தலைமுறை படைப்பாளி வரை இடம் பெற்றுள்ளனர். குறிஞ்சி மலர்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மலர்வது போல பன்னிரண்டு பெண் படைப்பாளிகளின் கதைகள் மலர்ந்துள்ளன. இனியும் மலையக பெண் படைப்பாளிகளை மறந்து மலையக இலக்கிய வளர்ச்சியைப் பற்றி பேசவோ, எழுதவோ முடியாது.

குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய ''Green Leaf'' அச்சகத்தாருக்கும், இந்த கதைகளை கணினியில் பதிப்பித்த சகோதரி எஸ். பீ. பாத்திமா றுக்ஸானா, கதைகளில் புருப் திருத்தி உதவிய ஜோசப் ஜேஸ்கொடி, அட்டைப்படத்தை வரைந்து உதவிய ஓவியர் எஸ். டி. சாமி ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
அந்தனி ஜீவா

கண்டி
03-03-2000

# சமர்ப்பணம்

*மலையகத்தின் முதல் பெண் எழுத்தாளரும்*
*மலையக மக்களின் விடிவுக்காக*
*செயல் வீராங்கனையாக*
*திகழ்ந்தவருமான*

மீனாட்சி அம்மையாருக்கும்

*மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய*
*சமதர்ம இயக்கத்தின்*
*பெண் போராளியும்*
*மலையக மக்களுக்காக*
*குரல் கொடுத்தவருமான*

விவியன் குணவர்தனாவுக்கும்

*"குறிஞ்சி மலர்கள்" காணிக்கையாகட்டும்!*

# குறிஞ்சி மலர்கள்


| | | |
|---|---|---|
| 1. பேராதனை ஷர்புன்னிஷா | - மனத்தின் சுமை | 7 |
| 2. பூரணி | - முடியாத கதை பல | 12 |
| 3. புசல்லாவ ஸ்மாலிஹா | - காயாம்பூவும் வாழைமரமும் | 22 |
| 4. அட்டன் சாந்தாராஜ் | - தோட்டத்து மண் | 37 |
| 5. ஷாந்தி மோகன் | - நெருப்புக்குள் வீடுகட்டி | 46 |
| 6. அக்னஸ் சவரிமுத்து | - செந்தாமரை | 53 |
| 7. பாலரஞ்சனி சர்மா | - நெத்திக்காசு | 63 |
| 8. ரோஹினி முத்தையா | - சட்டி சுட்டுவிடும் | 75 |
| 9. சுகந்தி வெள்ளையகவுண்டர் | - விடியல் எப்போது? | 82 |
| 10. செ. கோகிலவர்த்தனி | - பென்சன் | 87 |
| 11. இரா. சர்மிளா தேவி | - விதி வரைந்த பாதை வழியே | 91 |
| 12. சிவாஜினி சதாசீவம் | - லயக்காம்பரா | 96 |
| படைப்பாளிகளைப் பற்றி ............. | | 106 |

**1** ..........................பேராதனை ஷர்புன்னிஷா

# மனத்தின் சுமை

கண்டி மாநாகரின் மத்தியில் அமைந்துள்ள அந்த வங்கிக் கட்டிடத்துக்கு முன்னால் ஏராளமான மக்கள் குழுமி நிற்கின்றனர். வங்கிக் காவலன் வங்கிக்கு உட்புறத்தில் கதவோரமாக நிற்பதைக் கண்ணாடிக்கூடாகக் காண முடிந்தது. ஒன்பது மணிக்கு வங்கிக் கதவு திறக்கப்படும். இன்னும் பத்து நிமிடங்கள் இருக்க, அதற்குள் ஏன் இவ்வளவு பெருங்கூட்டம் என்ற கேள்வியோடு நானும் நிமிடத்தைக் கணக்குப் கோட்டுக் கொண்டு நின்றேன்.

வயோதிப மடத்திலிருந்து கிளம்பியதுபோன்று நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் கூடி நிற்கின்றனர். எல்லோருமாக அவர்களது மாதாந்த ஓய்வூதியப் பென்ஷன் பணத்தைப் பெறுவதற்காகவே காத்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு சிலர் தள்ளாடிய வண்ணம் உதவிக்கு ஒருவராக அழைத்து வந்திருக்கின்றனர். பல வருடங்களாகப் பல்வேறு வகையான உத்தியோகங்களிலும் பல உயர் பதவிகளிலும் அரசாங்கத்தின் சேவைக்காக தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் எதற்காக இவ்வாறு வாடி வதங்கிய நிலையில் நிற்க வேண்டும் என்பதை அவர்களது கவலைகளை ஏக்கம் நிறைந்த பார்வையிலிருந்து புரிந்து கொண்டேன்.

நேரம் ஒன்பது மணி. வங்கிக்கதவு திறக்கப்படுகிறது; எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு உள்ளே செல்கின்றனர். நானும் எனது கணவரின் வங்கிப்பட்டியலை எடுத்துக்கொண்டு உள்ளே செல்கிறேன். பென்ஷன் கவுன்டர் திறக்கப்பட்டது. எல்லோருமாக மீண்டும் ஒரு 'கியு' வரிசையில் நிற்கின்றோம். அதிகாலை வெய்யிலில் வங்கிக் கட்டடத்துக்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட வெப்பத்தின் வியர்வையைத் தாக்குப்பிடிக்குமாப்போன்று வங்கிக்கு உள்ளே இருந்து வந்த குளு குளு வென்ற ஏயர் கண்டிசன்,

காற்றோட்டமானது எமது களைப்பை களைந்த வண்ணமிருந்தது. ஒவ்வொருவராகக் கவுண்டரில் பட்டியல் சமர்ப்பிக்கின்றனர். எனது முறை இன்னும் வரவில்லை. அப்பொழுதுதான் எனது கணவரும் வந்து கொண்டிருந்தார். காலையில் நேரக்காலத்தோடு பென்ஷன் பட்டியலைக் கொடுத்தால் தான் அன்றைக்கே பென்ஷன் பணத்தை எடுக்க முடியும். அதனால்தான் அன்றும் நேரக்காலத்தோடு வங்கிப்பட்டியலுடன் என்னையும் அனுப்பி வைத்தார் எனது கணவர். நான் இன்னும் கியு வரிசையில் நிற்பதைக் கண்டதும் அவர் முகத்தில் ஏமாற்றம் படர்ந்து விட்டது. அவரும் செக்புத்தகத்தோடு அன்றே பணத்தைப் பெறுவதற்காகத்தான் வந்து நிற்கின்றார்.

மாதமொருமுறை இப்படியான சந்தர்ப்பத்தில் தான் பென்ஷன்காரர்கள் தமது பழைய நண்பர்களைச் சந்திப்பது வழக்கம். சிலரைக் கண்டதும் புன்முறுவல் செய்வதும், இன்னுஞ் சிலர் "ஹலோ" என்பதும் மறக்க முடியாதவர்களுடன் கைகொடுத்துக் கொள்வதும், கதைப்பதுமாக ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்கின்றனர். இப்படியே எனது கணவரும் மற்றுஞ்சிலரும் அறிமுகப்மாகிக் கொண்டிருக்க, நானும் பென்ஷன் கவுண்டரை நெருங்கிக் கொண்டிருந்தேன்.

எனது கணவர் அங்கு போடப்பட்டிருந்த நீளமான டிவோன் ஆசனமொன்றில் அமர்ந்து கொண்டு இன்னுமொரு வயோதிப நண்பருடன் கதைத்துக் கொண்டிருந்தார். என்னைச் சுட்டிக்காட்டி ஏதோ சொல்வதையும் அவதானித்துக் கொண்டேன். அந்த வயோதிபருக்கு எண்பது வயது தாண்டியிருக்கும். ஆனால் ஆங்கிலப்பாணியில் கிளீன் ஷேவ்லோங்க்ஸ்-கோட்-பூட்ஸ்-டை என்பன அணிந்தவராய் கம்பீரமாக காட்சியளித்தார். இருவரும் சுவாரஸ்யமாக பேசிக் கொண்டிருக்கும்போது நானும் பென்ஷன்பட்டியலைக் கவுண்டரில் கொடுத்துவிட்டுப் பெற்றுக் கொண்ட பற்றுசீட்டை கணவரிடம் வந்து கொடுத்தேன். பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்ட கணவர் என்னை அந்த முதியவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"இவர் மிஸ்டர் லோறன்ஸ்; கதைத்துக் கொண்டிருங்கள்; விரைவில் வருகிறேன்;" என்று சொல்லிக் கொண்டு வங்கி மெனேஜரைச் சந்திக்கச் சென்றார். பற்றுச்சீட்டைக் காட்டினால் மனேஜர் அந்தக் தொகைக்கான காசோலையின் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பார்; அதனால் உடனே பென்ஷன் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்; இப்படித்தான் அதிகமான பென்ஷினியர்கள் அவர்களது மாதாந்த வருமானத்தை அன்றே பெற்றுக் கொள்வது வழக்கம்.

மிஸ்டர் லோரன்ஸுக்கு சற்று இருமல்குணம், இருமிக் கொண்டே கதைத்தார். ஆனாலும் ஆங்கில ஆட்சிக்கால அதிகார பீடத்தில் பெற்றுக்கொண்ட கௌரவம், பேச்சு என்பன இன்னும் அவரது முகத்திலும் பேச்சிலும் பிரதிபலித்தன. அவரது பேரன் அவரின் பென்ஷன் பணத்தைப் பெற்றுவரும்வரை அவரும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். அவரது மனைவி காலமாகிப் பத்து ஆண்டுகளுக்கு மேலிருக்கும். அப்பொழுதுதான் எனக்கு அது ஞாபகத்திற்கு வந்தது. அதனை மீட்டிக் கொண்ட நான் "இப்பொழுது உங்களை யார் கவனித்துக் கொள்கிறார்கள்" என்று கேட்டேன். அப்பொழுது அவர் என்னை உற்றுப்பார்த்தார்; அந்தப் பார்வையில் ஓர் ஏக்கமே குடிகொண்டிருந்தது. சற்றுநேரம் எதுவும் பேசவில்லை. ஒரு கையால் தனது முகக் கண்ணாடியை கழற்றினார். மறுக்கையால் தனது கோர்ட் பாக்கற்றிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்தார். அப்பொழுதுதான் பார்த்தேன், அவரது கண்களில் கண்ணீர் நிரம்பிக் கொண்டிருந்தது. கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார். சற்று முன்னர் அமைதியாக இருந்தவரிடம் நான் ஏன் இந்தவினாவை எழுப்பினேன் என்ற நிம்மதியற்ற நிலைக்கு ஆளாகிவிட்டேன். என்றாலும் அவர் எல்லாவற்றையும் மறந்துவிட்டாற்போல் என்னைப்பார்த்துப் புன்னகை புரிந்தார். நான் ஒன்றும் பேசவில்லை. பேசி அவரது மனதைப் புண்படுத்தவும் விரும்பவில்லை. பின்னர் அவராகவே பேச ஆரம்பித்தார்.

"இப்போதெல்லாம் இந்தப் பென்ஷன் பணத்தைப் பெறுவதற்காக மட்டுமே நான் மாதத்துக்கு ஒரு நாளைக்கு இந்த வங்கிக்கு வருகிறேன். ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள வரும் போதுதான் எனது

சேவைக்கால மகிமைகளைப் பற்றி நினைத்துப் பெருமிதமடைவேன். ஒரு கல்லூரி அதிபராக ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கையைச் செப்பனிட்ட நான் இன்று சமுதாயத்தில் தனிமையாக்கப்பட்டு விட்டேன். என்றாலும் அந்தக் கடமை உணர்வுகள் என்னுள்ளத்தில் ஓர்மையாகவே இருக்கின்றது. அதனால்தான் இந்த ஒருநாளில் அதன் நிமித்தம் கிடைக்கும் இந்தச் சிறுதொகைக்கும் நன்றிக்கடனைத் தெரிவிக்குமுகமாக எவ்வாறெல்லாம் நாம் சேவைக்குச் செல்லும்போது என்னை அலங்கரித்துக் கொண்டேனோ அவ்வாறே அலங்கரித்துக் கொள்வேன்" என்று கூறிய அவர் சற்று சேரத்தில் அமைதியாக ஏதோ ஒன்றை நினைத்தவாறு சிந்தனையில் ஆழ்ந்தார். நானும் அமைதியாக அவரை நோக்கிய வண்ணம் இருந்தேன். அவரது கண்கள் மீண்டும் கண்ணீரோடு கலந்தன. முகம் வாடியது; இடையில் ஒரு பெருமூச்சு; பின்னர் மெல்லிய குரலில் "என்னைக் காத்த ஒரே ஒரு உயிர்."

"அதுவும் என்னை விட்டுப் போயிற்று" என்றார். வெளித்தோற்றத்திலே காணப்படுகின்ற ஒரு சிலரின் வேகமும் உறுதியும் அவரது உள்ளத்தைக் குடைந்து பார்த்தால்தான் தெரியும். எத்தனைமேடு பள்ளங்கள்; இடிந்த இதயங்கள்; உடைந்த பள்ளத்தாக்குகளாக மாறியிருக்கின்றன என்பதை அந்த லோறன்ஸின் இதயத்திலிருந்து மொழிகளாக எரிமலை கக்குமாப்போல கக்கிக்கொண்டிருந்தது. அவரது உள்ளக்குமுறல், தொடர்கதையாக மாறக்கூடும். அதனால் மெதுவாக எழுந்து விடைபெறலாம் என்று நினைத்து முடிப்பதற்குள் மீண்டும் என்னை நோக்கிய அவர் "மக்கள் பேரப்பிள்ளை என்றெல்லாம் இருக்கத்தான் செய்கிறார்கள். மக்களும், மருமக்களும் வேலையென்று போய்விட்டால் அந்தச் சின்னஞ் சிறுசுகளோடு கொண்டுள்ள பந்த பாசத்தினால் பேரின்பம் அனுபவித்த வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இன்று நான் பென்ஷன் எடுத்து வரும் வரையும் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பார்கள். எனது பேரப்பிள்ளைகள் அவர்கள் கேட்ட பொருட்கள் இதோ.....", என்று ஒரு லிஸ்டைக் கையிலெடுக்கும் போது எனது கணவரும் பென்ஷன் பணத்துடன் வந்துவிட்டார். பின்னர் இருவருமாக அவரிடம் விடைபெற்றுக் கொண்டோம்.

வழக்கம்போல நாமும் தெருவில் இறங்கி தேவையான பொருட்களை ஒவ்வொரிடத்தில் வாங்கிக் கொண்டு ஒரு சிறுமூட்டையாகக் கட்டிக்கொண்டோம். மிஸ்டர் லோரன்ஸ் கூறியது போன்றே எமது பேரப்பிள்ளைகளின் நினைவு தோன்றியதும் அவர்களுக்கு விருப்பமான பழங்கள் - பண்டங்கள் என்பதை வாங்கிக் கொண்டோம். ஒரு ஆட்டோவில் இருவருமாக வீடு நோக்கிப்புறப்படும் போது மிஸ்டர் லோறன்ஸ் சற்றுத்தள்ளாடிய வண்ணம் ஒரு பெரிய பார்சலுடன் வந்து கொண்டிருந்தார். சற்று மதுபோதையில் வருவதுபோல் தெரிந்தது. "ஆம்! பென்ஷன் காரர்களுக்கு இன்று பெருநாள்தானே! இதுபோல தொடங்குவார். ஏறுங்கள் வண்டியிலே" என்று ஏக்கமும் சிரிப்பும் கலந்த தொனியிலே. எனது கணவர் கூறவே நானும் ஆட்டோவுக்குள் புகுந்தேன். அவரது உள்ளத்தின் ஏக்கங்களை எண்ணியவாறே பயணமானேன். அவர் மீது ஒருவகையான அனுதாபம் அடிக்கடி என்மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

மாதம் ஒன்று கழிந்து விட்டது. அடுத்த பென்ஷன் பட்டியலும் வந்துவிட்டது. அடுத்த பென்ஷனுக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். மிஸ்டர் லோரன்ஸின் நினைவு வரவே அவருக்காக எமது தோட்டத்தில் இருந்து பறித்த மாம்பழங்களில் பத்துப் பழங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு பேக்கில் போட்டு அதனை எனது கூடைக்குள் வைத்துக் கொண்டேன். அன்றும் வழக்கம்போல் பென்ஷனர் கூட்டம் வங்கிக்குள் நிறைந்து காணப்பட்டது. எனது கண்கள் அந்த மிஸ்டத் லோரன்ஸைத் தேடித் துழாவிக் கொண்டிருந்தன. இன்று அவரைக் காணவில்லை. அவரை அழைத்து வருபவரையும் காணவில்லை. நாங்கள் பென்ஷன் பெற்று முடியும் வரை பார்த்தோம். அவர் வழக்கமாக உட்கார்ந்திருக்கும் டிவோனில் வேறு பலர் அமர்ந்திருந்தனர். சற்று ஏமாற்றத்துடன் எனது கணவர் அவரைத் தெரிந்த ஒருவரிடம் போய் விசாரித்தார். அப்பொழுதான் ஒரு மன அதிர்ச்சி ஏற்பட்டது. மிஸ்டர் லோரன்ஸ் இனிவரவே மாட்டார். என எண்ணிக் கொண்டு மீண்டும் அந்த மாம்பழப்பார்லை எனது கூடைக்குள் போட்டுக் கொண்டேன்.

(யாவும் கற்பனை)

*வீரகேசரி*
*01-08-1993*

## 2 ........................................ பூரணி

# முடியாத கதைகள் பல

தலைத்துண்டை இறுக்கமாகத் தலையில் சுற்றிக் காது ஓரத்தில் சொருகியபின், இரு கைகளாலும் தலைப்பாகையை சரிசெய்து கொண்ட வேலாயுதம் சட்டைப் பையில் இருந்த கடிதங்களையும் மறுபடி வெளியே எடுத்துச் சரி பார்த்து வைத்துக்கொள்கிறார்.

அந்தக் கடிதங்களிடையே ஒரு சிறு துணி முடிப்பும் இருந்தது. அது அவர் மனைவி பாக்கியத்தின் காதுக் கொப்புகள். இன்றைய அவருடைய பயணத்திற்காக ஈட்டுக் கடையில் குடிபுகத் தயாரான இரண்டு அழகிய ஜிமிக்கி கோர்த்த கொப்புகள், அந்தப் பொட்டலத்தைத் தனியே எடுத்து, அதன் கனத்தை அறிய விரும்புபவர்போல வலது உள்ளங்கையில் வைத்து மேலும் கீழும் ஆட்டியபடி அடுப்படிப் பக்கம் பார்க்கிறார். அங்கே பாக்கியம் அவருக்காகத் தேநீர் ஊற்றிக் கொண்டிருக்கிறாள். நளினமான உணர்ச்சிகளை வெளியிடும் வித்தையை என்றோ மறந்துவிட்ட அவள் முகம் சிந்தனையால் இறுகிப் கிடக்கிறது. தேநீர்க் கோப்பையையும் சீனிச் சாடியையும் எடுத்துவந்து அவரிடம் நீட்டியபடியே அவள் கேட்கிறாள்.

"பயணம் வச்சாச்சா மாமா? எல்லாம் மறக்காம எடுத்துக் கிட்டிங்களா?"

"ஆமா எல்லாம் எடுத்துக்கிட்டேன்......."

வேலாயுதம் தேநீரை வாங்ககாமலே தன் கையிலிருந்த சிறு முடிச்சினைக் காட்டி அவளிடம் கேட்கிறார்.

"ஏன் பாக்கியம்? இதை முப்பது ரூபாவுக்கு 'வச்சாப்' பத்தாதா?

நாட்பது எதுக்கு? வட்டியே எக்கச்சக்கமாக வருமாச்சே..."

"அதுக்கு என்ன செய்யிறது?"

பாக்கியம் தேநீரைக் கணவன் கையில் கொடுத்த படித் தொடர்கிறாள்; "வட்டி வருமுன்னு பாத்தா இப்ப நம்ம செலவுக்கு என்ன செய்யறது? நீங்க போகவர ரெண்டு மூனா ரூவா வேணும், அம்மாளுக்கு டொனிக்கு' அதான் கண்டாக்கையா சொன்னாரே என்னமோ சத்து மருந்துன்னு? அதுக்குப் பன்னிரெண்டு ரூவா வேணும், அம்மா ஆசைப்பட்டுக் கேட்டுக்கிட்டு இருக்கு, அதுக்கு நல்ல இறைச்சியா ஒரு ரெண்டு றாத்தலாவது வாங்கிவாங்க? அதோட ஆட்டுக்காலு 'சூப்' வச்சுக் குடுக்கச் சொன்னாரே டாக்டர் ஐயா? நல்லதா ரெண்டு காலு வாங்கிக்குங்க. அப்புறம் காய்கறி ஏதாச்சும் வாங்கி வரணும், அரிசியும் ஒரு மூணு கொத்து பார்த்து வாங்கி வாங்க? இந்த உக்கிப் போன வெள்ளையரிசிச் சோத்தைத் தின்னு நமக்கே வயிற்றுக்குச் சரியில்லே. சொகமில்லாத மனுசருக்கு எப்படி? நீங்க வேற கல்லையும் மண்ணையும் வாங்கி வராம நல்லதா ஒரு மூணு நாலு கொத்து அரிசி வாங்கி வாங்க.....? மேல ஒரு சாப்பாடு கீப்பாடு உங்களுக்கு வேணாமா? மேட்டு லயத்து கருப்பாயி வீட்டிலே அன்னைக்கு வாங்கின அஞ்சு ரூவாக் கடனையும் திருப்பிக் கொடுக்கணும். எல்லாத்துக்குமா நாற்பது ரூவாயாச்சும் வாங்கினாத்தானே கட்டுப்படியாகும்? வட்டிய பாத்தா ஆச்சா?"

மூச்சு விடாமல் பேசி முடித்த பாக்கியத்தின் முகத்தைப் பார்த்தப் படியே தேநீரைப் பருகி முடித்துவிட்ட வேலாயுதம் கோப்பையை அவளிடம் கொடுத்து விட்டுப் புறங்கையால் உதடுகளைத் துடைத்துக் கொண்டார். "உம் உம்....... அப்ப சரிதான் நாற்பதே வாங்குகிறேன்." என்று தலையை ஆட்டீயபடி அவர் கூறினாலும், "நீ சொல்ற கணக்கப் பாத்தா நாற்பது என்ன அம்பது ரூபா கூட பத்தாதுப் போ!" என மனதுள் கூறிக்கொண்டார். அதே சமயம், இரவெல்லாம் இருமியும் முனகியும் களைத்துப் போய்ச் சற்று முன்புதான் கண்ணயர்ந்திருந்த

பொன்னம்மா மறுபடியும் விழிப்புற்று இருமத் தொடங்கினாள்.

பொன்னம்மா வேலாயுதத்தின் அக்காள் - பாக்கியத்தின் தாய். கம்பளிச் சுருணைக்குள் முடங்கிச் சுருண்டு இருமியவள் சாம்பல் உள்ள சிரட்டையில் எச்சிலைத் துப்ப தலையைத் தூக்கினாள். அந்நேரத்தில் தன் தம்பி புறப்பட்டு நிற்பதையும் கண்டுவிட்டாள். பீளை கலந்த பிசுபிசுத்த கண்ணீரைத் துடைத்தவாறு மெல்ல சுவரில் சாய்ந்து கொண்டாள் பொன்னம்மா.

"ஏம்பா வேலு? பொறப்பட்டுட்டியா?"

"ஆமக்கா!" பாசமும் துயரமும், சலிப்பும் கலந்த பார்வையைத் தமக்கையின் புறம் ஒட்டியபடிப் பதிலளித்த வேலாயுதம் தொடர்ந்து கேட்டார்:

"வாய்க்கு ருசியா ஏதாச்சும் வேணுமானாச் சொல்லு அக்கா? பார்த்து வாங்கியாறேன்...."

"அதெல்லாம் ஒன்றும் வேணாப்பா! நீ எந்த மகராசன் காலுல விழுந்தாவது இந்தப் பிரசாவுருமச் சங்கதியை முடிச்சுட்டு வந்துரு அதுதான் சனியன் புடிச்ச கரைச்சலா இருக்கு........"

பொன்னம்மாளின் குரல் கமறுகிறது. கண்ணீருடன் அவள் இருமியபடி புலம்புகிறாள்.

"இல்லாட்டிப்போனா, ஒரு தொந்தரவுமில்லாமே 'அந்த ஊரு'க்குப் போயி தாயிபுள்ளைக மொகத்தைக் கண்ணால பாத்துட்டாச்சும் நிம்மதியாச் சாவலாமே........"

வேலாயுதம் முகத்தைத் திருப்பிக்கொள்கிறார். பாக்கியம் தன் தாயைக் கண்டிக்கும் பாவனையில் தேற்றுகிறாள்.

"சரி சரி, இப்ப ஏன் விடியங்காட்டியும் ஒப்பாரி வைக்கிறேம்மா! மனுசன் ஒரு காரியத்துக்காக வெளியே போறப்போ இப்படி ஒப்பாரி வைச்சுக்கிட்டிருந்தா நல்லா இருக்கும்? பேசாமப் படுத்திருப்பா........ அதெ விட்டுட்டு...!

அடிவயிற்றிலிருந்து பீறிட்டுக் கிளம்பிய அவலமான துன்பத்தை வலுக்கட்டாயமாக வாயைப் பொத்தி அடக்கிக் கொள்ளிறாள் பொன்னம்மா.

"அப்ப சரி நேரமாவுது போயிட்டு வாரேன்" என்றபடி கதவு மூலையில் தொங்கிய குடையை எடுத்துத் தோளில் கொளுவிக் கொண்ட வேலாயுதம் பக்கவாட்டின் சுவரில் மாட்டியிருந்த படத்தைப் பார்த்துக் கும்பிடுகிறார். பின்னால் பொன்னம்மாவின் குரல் சன்னமாய் ஒலிக்கிறது.

"நல்ல எறச்சியாப் பாத்து வாங்கிட்டு வா வேலு? ரோட்டுக் கடை யாழ்ப்பாணத்தாரு கடையில் ஒரு கட்டுப் போயலையும் வாங்கி வந்திரு?"

"ஆங் எல்லாம் வாங்கியாரேன். நீ சாப்பாட்டுக்கு மொதல்லே மறந்துடாமே மருந்தைக் குடி? இந்தா பாக்கியம்! நீயும் நேத்து மாதிரி மறந்து போயிடாம அக்காளுக்கு மருந்தை ஊத்திக்கொடு?"

சரி மாமா! நேத்து மழையோட மழையா நனைஞ்சு போய்வந்ததுலே எல்லாம் பறந்துபோச்சு.

"க்கும்! என்ன மருந்து அது! பச்சைத் தண்ணி! அதைக் குடிக்கிறதுக்கு பைப்புத் தண்ணியபுடிச்சாந்து குடிக்கலாம், கருமம்!" பொன்னம்மா பேசிக்கொண்டிருக்கையில் வேலாயுதம் வந்து வெளி வாயிற்படியில் நின்று வெளிபக்கம் எட்டிப்பார்க்கிறார். அடுத்த வீட்டுப்

பையன் - எட்டு வயது ஆண் பிள்ளை திகம்பரனாக வாசல் முற்றத்திலுள்ள வேலியோரம் குந்திக் கொண்டிருக்கிறான். லயத்து நாயொன்றும் அவனருகே வாலையும் உடம்பையும் ஆட்டியபடி நிற்கிறது. தொங்கல் வீட்டுக் கந்தசாமி தேயிலைக் குச்சியால் பல்லைத் தேய்த்தபடி முக்காடிட்ட தலையுடன் தோட்டத்துப் பக்கமிருந்து வருகிறார். இன்னும் இருள் முற்றாக விலகாத அந்த அதிகாலை நேரத்தில் லயம் வேறு சந்தடியின்றி உறங்கிக் கிடக்கிறது.

"என்ன மாமா நேரமாகலையா?"

முதுகுக்குப் பின்னால் பாக்கியத்தின் குரல் மெதுவாகக் கேட்கிறது இரண்டடி பின்னால் நகர்ந்த வேலாயுதம், "ஆம் பாக்கியம், அந்தத் துணிப் பையை எடு" என்கிறார். பாக்கியம் அறைக்குள் நுழைந்து சுருட்டி வைத்திருந்த துணிப்பையை எடுத்து வந்து தர, அதை வாங்கிக்கொண்டு "நான் போயிட்டு வாரேன்" என்றபடி லைசன்கல் வாசலில் இறங்கி நடக்கிறார் வேலாயுதம். குறுக்குப் பாதையில் வேகமாய்ப் போனால் அரைமணி நேரத்தில் ரோட்டுக் கடையை அடையலாம். ஆறே காலுக்கு முதல் பஸ் வரும். அதைப் பிடித்தால் எட்டு எட்டரை மணிக்குக் கண்டிக்குப் போய்ச் சேரலாம்.. சிந்தனையும், நடையும் துரிதமாகின்றன.

XXXXXX

ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முன்பு தம்முடைய ஏழாம் வயதில் அக்காள் பொன்னம்மாவுடனும், அவள் கணவனுடனும் இலங்கைக்கு வந்த வேலாயுதம். பொன்னம்மாளுக்கு அப்போது வயது இருபதுதான். அவளுக்கும் வேலாயுதத்துக்கும் இடையில் ஐந்து சகோதர சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தமிழ் நாட்டில் இருந்தனர். அந்த ஐவரில் மூவர் மாத்திரம் பிள்ளைக்குட்டிகளுடன் வாழ்வதாகவும், மற்றும் இருவர் இறந்து போனதாகவும் சமீபகாலங்களில் வந்த "எயார்மெயில்"கள் தெரிவித்திருந்தன. அந்தக் காலத்தில் அதாவது நாற்பது வருடங்களுக்கு முன்பு கட்டிய கணவனுடன் கடைசித்

தம்பியையும் உடன் அழைத்துக் கொண்டு பொன்னம்மா சிலோனுக்கு வந்தபோது அப்படி அவள் பிரிவதை விரும்பாத தகப்பனும், சகோதரர்களும் எவ்வளவோ தடுத்துப் பார்த்தார்கள். ஆனால் புருஷனுடைய கட்டளையை மீறமுடியாத நிர்ப்பந்தமும், புரிந்தும் புரியாமலும் அவளுக்குள் இருந்த சில ஆசைகளும் அவளைப் புறப்பட வைத்து விட்டன. பிறந்த உடனே தாயை இழந்து தனது கையிலும் மடியிலும் வளர்ந்த வேலாயுதத்தையும் எப்படியோ அவள் அழைத்து வந்துவிட்டாள்.பொன்னம்மாளுக்கு இரண்டு பெண்கள் பிறந்தனர். மூத்தவள் பருவமடைந்ததும் அவளைத் தன் தம்பிக்கே கல்யாணம் செய்து வைத்துவிட்டாள். இரண்டாமவள் லட்சுமியையும் நல்லதொரு மாப்பிள்ளைக்குக் கட்டி வைத்தாள். அந்தப் பெண் தன் தலைப் பிரசவத்திலேயே ஜன்னி கண்டு இறந்துவிட்டாள். அவள் குழந்தையும் தாயைப் பின்பற்றிவிட்டது. மூத்தவள் பாக்கியத்திற்குப் பிள்ளை பாக்கியம் கிடைக்கவில்லை எத்தனையோ கோடங்கிகள் வைத்தும், சாமி பார்த்தும், நூலுக்கு மேல் நூலாக எத்தனையோ நூல் கட்டியும் பாக்கியம் தாய்மையடையவில்லை. வேலாயுதத்துக்கு உள்ளதைவிடப் பொன்னம்மாளுக்கே இதுபற்றி அதிக மனக்குறை. அந்த ஊரிலிருந்து இந்த ஊருக்கு வந்து எத்தனையோ பாடுகள் பட்டுவிட்டு தன்னுடையதும் தம்பியுடையதும் வம்சம் விளங்க ஒரு பிள்ளை இல்லையே என்ற ஏக்கம். எத்தனையோ தோட்டத்தில் பொன்னம்மாவின் குடும்பம் உழைத்தது. அப்படி ஒரு தோட்டத்தில் தான் பொன்னம்மாவின் கணவனும் மாண்டு போனான். அதன் பின்னும் பொன்னம்மா தனியாக வாழ்ந்து வந்தாள் தொழிற்சாலையில் தான் அவள் வழக்கமாக வேலை செய்வாள். தேயிலைத் தொழிற்சாலையில் 'இலைபொறுக்குதல்' சல்லடைக் காம்பிராவில் வேலை செய்தல் முதலியவற்றில் பாராட்டு வாங்கியவள் அவள். ஏதோ தகறாறின் காரணமாகத் தம்பியுடனும் மகளுடனும் கோபித்துக்கொண்டு இப்போதிருக்கும் இந்தத் தோட்டத்திற்குத் தனியாகவே வந்து பதிந்து கொண்டாள் பொன்னம்மா. அவள் வந்த புதிதில் பிரஜாவுரிமைக்காக ஏதேதோ எழுதினார்கள். யாரோ வந்து தோட்டத்தில் உள்ளவர்களையெல்லாம் நூற்றி எட்டுக் கேள்விகள் கேட்டு எழுதிக்கொண்டு போனார்கள். அப்போது பொன்னம்மா தம்பியின் மீதும் மகள் மீதும் இருந்த ஆத்திரத்தில் "நான் நாதியற்ற

அனாதைங்க தொரை. எனக்கு ஒட்டு உறவு யாருமே இல்லீங்க. நான் பொறந்து வளர்ந்தது எல்லாம் சிலோன்தாங்க. தாயும் தகப்பனும் சின்ன வயசிலேயே விட்டுவிட்டுச் செத்துப்போனாங்க. நெனைவு தெரிஞ்ச நாள் முதலா கூலி வேலை தாங்க செய்யிறேன்" என்று அந்த விசாரணையாளர்களிடமும் பிரலாபித்துவிட்டாள். அவள் நிலைமைக்கு இரங்கியோ என்னவோ ஒரு சில மாதங்களில் பொன்னம்மாவுக்குப் பிரஜாவுரிமைக் கார்டும் கிடைத்துவிட்டது! இந்த நாளில், அது பின்னால் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளை உணராத நிலையில் டிரெங்குப் பெட்டியில் பத்திரமாய் வைத்துப் பூட்டினாள் பொன்னம்மா.

இரண்டு வருடங்கள் கழித்து 'ஊரிலே' யிருந்து கறுப்பு மை பூசி வந்த கடுதாசி கொண்டுவந்த தகப்பனாரின் சாவுச் செய்தி அக்கா தம்பியை மீண்டும் ஒன்றாக்கியது. ஸ்டோரில் மீண்டும் தனக்கிருந்த நல்ல பெயரைப் பயன்படுத்தித் தம்பியையும் மகளையும் தன்னுடனே வந்து இருக்கச் செய்து தோட்டத்திலும் பெயர் பதிந்து கொண்டாள் பொன்னம்மா. அதன்பிறகு அடுத்தடுத்து இரண்டு சகோதரர்களின் சாவுச் செய்தி கடிதமூலம் வந்தது. மஞ்சள் பூசிய லெட்டர்கள் இரண்டு மூன்று கூட வரத்தான் செய்தன. உண்மையில் தான் மட்டுமல்லாது தன் தம்பியும், மகளும் கூடத் தன் பிறந்து வளர்ந்த சுற்றத்தின் வாழ்விலும் சாவிலும் பங்கெடுக்க முடியாதபடித் தனிப்பட்டுப் போய்விட்ட அநியாயம் படிப்படியாகப் பொன்னம்மாவுக்கும் புரிந்தது. எந்த நாட்டு உரிமையைப் பற்றியும் அவள் கவலைப்படவில்லை. கடல் கடந்த நாட்டில் எஞ்சியிருக்கிற தன் இரத்த உறவுக்காரர்களைத்தான் மடியுமுன்னர் ஒருமுறையேனும் கண்ணாரக் காண அவள் ஆசைப்பட்டாள். தேயிலைத் தொழிற்சாலைகளின் அடுப்புச்சூட்டில் இரத்தமெல்லாம் வற்றி வேலையிலிருந்து கழிக்கப்பட்டு வீட்டின் மூலையில் முடங்கியபின் அவள் ஆசை விசுவமாகிவிட்டது.

அறியாமையின் மந்தநிலை. அரசியலின் குழறுபடிகள் வறுமையின் தடைக்கற்கள் எனக்காலம் கரைந்து கொண்டிருந்தது. மூன்று மாதங்களுக்கு முன்னால் பீலியிலே தண்ணீர் எடுக்கப்போய் நிறைகுடத்துடன் வழுக்கி விழுந்து, அதே அடியுடன் படுக்கையில்

விழுந்து விட்டாள் பொன்னம்மா, அன்றிலிருந்து அவளுடைய நச்சரிப்பும் அதிகரித்துவிட்டது. எப்படியாவது பிறந்த ஊருக்குப்போய்த்தான் ஆகவேண்டும் விரைவில் என்று துடிக்கத்தொடங்கிவிட்டாள். அவளுடைய நச்சரிப்பை தாங்கமுடியாமலும், தனது மனதின் ஆசை காரணமாகவும் வேலாயுதமும் அந்த ஊருக்குப்போக வேண்டிய முயற்சிகளில் இறங்கலானார். அந்த வேளையில் பார்த்துத்தான் எப்போதோ பொன்னம்மாவுக்கு அதிர்ஷ்டவசமாகக் கிடைத்த 'பிரஜாவுரிமை' ப் பிரச்சினை பூதமாகக் கிளம்பியது! மலைத்துப்போன வேலாயுதம் கண்டாக்கையா, கிளார்க்கர் ஐயா, தலைவர் ஐயா, தலைவருக்கு ஐயா போன்ற ஐயாமார்களின் ஆலோசனைப்படி எங்கெங்கோ சென்றார். யார், யார் சொன்னதையோ 'செவிமூடி வாய் திறந்து' கேட்டார். மனைவி கழுத்திலும், காதிலும் மின்னிய உழைப்பின் பயனையெல்லாம் அடவு வைத்தும் தட்டு முட்டுச் சாமான், வெண்கலப் பானைகளை அரை விலைக்கு விற்றும் செலவிட்டார், ஒரு பயனாவது விளையவில்லை!

"இன்னைக்கோ இல்லாட்டி நாளைக்கோ நான் சாகப் போறண்டா தம்பி கண்ணை மூடுறதுக்குள்ளே பொறந்த வீட்டுப் பிள்ளைகளைக் காணாமப் போகப் போறேனே நீ ஒரு ஆம்பிள்ளை சகோதரன்னு கிட்டத்திலே இருந்து என்னடா புரோசனம்?" என்று அடிக்கடி ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள் பொன்னம்மா. வேலாயுதமும் எங்கெல்லாமோ ஓடி யார் யாரிடமோ ஆலோசனை பெற்றுக் கண்டியிலுள்ள இந்திய ஹைகமிசனர் அலுவலகத்துக்குப் போக முடிவு செய்து விட்டார். அந்த முடிவு தான் இன்று காலை செயலாகிக் பயணமாகியது.

அருண்டு மிரண்டு எப்படியோ அந்த அலுவலகத்துள் நுழைந்து, தட்டுத் தடுமாறித் தன் பிரச்சினையை வெளியிட்டார் வேலாயுதம். அங்கிருந்த அதிகாரி அனுதாபத்துடன் எல்லாவற்றையும் கேட்டு விட்டுச் சற்று யோசித்தார். எழுந்துபோய் சற்றுக் கழித்து வந்து பத்து நாள் கழித்து வரும்படியும் தாம் ஆலோசித்து, ஏற்பாடு செய்வதாயும் கூறி விடை கொடுத்தார். ஏதோ பெரும் பாரத்தை அவர் காலடியில் இறக்கி விட்ட நிம்மதியுடன் மார்க்கெட்டுக்குப்போய் இறைச்சியும், காய்கறியும்,

மாம்பழங்களுமாய் வாங்கிக் கொண்டு மறக்காமல் கண்டக்டர் ஐயா சிபாரிசு செய்த 'டொனிக்' கையும் வாங்கிக்கொண்டு பஸ் ஏறினார் அவர்.

ரோட்டுக்கடை முடக்கில் இறங்கி யாழ்ப்பாணத்தார் கடையில் திறம் புகையிலை ஒரு கட்டும் வாங்கிக் கொண்டு நாட்டரிசியில் நாலு கொத்தும் தேடி வாங்கிக் கொண்டு அந்தச் சின்னக்கடைத் தெருவில் மிட்டாய் விற்கிற மொகமது காக்காவிடம் தனது அன்றைய அனுபவங்களைச் சுவை சொட்ட விவரித்து விட்டுப் புறப்பட்டார் வேலாயுதம். நெஞ்சேற்றமான குறுக்குப் பாதையில் தலையிலும் கையிலும் மூட்டைகள் கனக்க, வியர்வை வழிந்து கண்ணெல்லாம் எரிய மூச்சு முட்டப் படியேறிக்கொண்டிருந்தவர் நெஞ்சிலே நடந்த, நடக்கிற, நடக்கப் போகிற காலங்களைப்பற்றிய நினைவோட்டங்கள் பின்னர் நெளிந்தன. இடையில் அன்றைய அடைவுக் காசில் வரவு செலவு பற்றிய கணக்கையும் கூட்டிப் பார்த்துக் கொண்டார். அத்துடன் வீட்டுக்குப்போனவுடன் பாக்கியத்திடம் சொல்லி நாட்டரிசி சோறாக்கி ஆட்டிறைச்சி கறியும் ஆக்கி அக்காவின் ஆசை தீர தின்னச் செய்யவேண்டும் என்ற பாச உணர்வும் கசிந்தது. ஒரு வழியாக மாலை ஐந்து மணிக்கு அவர் தமது லயத்துக் கோடியை அண்மியதும் முதலில் அவரைக் கண்ட சின்னையா துக்கத்துடன் மெல்லக் கூறினார். என்னப்பா வேலாயுதம் இப்பத்தான், வாரியா? இங்கே எல்லாம் முடிஞ்சு போச்சு.... சித்தே முன்னாடி?"

வேலாயுதத்தின் கண்முன்னே ஒரு குண்டு வெடித்தது!

"என்ன சொல்றே சின்னையா?"

"உன் அக்காப்பா......... நாலு நாலரை மணியிருக்கும்..... முடிஞ்சிது" சின்னையா சொல்லிக்கொண்டிருக்கையிலேயே தன் வீட்டு வாசலில் நடக்கும் ஆரவாரம் பெண்களின் பிலாக்கணம் எல்லாம் மங்கலாகப் புரிகின்றன வேலாயுதத்திற்கு. அவருடைய வாய் அலறுகிறது.

"ஐயோ முடிஞ்சு போச்சா?" உள்ளே மனம் கதறுகிறது.

"அக்கா நீ கேட்ட எதுவுமே முடியவில்லையே!"

மயங்கி வீழ்ந்த வேலாயுதத்தை இரண்டு மூன்று பேர் வீட்டிற்குள் தூக்கி வருகின்றனர். பாக்கியம் தலையில் அடித்துக்கொண்டு கதறுகிறாள்.

லயத்துப் பெண்களின் கூட்டம் ஓங்கிய குரலில் ஒப்பாரி வைக்கிறது, அதற்குப் பக்க வாத்தியமாக வந்து சேர்ந்த பறைத் தப்பின் கர்ண கம்பீர ஒலி மலைச் சரிவுகளில் முடிவில்லாமல் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது. மலை முகடுகளில் கவியும் இருளிலும் நடுங்கி நடுங்கிப் பரவுகிற அந்தப் பேரொலி காலத்தின் சிரிப்பைப் போல் தொனிக்கிறது.

*அஞ்சலி, ஜுன் 1975*
*மறுபிரசுரம் : குன்றின் குரல்*
*ஆகஸ்ட் - 1987*

## 3.....................புஸ்ஸல்லாவை ஸ்மாலிஹா

# *காயாம் பூவும் வாழை மரமும்*

மாரியம்மன் கோயில் வலைவைத் தாண்டி வந்து கொண்டிருந்த காயாம்பூவின் பார்வை, சுந்தரத்தின் பெட்டிக்கடையருகே நின்று காசைக் கொடுத்து பெரிய சைஸ் வாழைப்பழமொன்றை வாங்கிக் கொண்டிருந்த குமாரைக் கண்டதும் கூர்மையடைந்தது. கடையருகே வந்து நின்றவன் கடையின் கூரைக்கம்பில் கயிற்றில் தொங்கிய பெரிய அந்த வாழைத்தாரைப் பார்த்தான். பின் கடைசிச் சீப்பில் இருந்து பருத்துக்கிடந்து மஞ்சள் நிறங்காட்டிய அந்த வாழைப்பழங்களைப் பார்த்தான். இறுதியில் அவன் பார்வை குமாரின் கையிலிருந்த ஒற்றைப் பழத்தின் மீது அச்சடிதாற்போல வந்து நின்றது.

பக்கத்தில் நின்ற எவரையும் சட்டை செய்யாதவனாக கருமமே கண்ணாகி வாழைப்பழத்தை குமார் மெதுவாக உரிக்கத் தொடங்கிய போது காயாம்பூவின் பார்வையில் பெரியதொரு ஏக்கம் தெரிந்தது. குமார் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்து விழுங்கிக் கொண்டிருந்த போது, அவன் வாயில் எச்சிலூறியது. தனக்கொரு துண்டு தரமாட்டானா? என்ற எதிர்பார்ப்பில் அவனை நோக்கிய போது, காயாம்பூவை இப்போதுதான் பார்ப்பவன் போல அலட்சிய பார்வையொன்றை வீசிய குமார், எஞ்சியிருந்த கடைசித் துண்டையும் லபக்கென்று விழுங்கிவிட்டு மீதமிருந்த வாழைப்பழத்தோலை காயாம்பூவின் முகத்துக்கு நேரே வீசியவன் "இந்தாடா தின்னு" என்று கேலி செய்து விட்டு மூலையில் சாத்தி வைத்திருந்த இரும்புச் சில்லை நிமிர்த்த வைத்து கோலால் தள்ளியபடி சிட்டாகப் பறந்தான்.

காயாம்பூ குமார் மறையும் வரை அவனது முதுகைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் நெஞ்சில் ஏக்கப் பெருமூச்செழுந்தது. குமார் தன்னை சட்டை செய்யாது காசு கொடுத்து பழம் வாங்கித்

தின்றது அவன் மனதை வருத்தியது. அவனுக்குந்தான் இப்படி வாழைப்பழம் வாங்கித் தின்ன எவ்வளவு ஆசை. அவன் தட்டில் வெற்றிலை அடுக்கிக் கொண்டிருந்த சுந்தரத்தைப் பார்த்தான். சுந்தரத்தின் பார்வை தன் மீது விழுமட்டும் மௌனமாக நின்றான். பொறுக்க மாட்டாதவனாகத் தொண்டையைச் செருமினான். டக்கென்று தன் பக்கம் முகந்திருப்பிய கடைக்காரனின் முகத்தைக் கண்டதும் தடுமாறிப் போனவனாய் மழைக்கு ஏங்கும் பயிராய் அவன் முகத்தைப் பாாத்து நின்றான்.

"என்னடா? வேணும்" என்று சுந்தரம் கேட்டபோது அவனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. பின் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவனாய் வாழைத்தாரையும், சுந்தரத்தையும் மாறி மாறி பார்த்துக் கொண்டோ எனக்கொரு பழம் வேணும் அண்ணே" என்றான். சுந்தரம் அவன்கையை நோட்டமிட்டவாறே "நாலு ரூவாக் குடு ஒரு பழந்தாரேன" என்ற இப்போது காயாம்பூ மனதில் ஏமாற்றம் உண்டாக நம்பிக்கை இழந்த நிலை தரையை வெறித்தவன், ஏதோ ஒரு நம்பிக்கையில் மீண்டும் நிமிர்ந்து "சம்பளத்துக்கு நாலு ரூவாத் தாரேன் அண்ணே" என்றான் பெரிய மனிதன் போல.

சுந்தரத்திற்கு உண்மையிலே இப்போது எரிச்சல் உண்டாயிற்று ஏளனத்துடன் "போடா போக்கெத்தவனே வெட்டிக்கத பேசிக்கிட்டு; நீயாவது தர்ரதாவது; முடியுமுனா வீட்டுல போயி உங்கம்மாகிட்ட நாலு ரூவா வாங்கிட்டுவா" என்றான். காயாம்பூவிற்கு இந்த வார்த்தைகள் வதையாக இருக்கவே "இப்ப சம்பளங் கூட இல்லே ஏதண்ணே சல்லி" என்று முணங்கினார். "உண்டியல்லே இல்லே சுண்டுவ எங்காச்சும் உங்கம்மா ஒண்ணு ரெண்டு போட்டு வச்சிருப்பா போயி வாங்கிட்டு வா போ போ என்று அங்கே நிற்க விடாமல் விரட்டினான் கடைக்காரன். இப்போது கடன் வாங்கும் ஆசையைக் கைவிட்டவனாய் வீட்டுக்குத்தான் போய் வருவோமே என்ற நப்பாசையோடு "அப்ப இருங்கண்ணே வீட்டுக்கு ஒருதரம் ஓடிப்போயி வந்திடுறேன்" என்று புறப்பட்டான் காயாம்பூ.

போன வேகத்தில் குசினியில் கரி படர்ந்து பிசுபிசுத்த டப்பாக்களையெல்லாம் திறந்துப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கியவனாக தாயின் முந்தானையை காயாம்பூ ஆராய்ந்தபோது "என்னடா தடவுரே" என்று கீரை ஆய்ந்து கொண்டிருந்த கமலம் கேட்க, "வாளப்பழம் வாங்கித் திங்கணும் நாலு ரூவா இருந்தாக் குடு" என்று கெஞ்சினான். முந்தாணையை உதறிக்காட்டிய கமலம் ஒரு சதங்கூட தன் கையில் இல்லை என்று கைவிரித்ததோடு; "அந்த சுந்தரந் தம்பிகிட்ட கடனா ஒரு பழங்கேளு ஒங்கொப்பனுக்கு சம்பளங்கெடச்சதும் காச குடுத்துடுவோம்" என்று அவனது ஆசைக்கு முற்றுபுள்ளி வைத்தாள்.

தன் ஆவல் கரைந்து போன சோகத்தில் காயாம்பூ கோபத்தோடு தன் தாயைப் பார்த்தான். ஒன்றும் பேசாமல் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டவனாக மீண்டும் பெட்டிக் கடைக்கு நடந்தான். "சல்லி கொண்டாந்தியா" என்று கடைக்கார சுந்தரம் கேட்ட கேள்விக்கு சங்கடத்துடன் "அம்மா மலைக்கு வேலைக்குப் போயி மாசக் கணக்காவுது அண்ணே அதுக்கு தெனஞ் சொகமில்லே; எங்கப்பாதான் ஒரு சதமுங் குடுக்காம தெணங்குடிச்சிப்புட்டுவருமே அப்புறம் ஏதண்ணே சல்லி" என்றவன் "தேயில கன்னு வக்க நூறு பேக்குக்கு மண்டைச்சி குடுத்தா ஐஞ்சு ரூவா கொடுப்பாங்கண்ணே அப்ப திருப்பித் தந்திடுறேன்" என்றான் நம்பிக்கையாக.

சுந்தரத்திற்கு அவன் பேச்சு வீண் பேச்சாக விளங்க "டேய் காயாம்பூ வெளயாடுரியா? நீ கொட்டம் அடிச்சி சல்லி தர்ரதுக்குள்ள விடிஞ்சிரும்" என்றவன் "முடியுமுனா சல்லிய குடுத்து பழம் வாங்கு இல்லேன்னா ஒரு வாழ மரத்த நட்டு அது காச்சி பழுத்த அன்னிக்கு பழம் பறிச்சி தின்னு" என்றான் முடிவாக.

காயாம்பூவிற்கு பெட்டிக்கடைக் காரனின் ஏளனமிக்க வார்த்தைகள் நெஞ்சைக் குத்திக் காயப்படுத்தின. இனி பேசிப் பயனில்லை என்ற முடிவோடு மனம் வெறுத்தவனாக மறுவார்த்தை

பேசாமல் வீடு திரும்பினான். வரும் போது கடையில் தொங்கிய அந்தப் பெரிய வாழைத்தாரே மனக் கண்முன் நிழலாடியது. வீட்டு வறுமை மனதுள் கசத்தது. அந்த நினைப்போடு வீடு திரும்பியவன் உள்ளே போய் அம்மியோரமாக அமர்ந்தான். வெறுமையான அவன பார்வை தரையில் இருந்தது.

சவுக்கு விளக்குமாறால் வீடு கூட்டிக் கொண்டிருந்த கமலம் மகனின் மௌனத்தைக் கண்டு விளக்கு மாற்றைப் போட்டு விட்டு அவனருகில் சென்றமர்ந்தாள். வாஞ்சையோடு தலையைத் தடவியவள் "பழங் கெடச்சிதாப்பா" என்று கேட்டாள். காயாம்பூவுக்கு அவள் வார்த்தை சுருக்கென்று கோபத்தை ஊட்டவே வெடுக்கென திரும்பி உட்கார்ந்தான். "சோறு சாப்பிடல்லே" என்றாள். தாய் மீண்டும் இப்போது அவன் கோபம் உச்சகட்டத்தை நெருங்கவே "சோறும் வேணாம் எனக்கொரு மண்ணும் வேணாம்" என்றவன் ஆத்திரத்தை தீர்த்துக் கொள்பவனாய் பக்கத்திலிருந்த செம்பைக் காலால் ஏற்றித் தள்ளினான்.

செம்பு நீர் தன்மீது பட்டு சிதறி ஓடியதும், கமலத்தின் மனம் பதறியது. மகனின் வேதனை மண்டிய முகத்தைப் பார்த்தவள் "ஏம்பா இப்படி படுத்திரே எங்கிட்ட சல்லி இருந்தா. தரமாட்டேனு சொல்லுவேனாராசா புள்ளய வவுத்திலே வச்சிக்கிட்டு நோய் நோயினு மாசக் கணக்கிலே வேலக்கிபோவாம கெடக்கிறேன்; ஓங்கப்பனுக்கு கள்ளுக்கடக்கி குடுக்கவே எடுக்கிற சம்பளம் போதாது. ஆசயா ஒரு மரக்கறி வதக்கிச் சாப்பிட வக்கில்ல. ரொட்டியுஞ் சம்பலுந்தின்னு நாக்கு செத்துப் போச்சி. இந்த லெச்சணத்துல நா எங்கேருந்தப்பா நாலு ரூவாக் குடுப்பேன் கோவிச்சுக்காதே கண்ணு" என்று கமலம் கெஞ்சியபோது காயாம்பூவின் கண்களில் அடக்கமுடியாத ஆர்பரிப்பின் வேகத்தில் விழி நீர் திரண்டது. "என்னிக்குதான் நான் சல்லி கேட்டு நீ குடுத்திருக்க" என்றவன் கைகளையும் கால்களையும் உதறிக் கொண்டு அடம்பிடித்தான். பக்கத்தில் இருந்த செம்பை மறுபடியும் காலால் உதைத்தான்.

இப்பொழுது கமலத்திற்கு மகனின் செய்கை எரிச்சலூட்டியது. தன் இயலாமையை புரிந்து கொள்ளாதது கோபத்தை உண்டாக்கியது. மருள் வந்தவன் போல் ஆடும் மகனைக் காட்டாமாகப் பார்த்தாள். "ஓ ஆட்டத்த நிப்பாட்டு சனியனே நா என்னா ஈரக்கொலயிலயா சல்லிய மறச்சிவச்சிக்கிட்டிருக்கேன்" என்றவள் "ஒனக்கு அப்படி பழஞ்சாப்பிடனும்னு ஆசயா இருந்தா "ஒரு மரத்த நட்டு பழம் பறிச்சி திண்ணு" என்று வக்கணையாகக் கூறிவிட்டு அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் குடத்துடன் பைப்படிக்குக் கிளம்பினாள்.

தாயின் அலட்சிய வார்த்தைகள் அவன் மனதில் ஈட்டியாய்த் தைக்க "பழம் வேணுமானா ஒரு தரத்த நட்டு பழம் பறிச்சி திண்ணு" என்ற கடைக்காரனின் ஏளன வார்த்தைகளோடு தாயின் வார்த்தைகளும் ஒத்திருப்பதை உணர்ந்து துடித்துப் போனான். எல்லோரும் மரம் நட்டியா பழம் பறிச்சி தின்னச் சொல்லுறீங்க அத நான் செஞ்சாத்தான் என்ன? என்ற ஆண் பிள்ளைக்கே உரிய ரோஷ உணர்வு பிடரியில் ஊர்ந்தது. காயாம்பூ பரட்டைத் தலையைச் சிலுப்பிக் கொண்டான்; அந்த நினைப்போடு வீட்டைவிட்டு வேகமாக வெளியேறியவன் கால் போன போக்கில் நடந்தான்.

கழன்று விழ எத்தனித்த அரைக்காற் சட்டையை கோபமாக மேலே இழுத்து சட்டையில் இருந்த ஏக்கியால் இணைத்து விட்டவன் ஊக்கியில் வாத செட் 'ஹோ'வென காற்றில் பறக்க ஒவ்வொரு லயத்துத் தோட்டத்துப் பக்கமாகவும் தன் பார்வையை மேயவிட்டுக் கொண்டே வந்தான். "ஒவ்வொரும் வேலக்கி போயிருக்கிற இந்த நேரத்திலே யாருட்டு தோட்டத்துக்குள்ளவாவது பூந்தா அப்புறம் அப்பன் கிட்ட பிராது வந்து அடி விழும்" என்று எண்ணியவன்; சற்று யோசித்துவிட்டு சற்று தூரத்தில் தெப்பக்குளக் கரையில் மஞ்சற் காடாய் பூத்துக்கிடக்கும் மரங்களிடையே தெரியும் சின்ன துரை பங்களாவின் திசைப் பக்கம் பார்வையை செழுத்தினான். உடனே சரசரவென குறுக்கு பாதையூடாக இறங்கி ஆலமரத்தைக் கடந்து தெப்பக் குளக் கரையூடாக நடந்து தேறியில் ஏறி பங்களாவின் ஒரு பக்க வேலியோரமாகப் போய் நின்றான்.

வேறு நாட்களாக இருந்திருந்தால் ஆலமரத்தில் வந்து நிற்கும் கொக்குகளுக்கு கல்லெறிவதிலும் புளிச்ச கொய்யா பறிப்பதிலும் சுவாஸ்யம் காட்டியிருப்பான். இன்று மன நிலை சரியில்லாத நிலையில் எப்படியும் ஒரு நல்ல பூவாழைக் கன்றை யாரிடமாவது வாங்கி தன்னை ஏளனஞ் செய்தவர்களுக்கு முன் தன் தோட்டத்திலே நாட்டி பதிலடி கொடுத்துவிட வேண்டுமென்ற வெறியில் கருமமே கண்ணாக விருந்தான். பங்களாவின் நெருக்கமான சப்பாத்தி - வேலிகளுக்கிடையில் சந்து உண்டாக்கி வலக்கையை ஒரு கண்ணுக்கு மறைவாக வைத்து அந்த சந்தினூடாக உள்ளே கூர்ந்து பார்த்தான். பங்களாவின் முன்பக்கத்து பூந்தோட்டத்தையெல்லாந் தாண்டி பலாமரங்களையும் கடந்து பக்கவாட்டுப் பகுதியொன்றில் ஏராளமான கரட், பீற் பாத்திகளுக்கு நடுவில் தன் தூரத்து உறவான இருளாண்டி மாமா வேலை செய்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவரது முதுகுப்புறம் அவனை நோக்கி இருந்தது.

உஸ் உஸ் என்று அவருக்குக் கேட்குமளவிற்குச் சத்தமெழுப்பிப் பார்த்தான். அது அவருக்குக் கேட்கவில்லை. என்ன செய்வதென்று சிறிது நேரம் யோசித்தவன் சிறிய கல்லொன்றை எடுத்து பங்களாவின் பின்புறமாக வளர்ந்திருக்கும் வாழைமரக் கூட்டங்கள் மீது வீசினான். அது தவறி பக்கத்திலிருந்த துரையின் எல்சேஷன் நாயிருக்கும் கொட்டகை மீது டொம்மென்று விழவே. அத்திரை நோக்கி இருளாண்டி மாமா திகைத்துப் பார்க்க துரைசாணி ரோஸ் பலுானாய் எட்டிப்பார்த்து "கௌத" என்று கத்தினாள். கட்டப்பட்டிருந்த எல்சேஷன் கல் விழுந்த சத்தத்தில் ஆக்ரோஷமாகப் பெருங்குரலெடுத்துக் குரைத்தது. திடீரென்று ஏற்பட்ட சிக்களில் காயாம்பூ நடுங்கிப் போனான். மிரண்டு போய் பக்கத்தில் இருந்த புதரொன்றின் கீழ் மறைந்து கொண்டான்.

சற்று நேரத்தில் சத்தங்கள் அடங்கிப் போகவே மெல்ல வெளியே வந்தவன், வேலியோரமாக நடந்து, ஓரளவு கிட்டிய தூரத்தில் நின்றபடி

தாழ்ந்த குரலில் "மாமா மாமா" என்றழைத்தான். வெற்றிலையை குதப்பியபடி பாத்தி கொத்திக் கொண்டிருந்த இருளாண்டிக்கு இக்குரல் கேட்கவே அவன் சற்றும் முற்றும் பார்த்தபடி குரல் வந்த திக்கில் வந்து நின்றான். கள்ளத்தனமாக துரையின் தோட்டத்துக்குள் நிற்கும் கருகப்பிள்ளை மரத்தில் இலை கேட்கவோ, பலா மரத்தில் காய் கேட்கவோ தெரிந்தவர்கள் யாராவது இருந்திருந்து வருவது வழக்கம். அப்படி வரும்போது இருளாண்டியின் கையிலும் ஏதாவது சில்லறைகள் விழும். இதை எண்ணிக் கொண்டு அவசரமாக வேலி அருகே வந்தவனுக்கு காயாம்பூவைக் கண்டதும் வியப்பாக இருந்தது. "என்ன காயாம்பூ ஒரு நாளுமில்லாம? மாங்கா ஏதாச்சும் கேக்க வந்தியா? பூவும் பிஞ்சுமாகத்தான் மரம் முழுக்க கெடக்கு தர்ரமாதிரி பழங்கெடயாதுடா" என்றான்.

காயாம்பூ விற்கு சிரிப்பு வந்தது "நா மாங்கா கேட்டு வரல்ல மாமா எனக்கு வேறொரு சாமான் வேணும். கெடைக்குமா என்றான் மெதுவாக. இருளாண்டிக்கு ஒன்றும் புரியவில்லை. துரையோட எல்சேஷன் குட்டி போட்டிருக்கிறது. வெளங்கரத் தனமாக அதிலொன்று கேட்கிறானோ? இல்ல லவ்பேட்சுன்னு கலா் கலரா ஏராளமான குருவிகளை தொரசாணி வளர்க்கிறாங்களே அதிலேதும் கேட்டு வருகிறானோ? நினைத்தவன் தன் வேலையில் இவன் மண்ணெ அள்ளிப்போட வந்திருக்கிறான் என்ற எண்ணத்தில் காட்டமாக "போடா களவாணிப் பயலே தொர வளர்க்கிற நாயி குருவிங்கள எல்லாம் சாதாரணமா அப்படித் தூக்கித் தந்திடமுடியுமா? இதுக என்னா நம்ம மாதிரி நாதியத்ததுகளா? இதுகளுக்கு ஒரு மாசத்துக்கு ஆவுர செலவுல நாமலா இருந்தா ஒரு குடும்பமே சாப்பிட்டரலாம். ஒரு நாயூட்டு வெலயே ஆயிரத்துக்கு மேல அத தூக்கிக் குடுத்துட்டு நா போலிஸில நிக்கவா?" என்ற போது காயாம்பூவிற்கு தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

அவன் பொறுமை இழந்தவனாய் "அட கர்மமே எனக்கு அதெல்லாம் ஒன்னும் வேணா தொரையும் நோனாவும் இங்க வரமுந்தி

எனக்கொரு கன்னு வேணுந் தருவியா?" என்றான். "தொரசாணி எங்கெங்கேயோ இருந்து கொண்டு வந்து மிகக் கவனமாக பொட்ஸ்களில் வளர்க்கும் ரோசாச் செடிகளில் கைவைக்கச் சொல்கிறானோ என்ற எண்ணத்தில் "அந்தா இருக்கே அந்த எளஞ் செவப்பு ரோசாவையா? கேக்கிறே அது மட்டும் நடக்காது. அந்தச் செடிய நான் வளர்க்கப்பட்டபாடு" என்று இருளாண்டி இரைந்த போது உண்மையிலேயே இருளாண்டி மாமாவின் அவசரப் புத்தியின் மீது கோபம் எழ" ஒனக்கு அறிவிருந்தாத்தானே நா சொல்றது வெளங்கும்" என்று வைதவன், "எனக்கொரு பூ வாழக் கன்னு வேணும் அதுதான் கேக்கிறேன்" என்றான் முடிவாக.

தான் அவசரப்பட்டு பேசியதெல்லாம் வீண் என்று தெரிந்ததும் அசடு வழிந்த இருளாண்டி "வாயத் தொரந்து கலாம்பரமா பேசினாத்தானே வெளங்கும். இப்படி சுத்தி வலைச்சுப் பேசினா என்ன எழவுதான் வெளங்கும்" என்றவன் "நமக்குதான் உட்காந்து சாப்புட சொந்தமா ஒரு வீடில்ல துணிகாயப் போட, வீட்ட சுத்தி கையகல நெலமில்ல இந்த லெட்சணத்துல எங்கேடா கொண்டு போயி வாழ மரத்த நட்டப்போற? இப்ப வாழக்கன்னுக்கு என்னடா அவசரம்" என்றான். ஒரு கனம் வெகுளியாய் நின்ற காயாம்பூ "வாளப்பலம் திங்க ஆசயாயிருக்குது மாமா? அதான்" என்றான். இப்போது இருளாண்டிக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. "அட ஏமாந்தவனே என்னக்கி நீ மரம் நட்டு என்னிக்கி பழம் புடுங்கித் திங்கப் போற இது என்னடா புது ஆசை" என்றான் கேலியாக.

இந்தக் கேலி காயாம்பூ விற்குப் பிடிக்கவில்லை. "தர்றதுனா தா இல்லேனா வேணா" என்று வெடுக்கென்று சொன்னவன். தலை குனிந்து நின்ற போது காயாம்பூவைப் பார்க்க இருளாண்டிக்குப் பாவமாக இருந்தது. அவனது ஏழ்மை நிலையை நன்கு அறிந்தவன் என்பதால் பாவன் சின்னப் பையன் ஏதோ ஆசைப்படுகிறான் என்ற எண்ணத்துடன் வேலிக்கூடாக அவன் கிட்ட நெருங்கி "இந்தா நீ நிக்கிற பக்கத்து கானோர புல்லை எல்லாம் புடுங்கி ஒரு பக்கமா குவிச்சுவையி நா

நோனாவுக்குத் தெரியாம குசினிக்குப் பின்பக்கமாயிருக்கிற வாழத்தோப்புல இருந்து ஒரு கன்னு கொண்டாந்து தாரேன்'' என்றவாறு பூனை போல் நடந்தான்.

உச்சி வெயில் மண்டையைப் பிளக்க பசிவேறு வயிற்றைக் கிள்ள எப்படியாயது ஒரு வாழைக்கன்றை வாங்கிக் கொண்டு போக வேண்டுமென்ற வெறியில் இருளாண்டிமாமா சொன்ன வேலையை ஒழுங்காகச் செய்து கொண்டிருந்த காயாம்பூவிற்கு நேரமாகமாகப் பொறுமை குறைந்து கொண்டு வந்தது. மாமா சென்று வெகு நேரமாகிவிட்டது என்பதை உணர்ந்தவன். தூரத்தில் வரையில் துரையின் சிவப்பு நிறக் கார் வருவதைக் கண்டு கடகடத்த நெஞ்சோடு சுற்றுமுற்றும் திரு திரு வென விழித்துப் பாத்துக் கொண்டிருந்தபோது இருளாண்டி மாமா ஒரு சிறு வாழைக்கன்றோடு தன்னை நோக்கி வருவது கண்டு அமைதியடைந்தான். வாழைக்கன்றை தூக்கி வேலிக்கு மறுபுறம் போட்ட இருளாண்டி "இது நல்ல பூவாள பழந்திங்கிறப்போ என்னையும் நெனச்சிக்க'' என்று சிரித்தவாறு கூறியவன் "தொர வர்ற நேரம் இனி நிக்காத ஓடு'' என்று விரட்டினான்.

மிகுந்த மகிழ்வுடன் ஒரு குழந்தையைப் போலச் தாயைப் பெருமை பொங்கப் பார்த்தான். தான் கோபமாகச் சொன்னதை சவாலாக ஏற்றுக்கொண்டு ஒரு வாழைக்கன்றை எங்கேயோயிருந்து கொண்டு வந்த மகன் முற்றத்தில் தனக்கு என இருந்த ஒரு சிறு இடத்தில் குழி போடுவதையும் கன்றை நட்டு வைப்பதையும் கண்டபோது தாயின் மனம் இரக்கத்தால் கசிந்தது. தன் வறுமையையும், கணவனின் கையாலாகாத் தனத்தையும் மறுபடியும் வயிற்றில் சுமக்கும் குழந்தையையும் எண்ணிக் கசந்த போதும், மூத்த மகனின் இந்தத் திறமையான செயல் கண்டு பூரிப்படைந்தாள். மரத்தை நட்டி முடித்த காயாம்பூ ஒரு செம்பு நீரை அதற்கு ஊற்றியவனாக தாய்மீது இருந்த கோபத்தையும் மறந்து "நா இல்லாத நேரம் யாரும் நோண்டாம கவனமாகப் பார்த்துக்கம்மா'' என்றான். பின் மனம் குளிர்ந்தவனாக தாயாருகே சென்று அமர்ந்தான். அவள் தந்த சோற்றையும் கீரைக் குழம்பையும் பிசைந்து அவசரமாகத் தின்று முடித்தவன் தான் செய்த

காரியத்தை தன் நண்பர்களிடம் கூறச்சிட்டாகப் பறந்தான்.

மறுநாள் தலைவர் மகன் சிவாவும் ரோதமுனி லயத்து சுகுமாரும் இன்னுஞ் சில வாண்டுகளும் காயாம்பூவின் வாழைக்கன்றைப் பார்க்க வந்தனர். முதல் நாள் காயாம்பூ கதையைச் சொன்ன போது "நீ என்னடா அதிசயமா தங்க வாழமரமா நட்டியிருக்க" என்று கேலி செய்தார்கள் எல்லோரும். என்றாலும் காயாம்பூ பிடிவாதமாகப் பேசியதும் சரிதான் பார்த்துவிட்டுத்தான் வருவோமே என்று பட்டும் படாமலும் வந்தவர்களை ஆர்வம் பற்றிக் கொண்டது. "சுற்றி சின்னதா ஒரு கருப்பந்தைல கெல வேலி போடு ஆடு வாய வைக்கும்" என்று சிவா ஆலோசனைக் கூறினான். அன்று வெகுநேரம் அந்த மரத்தைச் சுற்றியே அவர்கள் கதைத்துப் பிரிந்தனர்.

இப்போதெல்லாம் காயாம்பூ மேலாற்றுக்கு மீன்பிடிக்கப் போவதையும் செம்பகமரந்தான் காட்டிற்கு குருவி பிடிக்கப் போவதையும் ஏன் அப்பனோடு முயலுக்குக் கன்னி வைக்கப் போவதையுங் கூட விட்டு விட்டான். ஆடுமாடுகளால் அல்லது லயத்து ஆட்களால் சிறுவர்களால் வளரும் வாழை மரத்திற்கு சேதம் வருமென எண்ணி அதிகமான பொழுதை லயத்து வாசலிலேயே கழித்தான்.

ஒரு நாட்காலையில் முகங்கழுவ வெளியில் வந்த போது வாழையில் பட்ட அவன் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்ததன. குலைதள்ள ஆயத்தமாகப் பூவொன்று தலை நீட்டியிருப்பதைக் கண்டதும் பரவசப்பட்டான். உள்ளே ஓடிச் சென்று தாயை அழைத்து வந்து காட்டி மகிழ்ந்தான். மாதங்கள் பல உருண்டோடிய போது உயர்ந்து வளர்ந்து செழிப்புடன் காணப்பட்ட வாழைமரத்தையும் நடுவே அடுக்கடுக்காகத் தெரிந்த சீபிஞ்சுக்காய்களையும் கருஞ்சிவப்புப் பொத்தியையும் புதயலைக் கண்டவன் போல பார்த்து மகிழ்ந்தான். மரத்தடியில் புதிதாக தோன்றியிருந்த குட்டிக் கன்றுகளைத் தடவிப் பார்த்தான். அடுத்த வீட்டு சின்னானையும் சின்னப் பாப்பாவையுங் கூட்டி வந்து காட்டினான். "இது ஆன வாளடா" என்று பெரிய

மனுஷியாட்டங் கூறினாள் சின்னப் பாப்பா. "நீயொருத்தி நல்ல பூவாள" என்றாள் வெற்றிலை இடித்துக் கொண்டு லைசன் கல் மீதமத்ந்திருந்த ரெங்குவதி கிழவி. "பழுத்தா எங்களுக்கும் கெடைக்குமா" என்று கேட்டான் பத்து வயது சின்னான். காயாம்பூவுக்கு உடனே பழைய ஞாபகங்களெல்லாம் நினைவுக்கு வந்து குமாரின் முகம் மனக்கண்முன் தோன்ற "தான் தின்னிப் பயலாடா நான் கட்டாயம் எல்லோருக்கும் தருவேன்" என்றான் பெருமையாக. அப்போது டிஸ்பென்சரியில் மருந்தெடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்த தாய் கமலம் மரத்தை பார்த்துக் கொண்டே "இது பெரிய தாரா வரும் போல இருக்கு காய் பழுத்ததும் எல்லோரும் சாப்பிடுங்க" என்று பொதுவாகச் சொல்லி விட்டு உள்ளே போனாள்.

திடீரென உண்டான ஓர் எண்ணத்தில் "இது முத்த எவ்வளவு நாளாகும் அம்மா" என்றான் காயாம்பூ. "ரெண்டு மூணு மாசமாவது ஆகும் என்று அவள் முணுமுணுத்த போது இப்பவே பழுக்காதா என்ற ஏக்கம் அவனுக்குண்டானது. "நாயில்லாத நேரம் கவனமாப் பார்த்துக்கம்மா. கிளி, அணில், காகமெல்லாம் வந்து உக்காருது" வெறட்டு என்றான் யோசனையுடன். "பகல்ல பாத்துக்கலாம் ராவுல கள்ளன் வந்தா என்ன செய்யிரது என்று தாய் கூறிய போது தன் டொமி நாயை மரத்துக்குக் கீழே இரவில் காவலாக கட்டி வைக்க எண்ணங் கொண்டான்.

அன்று மாலையில் தூள் வாங்குவதற்காக உரக் காம்பிரா பக்கஞ் சென்றவன் சிவாவையும் சுகுமாரையும் கண்டு வாழைமரம் குலை தள்ளி இருப்பது பற்றியும் இன்னுங் கொஞ்ச நாளில் முற்றிவிடுமென்றும் கூறினான். "இனி தான் நீ கவனமாக இருக்கனும் ராவுல; முந்தா நாளு மேட்டு லயத்துல இருக்கிற எங்க சித்தப்பாவூட்டுத் தோட்டத்துல ரெண்டு முத்துன தார களவாணிப் பய ராவுல கொண்டு போயிட்டான்" என்றான் சுகுமார். அதைக் கேட்டதும் காயாம்பூவுக்குத் திகீர் என்றது. மனதில் உள்ளதை வெளிக்காட்டாமல் "எங்க டொமி நாய் வேட்ட நாயில்ல அது களவாணியக் காட்டிக் குடுத்துடும்"

என்றான் காயாம்பூ "நீயொருத்தன்டா டொமி காஞ்சி கெடக்குது ஒரு துண்டு பாணப்போட்டா சரண்டராயிடும்" என்று சிரித்தான் சிவா. காயாம்பூவுக்கு அவனது ஜோக் எதுவும் மனதில் படவில்லை. தனது வாழைத்தாரை இரவில் எப்படிக் காப்பாற்றுவது என்ற எண்ணமே மனதில் மேலோங்கிக் கிடந்தது. டொமியை நம்பிப் பயனில்லை. இனி தானேதான் விழித்திருந்து பார்த்துக் கொள்ள வேண்டுமென முடிவு செய்தான்.

இப்போதெல்லாம் இரவில் அவனுக்குத் தூக்கமே வருவதில்லை. வீட்டிற்குள் படுத்திருந்தாலும் வெளியில் ஒரு சிறு சத்தங்கேட்டாலும் தூங்க இயலாது தவித்தான்.

ஒரு நாள் இப்படி தூக்கம் வராமல் புரண்டு கொண்டு கிடக்கையில் வெளியே டொமி நாயின் பலமான குரல் கேட்டு திடுக்குற்றான். பரபரவென எழுந்து வந்து சமையலறைக் கதவைத் திறக்கையில், அரைகுறை வெறியில் படுத்துக் கிடந்த அவன் அப்பன் "எங்கடா போற" என்று கேட்டு விட்டு "என்னய மீறி எவண்டா இந்த வாசலுக்கு வரப்போறான்; போடா போக்கெத்தவனே போய் படு" என்று உறும, கதவைத் திறந்து பார்க்க இயலாத ஏக்கத்தில் தகப்பனை உள்ளூர வைதபடி உள்ளே வந்து விடிய விடிய விழித்துக் கிடந்தான் காயாம்பூ. விடிந்ததும் வெளியே வந்து வாழை மரத்தையும் குலையையும் பார்த்த பின்பே அவன் மனம் சமாதானமடைந்தது.

ஒரு நாள் காலையில் காயாம்பூவை எழுப்பிய தாய் "நம்ம வாளக் குல பழுக்க ஆரம்பிச்சிரிச்சிடா" என்று கூறிய போது வாயெல்லாம் பல்லாக மனமெல்லாம் மகிழ்ச்சி பொங்க அவன் எழுந்தான். வெளியே வந்து ஆசையுன் பார்த்தவனின் மனதில் தார் பழுத்ததும் யார்யாருக்கெல்லாம் கொடுக்க வேண்டுமென்ற திட்டம் எழுந்தது. முதல் சீப்பை வெட்டி அம்மனுக்குப் படைக்க வேண்டுமென்று எண்ணினான். "நாளைக்கி பொதன் கெழம வெட்டிப் பழுக்கப் போட்டுருவோம்" என்று தாயிடம் கூறியவன். "ஸ்கூலுக்குப் போயிட்டு

வர்றேம்மா" என்று புத்தகங்களுடன் புறப்பட்டான். மகிழ்ச்சியை சிவா, சுகுமாரோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று மனம் விரும்பியது. போகும் வழியில் லயத்து வாசலில் நின்ற குமாரைக் கண்டதும் "அவன் பார்க்க ஒரு சீப்புப் பழத்தயும் திங்கணும்" என்று எண்ணிக் கொண்டான் முகத்தை திருப்பியபடி நடந்தான்.

அன்று ஷ்கூல் விட்டு அவன் வீட்டு வாசலுக்கு வந்த போது வழக்கம் போல் அவன் பார்வை முற்றத்தில் நின்ற வாழை மரத்தின் மீது விழுந்ததும் திடுக்குற்றான். அவனது இதயமே நின்று விட்டமைப் போல ஒரு உணர்வு உண்டாக தாரை எவரோ வெட்டியிருப்பதை உணர்ந்தான். வாழைமரம் சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது. அப்பா பழுக்கப் போட்டிருப்பார் என்ற எண்ணத்தில் வீடெங்கும் அலசிய போது ஏமாற்றமே மிஞ்சியது. யாரிடம் கேட்பது என்று தாயாரைத் தேடியவன் மீண்டும் மரம் வெட்டப்பட்ட இடத்தருகே வந்து நின்று பெரும் யோசனையில் ஆழ்ந்தான். அவன் மனம் சிதறிக் கிடந்தது. அரிசிக் கழுவ வெளியே வந்த ரெங்குவதிப் பாட்டி அவன் நோக்கத்தைப் புரிந்து கொண்டவளாக கிட்ட வந்தாள். "என்னப்ப பாக்கிறத" என்றாள் "அதாம்மாயி வாழத்தார என்று இழுத்தான் காயாம்பூ, "அதாம்பா ஒங்கம்மாவ புள்ள கெடக்க ஆசுபத்திரிக்கு கொண்டு போயிட்டாங்க தெரியுமா" என்றாள் கொக்கியாய் அம்மாயி "எப்ப" என்று திகைத்தவன். "ரெம்ப வருத்தமா" என்றான் கவலையுடன். வருத்தமாத்தான் ஆசுபத்திரிக்கு கொண்டு போனாங்க, நீயேதும் சாப்பிடுயா?" என்று கிழவி தொடர "வாழத்தாரப் பத்தி நீ ஒன்னுஞ் சொல்லல்லியே பாட்டி" என்று ஞாபக மூட்டினான் காயம்பூ.

பாட்டி பதில் சொல்ல வாயைத் திறக்குமுன் மூக்கு முட்ட குடித்துவிட்டு, ஒருகையில் சாராயப் போத்தலுடன் தள்ளாடியபடி நடேசன் வந்து நின்றான். தகப்பனைக் கண்டதும் காயாம்பூ தலையைக் குனிந்து கொண்டான். "என்னடா? தலய தொங்கப் போட்டுக்கிட்டு நிக்கிறே என்ன நடந்திச்சி" என்று உறுமினான் நடேசன். மகன் மௌனம் சாதிக்கவே "வாயில என்னா? கொழுக்கட்டையா" என்று சீண்டினான். ஒதை விழுமோ என்ற எண்ணத்தில் "வாழக்கொல" என்று இழுத்தான் காயாம்பூ

"என்னா வாழக் கொலயா? ஊரு ஒலகத்துல இல்லாதது. ஒங்கம்மா ஆசுபத்திரியில் கெடக்கிறா. அவள விட இதா பெருசு; மாசக் கடைசி ஒங்கம்மாவும் வேலையில்ல. எனக்கும் சம்பளமில்ல எவன் கடன்குடுப்பான் அதான் தாரக் கொண்டு போயி பெட்டிக்கட சுந்திரத்துக்கிட்ட முன்னூறு ரூவாய்க்கி வித்துட்டேன்" என்ற போது காயாம்பூவின் கண்கள் கலங்கின. வேதனையோடு முகம் இறுகிப் போனவனாய் கல்லுப் போல நின்றான். "என்னடா மூச்சுக் காணோம்" என்று மறுபடி தகப்பன் பிச்சக்கார வாழப்பழத்துக்காப் போயி பொம்பளயாட்டம் அழவுறே. மரத்தச் சுத்திதான் இன்னரெண்டு கன்னு வளருதே அது வளந்தா தாராளமா திங்கலாம்" என்றான் சாராதாரணமாக நடேசன். அதைக் கேட்டதும் தான் கட்டிய மனக் கோட்டைகளெல்லாம் சுக்கு நூறாகச் சிதறிய நிலையில் மௌனமாக நின்றான் காயாம்பூ.

தாயின் பெயரைச் சொல்லி வாழைத்தாரை விற்ற அப்பா அவளை ஆஸ்பத்தியில் சென்றுகூடப் பார்க்காமல் குடித்துவிட்டு இறைச்சி பொரித்து தின்று சந்தோஷங் கொண்டாடுவது அவனுக்குக் குமட்டியது. நண்பர்களது முகங்களெல்லாம் அவன் கண்முன் தோன்றி அவமானப்படுத்த ஏமாற்றம் தந்த விரக்தியில் அன்று முழுக்க அவன் சாப்பிடவேயில்லை.

மூன்றாம் நாள் அம்மா சின்னத் தங்கச்சிப் பாப்பாவோடு வீட்டிற்குள் நுழைந்தபோது காயாம்பூ கலகலப்பின்றியே இருந்தான். "எம்பேரச் சொல்லி உங்கப்பாதார வித்து குடிச்சளிச்சுப்புட்டாராமே" என்றபோது தலை கவிழ்ந்து வெறுப்புடன் நின்றான். "நடந்ததப் பத்தி கவலப்படுறியாப்பா எஞ் செல்லமே" என்று அம்மா தலையைத் தடவிய போது முறண்டு பிடித்தான். "ஏம்பா ஒன் தங்கச்சிய பாக்கல்ல" என்ற போது கூட திரும்பிக் கொண்டான். அம்மா பிடிவாதம் பிடிக்கும் காயாம்பூவை வலுக்கட்டாயமாக இழுத்து அருகே அமரச் செய்தாள். இவ்வளவு நேரம் கட்டிலிலே தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து அவன் மடியில் வைத்தாள். "உன்

தங்கச்சிதாம்பா" என்று அவனது கைகளை எடுத்து குழந்தைக்கு அணையாக வைத்தாள்.

இப்பொழுதுதான் காயாம்பூ முதன் முறையாகக் குழந்தையை நன்றாகப் பார்த்தான். அதன் அழகிய முகத்தையும் கண்களையும் கண்டு பரவசப்பட்டான். அவன் முகம் பிரகாசமடைந்தது. குழந்தையின் கால்களைத் தொட்டுப் பார்த்துவிட்டு "பஞ்சு போல இருக்கும்மா" என்றான். "உன் சாயதான்" என்று அம்மா கூறியதும் சிரித்தான் பூவைப் போலத் தங்கையை அணைத்துக் கொண்டான். இப்போது அவன் கவலைகள் யாவும் எங்கோ ஓடி ஒழிந்தன போலிருந்தன. அவன் மனமெங்கும் இன்பக் குளிர்ச்சி பரவியது. "தங்கச்சு அழகுமா" என்றான் வாயைத் திறந்து, "உன் வாளக்கொலக்கி வேட்டு வச்ச தங்கச்சி" என்று கேலி செய்தாள் அம்மா. "பரவால்லேம்மா தங்கச்சி விட வாளக் கொலையா பெரிசு? அந்தகாசு தானே பாப்பாவுக்கு சட்டதுணி எல்லாம் வாங்கியிருக்காரு அப்பா, என்றவன் இன்னொரு கன்னு வளருது தானேம்மா அது பெரிசானா சாப்பிடலாந்தானே" என்று தாயைச் சமாதப்படுத்தினான்.

அப்போது அம்மா எதையோ நினைத்தவளாக ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டு வந்த பையைத் திறந்தாள். அதனுள் இருந்த ஒரு சிறிய பொதியை அவன் முன் நீட்டினாள். "என்னயப் பார்க்க வந்த ஆத்து லய அக்கம்மா குடுத்தது. ஒனக்காக திங்காம கொண்டாந்தேன்" என்றாள். காயாம்பூ தங்கையைத் தாயிடம் கொடுத்துவிட்டுப் பொதியைப் பிரித்தான் அதில் இரண்டு பூ வாழைப் பழங்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன.

*மலையக சிறுகதை*
*போட்டியின்*
*பரிசுக் கதை 1997*

4 ................................அட்டன் சாந்தாராஜ்

# தோட்டத்து மண்

வெகு நாட்களுக்குப்பின் மாதவன் அந்தத் தோட்டத்து மண்ணில் அடி எடுத்து வைக்கின்றான். அவன் பிறந்தது........... தவழ்ந்தது......... வளர்ந்தது எல்லாமே அந்த மண்ணில்தான். அவனைப் பெற்ற அன்னையை அடக்கம் செய்ததும் அதே மண்ணில்தான். தோட்டத்துக் கொட்டகையில் தொடங்கியது அவனது ஆரம்பக்கல்வி. அந்தத் தோட்டத்துப் பாடசாலையில் அவனுக்குப் படிப்பித்த முருகையா மாஸ்டர் ஒருநாள் மாதவனின் தகப்பனைக் கண்டு.

"இந்தாப்பா வேலுசாமி! உன்ட மகன் நல்ல கெட்டிக்காரன். ஐந்தாம் வகுப்போட நிருத்திப் போடாமல் மேலே படிக்க வைக்க முயற்சி பண்ணும். பக்கத்து டவுன் ஸ்கூல்ல சேர்த்து படிக்க வையுமய்யா" என்று வழிகாட்டி விட்டார். அவரின் தூண்டுதலால் மாதவன் தொடர்ந்து படிக்க பக்கத்து டவுன் ஸ்கூலுக்குப் போய் வந்தான். காலப்போக்கில் பட்டம் பெற்றுவர பட்டணம் போனான். பெற்றுக் கொண்ட பட்டத்துடன் மீண்டும் அதே தோட்டத்துள் காலடி எடுத்து வைக்க............... பட்டத்துடன் ஒட்டிக்கொண்டு விட்ட கௌரவம் தடுத்தது.

எப்படி வந்தது அவனுக்கு அந்த கௌரவம்........? தோட்டத்துப் பாடசாலையை விட்டு, தொடர்ந்து கல்வி கற்க தொலைதூரம் சென்றபோது........... அவனை கைசேர்க்க அவனைப் பெற்றவர்கள் பட்ட கஷ்டங்கள் ......... கற்க வேண்டுமென்ற ஆசையிருந்தும், அண்ணனுக்காக அத்தனையும் தியாகம் செய்துவிட்டு கொழுந்துக் கூடையை தோளில் சுமக்கத் துணிந்த அன்புத் தங்கைகள் அனைத்தும் அவனை உயர்திட

சொந்த காலில் நிற்க வேண்டுமென்ற ஆர்வத்துக்கு அதிர்ஷ்டமும் அவனுடன் ஒத்துழைத்தது. பரீட்சை எழுதிவிட்டு ரிசல்ட்டும் வந்தபின் தொடர்ந்து படிப்பதா உத்தியோகம் தேடுவதா என்று யோசனையில் ஆழ்ந்திருந்த வேளை அவன் நண்பன் மூலமாக வந்தது அந்தந் செய்தி.

"மாது.........! டேய் மாது......! இதப்பாருடா நம்மளுக்கெல்லாம் நல்ல காலம் வரப்போகுதுடா........."

அன்றைய பத்திரிகையுடன் மாதவனைத் தேடி ஓடி வந்தான் சுந்தரம். பெருந்தோட்டம் பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனச் செய்தியுடன் ஒரு சிறு சலுகையுடனான நியமனத்தைப் பற்றிய விசேட விளக்கத்தையும் சுந்தரம் நண்பனுக்கு சுட்டிக் காட்டினான்.

"நம்மளமாதிரி கஷ்டப்பட்டுப் படிச்ச தோட்டத்துப் புள்ளங்களுக்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பமடா. ஆறு பாடம் பாஸ் பண்ணின நம்ம புள்ளங்க இன்னொருதரம் முயற்சிப்போம்னு ஆசப்பட்டாலும் வெளில போய் டியூசன் படிக்க வசதியில்லாம...... தோட்டத்துல வேல செய்யவு மனசில்லாம .................... மனசொடிஞ்சி போயிடராங்கல்ல. அவங்களுக்காக எரக்கப்பட்டோ என்னவோ தாண்டா இத செஞ்சிருக்காப்பல்ல இருக்கு. ஆனால் நானு நீயுந்தா நல்ல ரிசால்ட் எடுத்திருக்கோமே. பயமில்லாமே எழுதிப் போடலாம்டா..........."

சந்தோஷமிகுதியால் சொல்லிக்கொண்டே போனான் சுந்தரம். மாதவன் பத்திரிகையை வாங்கி அவதானமாக வாசித்து ஆறுதலடைந்தான். சொந்தக்காலில் நிற்க நல்லதோர் சந்தர்ப்பம் அவனுக்கு.

பெருந்தோட்டத்து இளைய தலைமுறைகளோடு, நகர்புறத்து செல்வந்தம் பிள்ளைகளும் இலகுவாக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள். நண்பர்கள் இருவரும் வெவ்வேறு தோட்டப்

பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றுச் சென்றார்கள்.

முற்போக்கு சிந்தனையும், முயற்சியுமிக்க இரு இளைஞர்களுமே வாழ்க்கையில் முன்னேறத் துடித்தனர். மாதவனுக்கு குடும்பப்பிரச்சினை தடையாக இருக்கவில்லை. தாயில்லா பிள்ளைகளானாலும் தங்கைமார் தந்தையைப் பராமறிக்க தனயன் தயவை நாடாமல் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு விட்டனர். மாதவன் ஒருநாள் ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டவனைப் போல அரக்கபரக்க ஓடி வந்தான்.

"அப்பா.........! கடைசியா ஒரு மாதிரி பெரியவங்கள புடிச்சி நம்ம பக்கத்து டவுன் ஸ்கூலுக்கு மாற்றலாகிப்போக வழி செஞ்சிக்கிட்டேம்பா. இனி நான் அங்கயேதா தங்கிக்கப்போறே. மேலே படிக்கவும் வேண்டியிருக்கு. என்னால் அடிக்கடி இங்க வந்துப் போக முடியாதுப்பா................"

எப்படியாவது அந்தத் தோட்டக்காட்டையும் குடும்பத் தொல்லையையும் விட்டுப் போனால் போதும் என்ற தொனியில் செய்தியை வெளியிட்டான்.

"அதுகென்னப்பா மாதவா..................... சந்தோசமாகப் போயிட்டு வாப்பா நீ நல்லா படிச்சி முன்னுக்கு வரனுனுதானே நானு, ஓந்தங்கச்சிமாறு ஆசப்படறோம்................,"

பாசம் பொங்கக் கூறினார் வேலுசாமி. உழைத்தே ஓடாகிப் போனவருக்கு இதை சொல்லும் போதே மூச்சு வாங்கியது.

தன் குடும்பத்துக்கே சேவை செய்து பழகிவிட்ட சுந்தரமோ தனக்கு நியமனம் கிடைத்த பக்கத்துத் தோட்டப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கி விட்டான். எப்படியோ சொந்த முயற்சியால் அரும்பாடுபட்டு தானும் மாதவன் போலவே ஒரு பட்டதாரியாக முன்னேறி விட்டான். அதே பாடசாலையில் அவனுக்கு

அதிபர் பதவியும் கிடைத்தது. வெளிநாட்டு நிறுவனங்ளின் உதவியுடன் தனது பாடசாலையை முன்னேற்றுவதில் ஆர்வம் காட்டினான். தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை சற்றேனும் உயர்த்த வேண்டும் என்ற லட்சியத்தோடு பணிபுரிய முற்பட்டான். மாட்டுத் தொழுவ மாயிருந்த பள்ளிக்கூடம் ஒரு தமிழ் வித்தியாலயமாக மாற காரணமாயிருந்தான் மலையக மக்கள் மனங்களில் மாறாத இடம் பெற்று வந்தான்.

அப்போதுதான் வந்தது அந்த ஆசிரியர் இடமாற்றச் செய்தி. அதிகாரிகளின் சலுகையைப்பெற்று, நகர்புறங்களை நாடிச்சென்று நாகரிகமாக நடமாடும் மாதவனைப் போன்ற நகரப்பாடசாலை ஆசிரியர்களுக்கு இந்தத் திடீர் அறிவித்தல் ஒரு தர்மசங்கடமான நிலையைத் தோற்றுவித்தது. ''சே! கேவலம் தோட்டப் பாடசாலைக்காக.........?''

எழுந்தது போராட்டம் சுலோகங்களும்.............. பதாகைகளும்.......... கோஷங்களும்.............! வருங்கால வாரிசுகளின் வழிகாட்டியாக இருக்க வேண்டி ஆசிரிய பெருந்தகைகளின் ஆக்ரோஷமான ஆர்ப்பாட்ட ஊர்வலம். இதற்கு ஆதரவு தந்தவர்களும் மலையக கல்வி தரத்தை மேடையில் விமர்சிக்கும் பெருந்தகைகளே.

“தோட்டம் என்ற சொல் வேண்டாம்” தோட்டப்பாடசாலை என்ற பெயரை மாற்று, பெற்றுக் கொண்ட பட்டம் பயனற்றுப் போவதா?” “எங்கள் சேவை நகரத்துக்கே தேவை”, எங்களை அவமரியாதை செய்யாதீர்!”

கௌரமிக்க ஆசிரியார்களின் தன்மான கோரிக்கைகள். வழி நடத்திச் சென்றவன் மாதவன். அதில் பெருமை கொண்டான். இதனைக் கேள்வியுற்ற சுந்தரம் குழம்பிய போனான். அன்று மாலையே மாதவனைச் சந்தித்தான்.

"டேய் மாதவன்...! என்னடா இதெல்லாபம் கொஞ்சங்கூட நியாயமாப்படல எனக்கு. பேசாம நம்மட தோட்டத்து ஸ்கூலுக்கே வந்துருடா. நம்ம தோட்டத்துப் பசங்க கொஞ்சம் முன்னேறினாப்போல இருக்கும். ஓங்குடும்பத்தை கவனிக்க வசதியா இருக்குமில்ல.........?, என்றான் நம்பிக்கையோடு"

"சே! நாம இதுக்காகவாடா கஷ்டப்பட்டுப் படிச்சி பட்டம் வாங்கினோம். இவ்வளவு நாளா டவுன் ஸ்கூல்ல வேல செஞ்சிட்டு கேவலம் ........ இனிமே தோட்டத்து ஸ்கூல்ல போய் படிச்சி குடுக்கிறதா......?

அறுவறுப்பாக முகத்தைச் சுளித்தான் மாதவன். கேவலம் அவனுக்கா..... இந்தத் தோட்டத்து மண்ணுக்காக.................. புரியவில்லை சுந்தரத்துக்கு.

"டேய்! டேய்! என்னடா புதுசா பேசற படிக்கப் போறது நம்ம புள்ளங்கதானேடா. அவங்க முன்னுக்கு வந்தா நமக்குதான்டா. பெருமை. ஏண்டா உங்களுக்கெல்லாம் புரியமாட்டேங்குது. இப்படியே எல்லாருமே சொல்லிட்டா இனி ஒன்பாடு."

வெறுப்பும், சலிப்பும் தட்ட நண்பனிடம் விடைப்பெற்றுச் சென்றான் சுந்தரம். தோட்டத்துக்கள் நுழைந்ததும் இளைஞர் கூட்டம் சுந்தரத்தை சூழ்ந்துக் கொண்டது.

"சேர்! சேர்! நம்ம தோட்டத்து ஸ்கூலுக்குப் படிச்சிக்குடுக்க வரமாட்டோம்னு சொல்லி வாத்தியார் மாரெல்லாம் போராட்டம் நடத்துராங்களாமே. இது என்னங்க அதிசயமா இருக்கு. நம்ம தோட்டத்திலேயே பொறந்து வளர்ந்தவங்ககூட இப்படி சொன்னா எப்படிங்க..........? "

ஆதங்கத்தோடு கேட்டான் சத்தியன்.

"என்னாங்க சேர்! தோட்டத்துப் பாடசாலை, தோட்டத்து டீச்சர் மார்ங்கிற பேர வேணாங்கிராங்களாமே. அப்ப நாங்கெல்லா என்னாவுறது? தோட்ட தொழிலாளிங்க.............. தோட்டத்து கிளாக்கர்மாருங்க........... தொரமாருங்க........... எல்லாத்தையு இனிமே எப்படிங்க கூப்பிட போறாங்க இது என்னங்க அநியாயமாயிருக்கு............? "

நியாயம் கேட்டு நின்றான் கனகு. சுந்தரத்துக்கு பதில் சொல்லத்தெரியாத தர்மசங்கடமான நிலை.

"இல்லப்பா தம்பிமாரே.......... வந்து....... அவங்க வேல செஞ்ச எடத்திலேர்ந்து திடீர்னு மாத்தினதாலே அவங்களுக்கு கொஞ்சம் கோவம் அவ்வளவுதாம்பா........"

ஆசிரியர்களின் புனிதத்துவத்தை விட்டுக் கொடுக்காமல் சமாளித்தான் மனசுக்குள் நொந்துப்போனான். மாதவனும் அவனைச் சேர்த்தவர்களும் பிடிவாதமாகப் போராடி நகர்ப்புற பாடசாலைகளிலேயே நிரந்தரமாகிவிட்டார்கள். தான் பிறந்து வளர்ந்த தோட்டத்துக்கே வருவதை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு விட்டான் மாதவன்.

அன்று தோட்டம் என்ற சொல்லையே வெறுத்தவன் இன்று இதோ இவன் பிறந்த தோட்டத்துக்குள் வந்து கொண்டிருக்கின்றான். தோட்டம் என்ற பெயர் அழிக்கப்பட்டு விட்டதா..........? தோட்டத்து சனங்கள்தான் மாறிவிட்டார்களா என்ன.....? இல்லவே இல்லை. அந்த உழைக்கும் வர்க்கத்தின் ஓய்ந்துப் போகாத ஒப்பற்றத் தன்மை இன்னும் மாறிவிட வில்லை. பெண்கள் தங்கள் தோள்களில் சுமந்துச் செல்வதும் அதே கொழுந்துக் கூடைகள்தான் கவ்வாத்து வெட்டும் கரங்கள் களைப்படைந்து விடவில்லை. இன்னும் யந்திரமாய் இயங்கும் அதே தோட்டத்துத் தொழிலாளர்கள்தானா........?

மாதவன் என்றோ பழக்கப்பட்டு விட்ட பாதையில் நடக்கின்றான்

பார்வைக்கெட்டிய தூரம்வரை பசுமையான தேயிலை. நீண்டு வளர்ந்துச் செல்லும் குறுக்குவழிப் பாதைகள். அடுத்தடுத்து வரும் அன்றிலிருந்த அதே லயக்காம்பிராக்கள். லயத்து முற்றங்களில் நொண்டி அடிக்கும் வண்டி உருட்டும் சிறுவர் பட்டாளம். மாறவில்லை. மாறவேயில்லை. கொஞ்சம் தூரம் போக கொழுந்து மடுவத்துக்கருகில் நின்ற கூட்டம் மாதவனை அதிசயமாய்ப் பார்த்து அவனைச் சுட்டிக்காட்டி ஏதோ தங்களுக்குள் பேசிக் கொள்வது போன்ற பிரம்மை. அவர்களுள் ஒருவனாக அவனையேற்று வரவேற்பார்கள் என்று அவன் இன்று எப்படி எதிர்பார்க்க முடியும்..........? அவன் அண்மைக் காலத்தில் பெற்றுக் கொண்ட படிப்பும், பட்டமும் இந்தத் தோட்டக்காட்டக்கு ஒத்து வராது என என்று நினைத்தானோ அன்றே அவன் அந்நியப்பட்டுப் போனான்.

என்றோ அவன் எண்ணத்தில் தொலைந்து போன............ தொலை தூரத்தில் அவன் கண்ணுக்கு .......... அதோ தெரிவது அதே மேட்டு லயம். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் அவன் அவதறித்த அதே லயம்........... அவனை லயித்து நிற்கச் செய்தது. அந்த இடத்தை அண்மிக்க........ அண்மிக்க ஏதோ ஓர் அந்நியோன்யம் ஆம்! அவன் அந்நியன்னல்லவே. லயத்தைச் சுற்றி தொழிலாளர் கும்மல். வெளியே சற்று அமைதி ஆரவாரம் அற்ற அமைதி. உள்ளே..........? மரண ஓலம் பெரிதாக வெண்களின் ஒப்பாரிச் சத்தம். அவன் அன்னை அவனைப் பெற்றெடுத்த அந்த லயக்காம்பிரா முன் நிற்கின்றாள். மாறவில்லை....... எதுவுமே மாறிவிடவில்லை. மெல்ல உள்ளே அடி எடுத்து வைத்தான் மாறியிருக்கும் என மனதளவில் நிலைகுத்தி நிற்க..............! மாறிவிட்டிருப்பது அவனைப் பெற்ற தந்தை....... ஆம் பிணமாக ........ உயிரற்ற உடலாக........!

தந்தை தவறிவிட்ட செய்தி தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டபோது அது அவன் மனதை வெகுவாகப்ட பாதித்துவிட்டது என சொல்லிவிட முடியாது. சுகவீனமுற்றிருந்த தந்தையின் முடிவுச் செய்தியை அவன் என்றோ எதிர்பார்த்ததுதான் இருந்தான். தந்தையின் இறுதிக் கடன்களைச் செய்ய உத்தமபுத்திரனாக உடன் புறப்பட்டு வந்தான். சொந்த மண்ணில்

அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் அவன் அடிமனத்து உணர்வுகளைத் தட்டி எழுப்பின. பெற்ற தாயின் இழப்பின் பாதிப்பை முழுமையாக உணர்ந்து கொள்ள முடியாத பருவத்தில் அன்பு அப்பாவின் அரவணைப்பில் ஆறுதல் கண்டான் அவன் வளர்ந்து விட்ட பின்னும்..........

"வாப்பா மாதவா.........!"

என தோழமையுடன் தோளைத் தொட்டணைக்கும் கரங்கள் இன்று நேசத்தோடு நீண்டு வரவில்லை. அப்பா .....! அண்ணா வந்திருச்சிப்பா......! கூடப் பிறந்தவர்களின் குதூகலக் குரல் கூடிவரவில்லை. முதன் முறையாக அவன் வாழ்க்கையில் வேதனையின் தாக்கம்.

"ஐயோ ......! அப்....பா........!"

"ஐயோ ..........! அண்ணா ......! அப்பா நம்மளயெல்லா வுட்டுட்டுப் போயிட்டாரண்ணா........"

அவனைக் கட்டிப்பிடித்துக் கதறியழுதது பந்தபாசம் மாறாம மறக்காத அன்புத் தங்கைகள்தான். தோட்டத்துப் பின்னணியைப் பிரதிபலிக்கும் பாசப் பிணைப்புகள்.

மாதவன் மனதில் துன்பத்தின் தாக்கம் அவன் படித்தான்...... பட்டம் பெற்றான்......... மாற்றத்தை நாடினான்......... போராடினான்........ தன்னை உயர்த்திக்கொண்டவன் தன் உடன் பிறப்புகளையே உதாசீனம் செய்து விட்டிருப்பதை உணர்ந்து கொண்ட போது உள்ளம் உடைந்தும் போகிறான். கேவலம் ............. அவனை கேள்விக் கேட்கிறது.

"பெரீ......ய வாத்தியாருடா தோட்டக்காட்டயே திரும்பிப்பார்க்க மாட்டேனாரில்ல இப்ப அப்பனோட பொனத்த எங்க பொதக்கப்

போறாராம் பார்ப்போம்."

"பெரீ........ய படிப்பு படிச்சாலும் அப்பனுக்கு மகந்தானே......? தங்கச்சிங்களுக்கு அண்ணந்தானே.........? இவனுமே இந்த தோட்டத்து மண்ணுக்கு சொந்தமான வந்தானய்யா.....?

படிக்காத பாமர மக்களின் பண்பட்ட பேச்சுக்களின் பாரிய தாக்கம். தந்தையின் இறுதி கடன்களை முடித்த கரங்களிரண்டும் கன்னத்தைத் தாங்க கோடிப்புறத்தில் பெருத்த சிந்தனையோடு அமர்ந்திருந்த மாதவனைத்தோடி வந்த சுந்தரம்.

"மாதவா....! என்னப்பா பெரிய யோசனையில இருக்காம்பல இருக்கே......? "

அன்புடன் தோளில் கைப்போட்டு ஆதங்கத்துடன் கேட்டான்.

"இல்ல சுந்தரம் தங்கச்சிங்க ரெண்டுபேரயுந் பத்திதா நெனச்சிக்கிட்டிருக்கேன். இப்ப நானிருக்க எடத்துக்கு அவங்கள கூட்டிப் போகவும் முடியாது. அவங்களுக்குப் படிப்பறிவும் கெடயாதுல்ல. இந்தத்தோட்டத் தொழில விட்டா வேறு கதியில்ல அவங்களுக்கு. பழையபடி பெரியவங்க காலபுடிச்சாவது இந்த தோட்டத்து ஸ்கூலுக்கே மாறி வந்துட்டா பிரச்சினையில்லனு தோனுதுடா. இன்னமுமே அதே நெலமயில இருக்கிற நம்ம தோட்டத்து சனங்களோட வாழ்க்கை தரத்த உயத்தனும்னா அது நம்மல போல படிச்சவங்கனானதா முடியும்னு இப்ப எனக்கு புரியுதடா......."

மனம் திருந்தி பேசினான் மாதவன். மனம் நிறைந்து சிரித்தான் சுந்தரம்.

*குன்றின் குரல்*
*ஏப்ரல் - 1999*

5 ..............................ஷாந்தி மோகன்

# நெருப்புக்குள் வீடுகட்டி

சுள்ளென்று எரிக்கும் அந்த உச்சி வெய்யிலின் உக்கிரத்தைக் கூட அச்சாக்கடைக் கானின் துர்நாற்றம் தூக்கியெறிந்து கொண்டிருந்தது! வியர்வையை துடைத்துக்கொண்ட பெரியசாதியால் அத்துர்நாற்றத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை. சுவாச வாயிலை சுருக்கியபடியே, கான் மண்ணை வழித்துக் குவித்தப்படியே முன்னேறிச் சென்று கொண்டிருந்தார் பெரியசாமி.

சிறிது தூரஞ் சென்றபோது, தென்பட்ட "காட்டுக் கற்பாறை" யெனக்கூறப்படும், இளைப்பாற்றுக் கல்லின் மீது பெரியசாமியின் கண்கள் குத்திட்டு நின்றன! எண்ணங்கள், அவரையுமறியாது, சிறகடித்து பறந்தன.

வழமைபோல், அன்றும் அப்படித்தான், தனது சில சகாக்களுடன் அமர்ந்து காலைத் தேநீரைக் களைப்புத்தீரப் பருகிக் கொண்டிருந்தார், பெரியசாமி கங்காணி. அவ்வேளை எதிர்பாராத விதமாக துரையும் தோட்டச்சொந்தக்கார நிறுவனத்தாருள் ஒருவரும், பொட்டு கான் வழியாக நடந்து வந்து, கங்காணியார் அமர்ந்திருந்த, காட்டுக்கற்பாறையை அடைந்தனர். இளைப்பாறிய கங்காணியை பார்த்த தோட்டத்துத் துரை, "ஏ பெரியசாமிக் கங்காணி இங்க வாரது" என்றழைத்தார். குரல் வந்திருக்கை நோக்கிய பெரியசாமிக்கு பகீரென்றது. என்றாலும் தேநீர் இடைவேளைதானே? எனப்பயத்தை தவிர்த்த படியே விரைவாக எழுந்து நடந்தார்.

"என்ன கங்காணி இப்பிடி உக்காந்து தேத்தண்ணி குடிச்சா தோட்டம் எப்புடி, லாபத்தில போகும்? சொல்லணும் கங்காணி!" என்ற துரைத்தனமான தமிழுக்கு பதில் சொல்ல முற்பட்ட கங்காணி,

"என்னங்க சேர் இது எங்களோட தேத்தண்ணி நேரத்தானுங்களே? நாங்க ஒன்னும் வேல நேரத்தில ஒக்காந்து தேத்தண்ணி குடிக்கலைங்களே.......?" என்ற கங்காணியின் நியாயமான பதிலும் கேள்வியும் ஏனோ" அவர்களுக்கு அநியாயமாகப்பட்டது.

"ரெம்பக் கதைக்க வானாங் கங்காணி, நான் சொல்லுறத செய்யுறது. இப்பப்போய் வேல பார்த்திட்டு, அந்திக்கு, ஆபீஸ் பக்கம் வாறது" என்று கூறியபடியே தன்னுடன் வந்த தோட்ட நிறுவனத்தாருடன் ஆங்கிலத்தில் சம்பாஷித்தப்படி, துரை போய்க் கொண்டிருந்தார்.

அன்று மாலை துண்டை உதறி தோளில் போட்டப்படியே நடந்த விடயங்களை பற்றி விவாதித்துக் கொண்டு, தன் சகாக்கள் இருவருடன் ஆபீஸ் நோக்கி நடந்தார், கங்காணியார். பல்வேறு பிரச்சினைகள் பற்றி சூபவைசர்களுடனும் பெரிய கணக்குப் பிள்ளையுடனும் கதைத்து கொண்டிருந்த துரையவர்கள், யன்னல் வழியாக கங்காணியாரை கண்டதும் அவரை அழைக்குமாறு கணக்குப் பிள்ளைக்கு சைகை காட்டினார்.

பெரியசாமி கங்காணி பயபக்தியுடன் யன்னலருகே செல்ல, துரையின் இறுக்கமான வதனம் சற்று விரிந்து சுருங்கியது. "என்ன கங்காணி நான் இன்னக்கி காலேல சொன்னது நெனவில இருக்கா" என்ற பிள்ளையார் சுழியுடன் ஆரம்பித்தார். தோட்டத்துரை டொன் லேனாட்ஸ்!

"ஆமாங்க சேர் ஆனா....." என்று இழுத்த கங்காணியின் அபிப்பிராயத்தையும் செவிமடுக்கத் தவறவில்லை, துரையவர்கள்! "சொல்லுறது கங்காணி" துரையின் உற்சாகத்தை தொடர்ந்து, "வந்து சேர், இவ்வளவு நாளும் நீங்கள்தானே சேர் எங்களுக்கு துரையா இருந்தீங்க...........? நாங்க இவ்வளவு நாளும் பத்து மணிக்கு தேத்தண்ணி குடிச்சது ஐயாவுக்கு நல்லா தெரியுந்தானுங்களே? அதோட சேர் மனுஷன் தொடர்ந்தும் வேலை செய்யுறதுன்னா, எடயில எதையாவது

கொஞ்சம் தின்னு குடிச்சாத்தானே சரிவருங்க. அப்பதானுங்களே வேலையும் சுருக்கா, அதிகமாக நடக்கும்.....? என்னங்கையா.....? நாஞ் சொல்லுறது சரிங்களா?" என்று நிறுத்தினார் கங்காணி.

தன்னையறியாது தலையையாட்டி ஆமோதித்த கணக்குபிள்ளையைக் கூட ஒரு மாதிரியாக பார்த்த துரை "சொல்லுறது வெளங்குது கங்காணி ஆனா எந்த நாளும் ஒரேமாதிரி வேல செய்ய முடியாது தெரியுமா? இப்போ முந்தி போல இல்லையே தோட்டத்தக் கம்பனிக்காரங்களுக்குக் கொடுத்தாச்சு தெரியுமா? இதப்பத்தி கணக்குபுள்ள ஐயா சொல்லியிருப்பாரே. இவங்க சொல்லுறபடிதான் நான் உங்களுக்கு வேல சொல்ல ஏலும். அதேபோல நான் சொல்லுறபடி தான் நீங்க வேல செய்ய வேணும். விளங்கிச்சா கங்காணி?" என்ற துரையவர்களின் வினாவிற்கு கங்காணியார் விரைவாகத் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

"சரி கங்காணி நாளேலயிருந்து ஒழுங்கா வேல பார்க்க வேணும். காலம்பர தேத்தண்ணிக்கு ஐஞ்சு நிமிஷத்துக்கு மேல குடுக்க வானாம். அதுக்கு மேல வந்தா நாம் பாக்கிறது. இப்ப போறது கங்காணி" என்று பக்கத்திலிருந்து கணக்குப்பிள்ளைக்கும் "சலாம்" சொல்லிய பெரியசாமி கங்காணி படிகளை தாண்டிப் பாதையை அடைந்தார். அவரைப்பின் தொடர்ந்து ஒரு கூட்டமே அவரை சூழ்ந்துக் கொண்டது.

"என்ன கங்காணி ஐயா தொற சொன்னத நாங்களும் கேட்டுக்கிட்டுதான் இருந்தோம். எல்லாத்துக்கும் ஆமாப் போட்டு வந்திட்டீங்க தானே?" என்று ஒருவன் தலையையாட்ட, மற்றொருவன், "ஆமா ஐம்பது வருசமாத் தலைய சாய்ச்சுக்கிட்டு வேல செஞ்சது பத்தாதுன்னு, எங்கள வேற பயந்தாங்கொள்ளியாக்கீருங்க! போங்கையா, நீங்கள்ளாம் ஒரு கங்காணி, நாளைக்கு வேலக்காட்டுக்கு வாங்க பாத்துக்கர்றோம்," என்ற வார்த்தைகள் சவால்களுடடன் கூட்டம் ஆங்காங்கே பிரிந்து சென்றது.

தன் ஐம்பது வருட சேவையில் இத்தோட்டத்தையே உருவாக்கிக் குழந்தைபோல் வளர்த்துத் தன் இனசனங்களையே உரமாய்ப்போட்டு இன்று கம்பீரம் இழந்து தளர்நடை நடந்து இறைவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு செல்லும் பெரியசாமி போன்றோருக்கு, உண்மையில் சோதனைக்காலந்தான் பிறந்து விட்டதோ என்னவோ....? பாவம் அவர்தான் என்னசெய்வார், தோட்டத்துரைதான் என்ன செய்வார்?.................

தூக்கம் பிடிக்காத இராப்பொழுது புலர்ந்தது. பெரட்டுக் களத்தில், வழமைக்கு மாறாம் தேநீர் குடிக்காதவன் கூட தேநீர்ப்பையுடன் வந்திருப்பதைக் கண்ட கங்காணியின் மனம் சுரீரென்றது. அர்த்தம் பொதிந்த பார்வையை வீசிய கணக்கப்பிள்ளை ஐயாவிற்கு "செலாஞ்" சொல்லியவாறே வேலைக்கு ஆயத்தமானார் கங்காணி.

அன்று தேநீர் வேளை நெருங்குவதை பயத்துடன் எதிர்பார்த்து கொண்டிருந்த கங்காணி வழமைபோல் தனக்கும் வீட்டிலிருந்து தேநீர் வருவதைப் பார்த்து பெருமூச்செறிந்தார். தேநீரை வாங்கி அவசர அவசரமாக ரொட்டியை வாயில் திணித்துத் தேநீரை மடக்மடக்கென்று பருகி முடித்து வேலையைக் கவனிக்கலானார். ஆனால் வேலை செய்ய எவராவது எழும்பினாற்றானே? அனைவரும் ஆறுதலாக தேநீரை சுவைத்துப்பருகி, மெதுவாக பீடி பற்றவைத்துக் கொண்டிருந்தனர்! அதே சமயம் அங்கு வந்து தரித்து நின்ற துரையின் ஜீப் வண்டியை யாரும் கவனிக்காதது போலவே இருந்தனர். பெரிசாமி கங்காணி வேட்டியை சற்று இறக்கி விட்டுக்கொண்டார்.

ஆத்திரமடையத்தக்க ஆறுதலான இளைப்பாறல்களைக் கண்ணுற்ற துரையவர்கள் சீற்றம் கொண்டார். கங்காணியைக் கண்டபடி திட்டினார். தொழிலாளிக்கு வேலை தேவையில்லா விடில் வீட்டுக்கு போகுமாறு கட்டளையிட்டார்.

பொங்கியெழுந்த தொழிலாளர் வர்க்கம் அந்நியர் ஆட்சியில்தான்

அவர்களுக்குப் பயந்து மாடாய் உழைத்துங்கூட ஒருவித சுதந்திரமுமின்றி வாழ்ந்தனர். ஆனால் இன்று மலையக மாந்தர் நெருப்பிற்குள் வீடுகட்டுவதைப் போல் அன்னியராட்சியினின்றும் தப்பி உரிமைகளைப் பெற்ற வேளை மீண்டும் அதே ஜுவாலை தெரிகிறதே! தொழிலாளர் சமூகத்திற்கு மீண்டும் ஒரு அடக்குமுறையா? இந்த தொழிலாளர் வர்க்கமென்பது கடைசரக்கா? அல்லது களிமண் பொம்மைகளா? அவர்களுக்கென்று தேநீர் குடிக்கக்கூட நேரமில்லையென்றால் என்ன வாழ்க்கை இது? சுதந்திரம் என்ற பெயரில் முதலாளித்துவமா? இவற்றையெல்லாம் முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். தொழிலாளர் மனங்களில் சிந்தனையோட்டங்கள் கிளையாறுகளாய்ப் பரிணமித்தன.

"நாளைக்குத் தோட்டத்தில் ஸ்டிறைக் போடப்போறாங்களா, நான் என்னங்க செய்யிறது" என்ற பெரியசாமிக் கங்காணியின் வார்த்தைகளுக்கு, "நீயும் ஸ்டிறைக் போடு மேன்" என்ற சீறலுடன் ஜீப்பில் ஏறி விரைந்தார் துரை. அங்கு பறந்த புழுதி கூட்டத்திலிருந்தே துரையின் கோபாவேசம் புலனானது.

மறுதினம் காலை பெரட்டுக்களம் வெறிச்சோடிக் கிடந்தது. எதிர்ப்பு ஊர்வலங்கள், தோட்டத்து முனையிலிருந்து ஆரம்பமாகின. பல்வேறு உரிமை வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகள் உயர்த்திப் பிடிக்கப்பட்டன! கோஷங்கள் எழுப்பட்டன! ஊர்வலம் முன்னேற முன்னேற சனக்கூட்டம் அதிகரித்தது. முதியோரும் குழந்தைகளும் பார்வையாளர்களானார்கள். பெரட்டுக் களத்தில் நின்றுக் கொண்டிருந்த கங்காணியும் கணக்கப்பிள்ளையும் மௌனம் சாத்தித்தார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் ஆபீஸை அண்மித்தபோது இடையில் பெரட்டுக்களத்தில் நின்றுகொண்டிருந்த கங்காணி பலாத்காரமாக இழுக்கப்பட்டு ஊர்வலத்தின் முன்னணியிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஒதுங்கிவிட நினைத்த கங்காணியால் ஒன்றுமே

செய்ய முடியவில்லை.

சமயம் பார்த்து வந்தன துரையினதும் போலீஸ் மற்றும் நிறுவன முகாமையாளரினதும் வண்டிகள்! ஊர்வல முற்பகுதியில் சுலோக அட்டையுடன் நின்ற பெரியசாமி கங்காணியை கண்ணுற்ற துரை கண்களை அகல விரித்ததும் கங்காணி தலையை தாழ்த்திக்கொண்டார். கூட்டத்தை பார்த்து துரை பேசத் தொடங்கியதும் கூட்டம் அமைதியடைந்தது.

கடந்த இரண்டு மாதங்களின் முன்பு இத்தோட்டத்தை தனியார் கம்பனி ஒன்று பொறுப்பேற்றுக் கொண்டதையும் அந்தக் கம்பனி தன் இலாப நோக்கங் கருதி மட்டுமே செயற்படுவதால், தொழிலாளர் நலனை ஓரளவிற்கே கவனிக்க முடியுமென்றும், அதனாலேயே தேநீர் இடைவேளையையுங் குறைத்துள்ளதாயும் கம்பனி சொந்தக்காரர்களின் அபிப்பிராயத்தினையே தான் இங்கு கூறுவதாகவும் அவர்கள் கூறுவதுபோலவே தான் இந்நிருவாகத்தை நடாத்தவேண்டியுள்ளதாகவும் கூறி முடித்தார் துரை.

தொழிலாளர்களின் கோஷங்கள் வானைப் பிளந்தன. ஆனால் அந்த கோஷங்களால் எந்த வித பலனுமில்லையென்பது நன்கு தெளிவாகிவிட்டது. ஆம். அதிகாரம்! அதுவும் சர்வாதிகாரம்!! தொழிலாளர் தம் கோஷத்தினூடே இந்த வேலை நிறுத்தத்தைத் தொடரப்போவதாய் அறிவித்தனர். அந்த அறிவிப்புக்கு உடனேயே பதிலடி கிடைத்தது.

ஆமாம், தம் கட்டுப்பாட்டுக்குள் வேலை செய்ய விரும்பாதவர்களுக்குப் பதிலாக கூலியாட்களை அமர்த்தப்போவதாயும் இயன்றவரை ஆட்களைக் குறைப்பதால் தோட்டத்தை இலாபத்தில் கொண்டு செல்லலாமென்றும், கூறியதோடு நின்று விடவில்லை.

இவ்விடயத்திற்கு முன்மாதிரியாக இங்கேயே இப்போ ஓர் மாற்றத்தைக் கூறப்போவதாய் சொல்லி இந்த அறிவிப்பையும் தந்தனர். அவ்வறிப்பை கேட்ட ஒவ்வொருவர் தலையிலும் சம்மட்டி கொண்டு அடித்தாற் போலிருந்தது. ஆமாம்...... இவ்வளவு காலம் கம்பீரமாக கங்காணி உத்தியோகம் பாரத்த பெரியசாமி கங்காணி தன் கங்காணி வேலையை விட்டு விட்டு சாதாரண தொழிலாளியாக வேலை செய்ய வேண்டுமாம். பெரியசாமி கங்காணியின் இடத்திற்கு அவர்களின் அந்த நிறுவனப்பக்கத்திலிருந்து நாளைக் காளை ஆள் அனுப்பப் போகிறார்களாம்! இந்த கங்காணியின் பலஹீனத்தாலும் தூண்டுதலாலுமே இப்படி வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதாயும் இனிமேல் இதற்கெல்லாம் இடமில்லையென்றும் அறிவித்துவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றனர் துரைமார். ஒரு சனத்தானும் வாய் திறக்கவில்லை. துக்கத்தால் வெதும்பினர்.

"இரத்தமும் வியர்வையும் சிந்தியுழைத்து வளர்த்துவிட்ட இந்த தேயிலைச் செடிக்குத்தானும் நன்றியிருக்கமோ என்னவோ" என நினைத்தவாறே அவ்விடம் விட்டகன்றார் பெரியசாமி.

"என்ன செய்வது வயிற்றுப் பிழைப்பிற்காகவும் பிள்ளைகளை கல்விகற்கச் செய்வதற்காகவுமே இந்தத் துர்நாற்றம் பிடித்த கான்களை வழித்துக்கொண்டிருக்கின்றேன்,"............... என்று நினைத்தவர் அரசமர நிழல் ஒரு மணியைக் காட்டியதைக் கண்டு சுய நினைவு வரப்பெற்றவராய் தன்வேலையை தொடர்ந்தார்.

*குன்றின் குரல்*
*ஜுலை - 1993*

# செந்தாமரை

அன்று சனிக்கிழமை. காலையில் காய்கறித் தோட்டத்தில் சிறிது வேலை செய்துவிட்டு குளித்து, பகல் உணவை உண்டு, சற்று ஓய்ந்து மாலை மூன்று மணியளவில் வீட்டிலுள்ள தனது காரியாலயத்தில் சில கோவைகளை அடுக்கி வைத்துவிட்டு புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு செயலமர்வு நடத்துவது சம்பந்தமாக கல்வித் திணைக்கள உத்தியோகஸ்தர்களுக்கு ஆலோசணை வழங்குவது பற்றி சில திட்ட வேலைகளைச் செய்து கொண்டிருந்தார் கல்விப் பணிப்பாளர் பரசுராமன்

"தோட்டக்காரன் இருக்கிறானே, தோட்டத்துப் பராமரிக்க நீங்க எதுக்காக அந்த வேலையைச் செய்யிறீக?" யாரும் பார்த்தா என்ன நினைப்பாங்க"

என்றும் அவரது மனைவி கேட்டுவிட்டால் "யார் என்ன நினைத்தால் நமக்கென்ன இந்த மாதிரி வேலைகளைச் செய்தா உடம்புக்கு சிறந்த பயிற்சியாய் இருக்குமே"

என்று நாசுக்காக பதில் கூறிவிடுவார்.

வீட்டில் இருந்தாலும் தனக்கென ஒரு வேலைத்திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு ஓய்வின்றி தனக்குரிய வேலைகளைச் செய்துகொண்டேயிருப்பார்.

லீவு நாட்களில் சுவாரசியமான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதோ, ஏனைய நில செல்வந்தர்கள் கேளிக்கைகளில் பங்கு கொண்டு உல்லாச

வாழ்வு நடத்துவது போன்ற விடயங்களிலோ அக்கரை கொள்ளாதவர். உற்றார் உறவு முறை என்பவைகளெல்லாம் எட்டாத தூரமாய் இருந்தன அவருக்கு. எப்போதும் கருமமே கண்ணென்று கருதும் கண்ணியமிக்க ஒரு பெரிய மனிதன் அவர்.

மனைவி மரகதம் தேநீரையும் கொறிக்கும் சிறு உணவையும் அவர் முன்னிலையில் வைத்துவிட்டு கணவனை வழமையாய் அழைக்கும் பணியில் "ஐயா தேநீர் குடிங்க" என்று கூறிவிட்டு அவரது வேலைகளை குழப்ப விரும்பாது சென்றுவிட்டார்.

சிற்றுண்டியை சிறிது கொறித்துவிட்டு தேநீரைப் பருகிக் கொண்டிருந்த அவரிடம் அவரது மூத்த மகன் மேனன் ஓடி வந்து,

"அப்பா, யாரோ ஒரு பிச்சைக்காரக் கிழவன் நம்ம வீட்டு கேட்டுக்கருகில் வந்து நின்றுகிட்டு உங்க பேரைச் சொல்லி கேட்குறான் ............................ பா."

"யாரது? என் பெயரைச் சொல்லி கேட்கிறானா? எப்படி கேட்டான்?"

"பரசுராம் தம்பி இருக்கிறாரா ........................ப்பா........... ன்னு கேட்டான்." எனக்கு சரியான கோவம் வந்திருச்சி போடான்று வெரட்டுனேன் அ வெ.........ன் போகமாட்டேங்கிறாப்பா".

என் பெயரைச் சொல்லியழைப்பதாய் இருந்தால் யாராக இருக்கும் என்று யோசித்தவாரே வெளியே சென்று பார்த்தார்.

எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் ஒட்டிய கன்னம், எழும்பு கூடுகளின் வடிவத்தை எளிதாய் எடுத்துக் காட்டும் உடல் அமைப்பு, ஒளி குன்றிய கண்கள், இரண்டு மூன்று வாரங்கள் தொடர்ந்து சவரம் செய்யப்படாத முகம், தும்பைப் பூ மயிர்கள், தலையில் சுருண்டு ஒழுங்கற்றும் வளர்ச்சி குன்றி தலையோடு ஒட்டிக்கிடந்தன,

அழுக்குப் படிந்த சாரம், அவர் அணிந்திருந்த கமிசு கோடிட்டதானாலும் அழுக்கும், பல நாள் படிந்திருந்த கறைகளும் அக்கோடுகளை மங்கச் செய்திருந்தன.

"எங்கோ பார்த்த ஞாபகம்" யோசித்தவாறே நினைவை மீட்டிக்கொண்டிருந்தார் பரசுராமன்.

"என்னப்பா யோசிக்கிறீங்க, என்னத் தெரிலயா? நா............ நாந்தா ......ன் அழகமுத்து, வெள்ளவத்த பேக்கரியில் வேல செஞ்சேனே பரசுராம் தம்பி தானே நீங்க." இத்தனை வயதிலும் தெளிவாகக் கேட்டார் அந்தப் பெரியவர்.

பரசுராமன் அதிர்ந்து போனார். பிச்சைக்கார கோலத்திலிருந்த அந்த மனிதரை அப்படியே அணைத்துக்கொண்டார். அவரது கைகளைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்து வந்தார். வாசற்படியில் அவர்கள் நுழைந்ததுமே பரசுராமன் அந்தப் பெரிய மனிதரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி எழுந்தார். அவரது இரு கரங்களையும் அன்போடு பற்றிவந்து அப்படியே கதிரையில் அமரச் செய்தார்.

மனைவியும், க.பொ.த (உயர்தரம்) கற்றுக்கொண்டிருக்கும் அவரது மகனும், ஆண்டு ஒன்பதில் பயிலும் அவரது மகள் இந்துஜாவும் அறுவருப்புடனும் ஆச்சிரியத்துடனும் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காரணம் உறவு முறையென்று சொல்லிக்கொள்ள யாருமற்ற அநாதையென்று அவர்கள் யாவரிடமும் தன்னைப்பற்றி சொல்லி வைத்திருந்தார் பரசுராமன். இருந்தும் இவரது நற்குணத்தையும், உயர் நிலையையும் கண்ட மரகதத்தின் பெற்றோர் நிறைய சொத்துக்களுடன் பணிப்பாளர் பரசுராமனுக்கு மரகதத்தை திருமணம் செய்து வைத்தார்கள். மரகதத்தின் தந்தை கண்டியில் பிரசித்த பெற்ற ஒரு வர்த்தகர். நிறைய சொத்துக்களுக்கு அதிபதியாய் இருந்தார். பிறந்த

இடத்திலும் புகுந்த இடத்திலும் உயர்ந்த நிலையில் வளர்ந்து வந்த மரகதத்திற்கும், தற்போது அவரது பிள்ளைகளுக்கும் "இந்த ஏழை யார்" என்று அறிந்து கொள்வதில் பெரும் பரபரப்பும் அவசரமும் ஏற்பட்டது.

பத்து வயதுச் சிறுவன். தினமும் பாண் வாங்கும் கஸ்ரமர் அவன், வெள்ளவத்தையில் கடற்கரையை அண்மித்தாற்போல் ஒரு பெரிய பங்களாவில் எஞ்சினியராகவிருந்த ஒருவரின் பணக்கார குடும்பத்தில் வேலைக்காரச் சிறுவனாக இருப்பவன். அந்த வீட்டுக் குழந்தைகளை நேரத்திற்கு பள்ளியில் சேர்ப்பது, பாடசாலை முடிந்ததும் அவர்களை வீட்டுக்கு அழைத்து வருவது, பேக்கரிக்கு சென்று பாண் வாங்குவது மற்றும் சமையற்காரனுக்கு அவ்வப்போது உதவுவது இத்தியாதி பொறுப்பு அவனுக்கு. அது ஒரு சிங்கள குடும்பமாக இருந்தபடியால் மிகத் தெளிவாக சிங்களம் பேசக் கற்றுக் கொண்டிருந்தான் அத்தப் பையன். துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்தில் சிறைகைதியாக, இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்த அந்த பிஞ்சு உருவம் பேக்கரிக்கு வருவதால் அங்கு பாண் தயாரிக்கும் அழகமுத்துவுடன் பழக்கம் ஏற்பட்டு தினமும் அவனுடன் சிறிது அளவளாவி கேலி பேசி விளையாடிச்செல்லும் வழக்கம் அவனது எஜமானுக்குத் தெரியாத இரகசியம்.

ஆயினும், அழகமுத்து ஒரு தமிழன் என்ற விடயம் பையனுக்குத் தெரியாது. ஒரு நாள் அழகமுத்து சாமான் சுற்றுவதற்காக வாங்கப்பட்ட சில பழைய புத்தகங்களை மேசையில் வைத்து அடுக்கிக்கொண்டிருந்த வேளையில் ஐந்தாம் வகுப்பு 'பாலபோதினி' புத்தகத்தில் ஏடுகள் கிழிக்கப்படும் பக்கவாட்டில் வண்டுகள் சிறிது அரித்தும் இருந்ததை அவன் உற்று நோக்கினான். "நிலத்தைப் பண்படுத்தல்" என்ற பாடம் தென்பட எதையும் எதிர்பாராது விருட்டென்று அந்தபுத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். அடுத்தடுத்த பக்கங்களைப் புரட்ட தொடர்ந்து 'பஞ்சபாண்டவர்', எனது சுக துக்கங்கள், சிவனொளி பாதமலை" போன்ற பாடங்கள் தென்பட அவற்றை ஆவலுடன் வாசித்தான்.

ஒரு நாள் இன்ஸ்பெக்டர் வந்திருந்தருப்போ "சிவனொளி பாதமலை" பாடத்தை நன்றாக வாசித்ததற்காகத் தானே "மிகக் கெட்டிக்காரப் பையன்" என்று என்ன பாராட்டினாரு, வாத்தியாரய்யாவும் என்னைய நல்ல பிள்ளைன்னு சொன்னாரு, நா...... கணக்கு பாடத்திலயும், வாசிப்பிலயும் எல்லாப்பிள்ளைகளையும் ................ விட மாக்ஸ் வாங்கினேனுதானே பெரிய வாத்தியாரைய்யா என்னை மேடைக்கு கூப்பிட்டு என் தோளை தட்டி எல்லாத்தையும் கைத்தட்ட சொன்னாரு.

கூட்டாளி மாறு ராசு, வேலுசாமி, சுந்தரம், சங்கர் எல்லாரையும் இனி எப்ப பார்க்க போறேன். பள்ளிக்கூடம் விட்டேனா தட்டான் பிடிக்கப் போறது. சின்ன ஆத்துல மீன் பிடிக்க போவது இனிமே எப்ப போகப் போறேன்."

இப்படி அவன் எண்ணிய எண்ணமெல்லாம் ஏக்கமாய் மாறி அவன் கண்களிலிருந்து கண்ணீராய் கொட்டியது.

இதை அவதானித்த அழகமுத்து திகைத்தான் ........................ அவன் அருகில் வந்து "தமிழ் வாசிக்க தெரியுமா ஒனக்கு என்று கேட்டான்."

"ஆம்" என்ற அர்த்தத்தில் தலையை ஆட்டினான் சிறுவன்.
"எதுக்கு இப்ப அழுவுற?" அவன் பேந்த பேந்த விழித்தான்.
"நீ தமிழ் பொடியனா?"
தலையை ஆட்டி 'ஆம்' சொன்னான்.

"அட இவ்வளவு நாளா எங்கிட்ட சொல்லலியே. சிங்களம் கதைக்கவும் நீ சிங்கள பொடியன்னுல்ல இருந்தே....ன். ஒங்க அப்பா அம்மா ல்லா....ம் எங்கிருக்காங்க? "

ஆர்வத்தோடும், பரிவோடும் அடுக்கடுக்காய் அழகமுத்து கேள்விகளை கேட்டான்.

"எங்கப்பா தலவாக்கொல்லைலவுள்ள நெல்லிமல தோடத்துல இருக்காரு. எங்கம்மா செத்து போயிரிச்சி, எனக்கு ஒரு அக்கா இருந்திச்சி அதுவும் போனவருஷ...ம் வெறகு கொண்டு வரப்போனப்ப விழுந்து செத்து போயிரிச்சி."

"அடப்பாவமே! அவள்ளோ சீக்கிரமா ரெண்டு பேரும் போயிட்டாங்களா? அப்ப ஓங்கப்பாதா...ன் இருக்கிறாரே நீ எதுக்கு இங்க வந்த?"

சிறுவன் யோசித்தான். சோகம் அவனது முகத்தைக் கப்பிக் கொண்டது. பின் குழந்தைத் தனத்தில் கூடிய அனுபவத்தைக் கூறினான்.

"நாங்க இருக்கிற லயத்துக்கு அடுத்த லயத்துல ஒரு மாமா இருக்காரு. அவருக்கு கால் கொஞ்சம் கோணல். அவரு கல்யாணம் கட்டினாரு, அதுலருந்து உங்கப்பாவ அந்த பொம்பளையாள்கிட்டயே கதைக்கப் போவாரு. காசு இன்னும் சாமான் எல்லாம் கொண்டு போயி குடுப்பாரு. அத ஏன்னு எங்கம்மா கேட்டா அடிப்பாரு. சில நாளாகி வீட்டுக்கு வரமாட்டாரு. ஒரு நாளு குடிச்சிபுட்டு வந்தாரு வீட்டுக்கு சாமான் ஒன்றும் வாங்கிட்டு வரலாயான்னு எங்கம்மா கேட்டதுக்கு வயத்துல ஒதச்சாரு. அப்படியே எங்கம்மாவுக்கு வருத்தம் வந்து ஆஸ்பத்திரியிலிருந்து செத்துப்போயிருச்சி.

"நா........... அஞ்சாப்பு படிக்கிறப்ப எங்க தோட்டத்து தொரவுட்டு கூட்டாளி வீட்டுக்கு ஆள் கேட்டார்னு சொல்லி எங்கப்பா என்னைய இங்க கொண்டாந்து வுட்டாரு. நா........... வரமாட்டேன்னு அழுதே.......ன். தொரகிட்ட கெட்டபேர் எடுக்க ஏலாது, நீ போவாட்டி கொன்னுபுடு வே.........ன்னு சொல்லி பேசி கொண்டாந்து வுட்டாரு"

என்று தன் துயரக் கதையைக் கூறி முடித்தான். அழகமுத்து அதிர்ச்சி மேலீட்டால் சிறிது நேரம் மௌனமாய் அப்படியே நின்றார்.

"என் ரெத்தமெல்லா............ம் அப்படியே கொதிக்குது. ஓங்க அப்ப....ன் ஒரு மனுஷனா? முட்டாள் பய. ஒரே புள்ளய படிக்க வச்சி செல்லம் பார்காம அடிம வேலைக்கு அனுப்பிருக்கான். சீ....... மானங் கெட்டவன். கட்டிய மனைவி பரிதவிக்க விட்டுட்டு கண்டவளோட போன அயோக்கிய....ன் அநியாயமா ரெண்டு உயிர்கள கொண்ணுடானே"

என்று ஆக்ரோஷமாகப் பேசியவன் "சரி ஓங்கப்பா அந்த புது பொம்பளக்கிட்ட போறது அந்த கோணக்காலு பயலுக்குத் தெரியாதா?"

"தெரியும். அந்த மாமா பாவம் ஏதுவுஞ் சொன்னா அந்த மனுசி அந்த மாமாகிட்ட சண்டைக்குப் போயிருவது. அதனால அந்த மாமாவுக்கு சரியான பயம்." தொடர்ந்து பதில் அளித்தான் பையன்.

அதைக் கேட்ட அழகமுத்து பல்லை கடித்தவாறு "எனக்கு அந்த அறிவுகெட்ட பயல்களைப்பத்தி என்னா சொல்றதுன்னே தெரியல. சரி, அந்த கதைய வீசு." என்று பேச்சை மாற்றினான்.

"நானு அட்டன் பக்கந்தா...ன். எங்க மாமாதா...ன் என்ன வளத்தாரு படிக்கப் போகச் சொல்லி கண்டிப்பாரு; அடிப்பாரு; ஆனா நாந்தா..ன் கொழுத்துப் போயிட்டு படிக்க கள்ளம்டிச்சி ஆட்டம் போட்டேன்; அதுக்குத் தண்டனையா இப்ப இங்க வந்து அடுப்புல வேகுறேன். நீயுமுல்ல இங்க வந்துட்டே!"

என்று கூறி நிறுத்தியவன் "சரி" நாளைக்கு வா எனக்கு லீவு நாளுமிச்சத்த நாளைக்கு பேசிக்குவோ...ம் என்று கூறி பையனை அனுப்பி வைத்தான்.

பையனின் ஊர் பெயர் யாவற்றையும் அறிந்த அழகமுத்துக்கு அவன் மீது தன் இனத்தான் என்ற பிரிவும், அனுதாபமும் ஏற்பட்டது.

தன் உடன் பிறப்பாக அவனை ஏற்றான்.

மறுநாள் சிறுவன் வந்தான். மீண்டும் அவனைக் கேள்விக் கேட்டு குழப்பவிரும்பாது "ஒனக்கு வேனுங்கிறத கேளு; வாங்கித் தாரே...ன்" என்றான் கனிவாக.

"ஒன்று வேணாண்ணே"
"அப்ப ஏ..ன் அழுத?"

எம் படிப்ப கெடுத்து இங்கு கொண்டாந்து விடவும் கவலையாயிருக்கு"

"அப்ப ஒனக்கு படிக்க ஆசையா?"
"ம்" தலையை ஆட்டினான்.

இதைக்கேட்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாக "சரி பயப்படாத" நா சொல்றமாதிரி செய்யனும்" என்றான் அழகமுத்து.

"சரி என்றான்"

நீ வேல செய்யிற அந்த வீட்டுக்குகாரங்களுக்கு என்னை நல்லாத் தெரியும்..ம். அதுனால நா. வரமாட்டே....ன். எங் கூட்டாளி ஒருத்தென கிரான்பாஸ்ல இருக்கான். நீயிருக்கிற பங்களாவுக்கு அவன கூட்டிக்கிட்டு வர்றே..ன் அவன் என் 'மாமா' ன்னு சொல்லிப்புட்டு அவெ...ன் ஒண்ண கூப்பிடுறப்ப மாமாவோட போறேன்னு அழு "ஒன்ன வெளிய கொண்டாந்து எங்காவது பள்ளில சேர்த்துபுடுறே.....ன் சரியா"

ஒரு தகப்பனை போல் அழகமுத்து கூறிய வார்த்தைகளைக் கேட்டு சந்தோஷ மேலீட்டால் அதற்கு ஆமோதித்தான் பையன்.

நாடகம் பலித்தது. கட்டைப் பிரமசாரியான அழகமுத்து

பையனைக் கொழும்பிலுள்ள ஒரு ஆரம்பப் பாடசாலையில் சேர்த்தான். சேர்வுக்காசு ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று பாடசாலை நிர்வாகம் பணித்தபோது தன் முதலாளியிடம் கடனாக வாங்கி அந்தக் காசைக் கட்டியவன் தனது சம்பளத்தில் சிறிது சிறிதாகக் கழித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். தொடர்ந்து சொந்த சகோதரனைப்போல எண்ணி அவனது கல்விக்கு உறுதுணைப் புரிந்தான்.

சிறுவன் கல்வியில் சூரியனாகப் பிரகாசித்தான்; ஐந்தாம் வகுப்பிலும், எட்டாம் வகுப்பிலும் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் முதல் மாணவனாக சித்தியெய்தினான். அவனைப் பாடசாலை பாராட்டியது. றோயல் கல்லூரிக்குத் தெரிவானான். அங்கும் வகுப்பில் மிகக் கெட்டிகார மாணவனாகத் திகழ்ந்து உயர்தரப் பரீட்சையில் மிகவும் சிறப்பாக சித்தியெய்தி பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானான். அங்கு முதற் கலையில் தேர்ந்து பின் முதுமானிப் பட்டம் பெற்றான்.

சூழ்நிலைக்காரணமாக அடிக்கடி அழகமுத்துவைக் காண்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போனதுடன் ஒரு நாள் அழகமுத்துவைச் தேடிச்சென்றவனுக்கு அவன் அங்கே இல்லாமல் எங்கோ அனுப்பப்பட்டதாக கேள்விப்பட்டு மனவருத்தத்துடன் திரும்பினான். இன்று ஒரு கல்வி பணிப்பாளராக மனைவியும், மக்களுமாக சமுதாயம் போற்றும் ஒரு உயர்ந்த மனிதனாக நிறைந்த வசதியுடன் வாழ்ந்து வரும் சேற்றில் மலர்ந்த செந்தாமரை பரசுராமன். ஒரு பாடசாலை விளையாட்டுப் போட்டியிலே பிரதம அதிதியாக கலந்துக்கொண்டு உரையாற்றிய வேளையில் வெற்றிலை கூறு விற்கச்சென்ற அழகமுத்து அடையாளங்கண்டு பின்னர் அவரை தேடி வந்து சேர்ந்த விபரம் புரிந்தது.

''என்னங்க! சித்தபிரமை பிடிச்சமாதிரி அப்படியே உக்காந்திட்டிங்க மரகதத்தின் கேள்வி அவரது மௌனத்தை கலைத்தது.

"மரகதம்! அவர் தான் எனது தந்தை, தாய், என் பாதுகாவலர், இல்லை என்னை ஆளாக்கிய தெய்வம். இனிமேல் இவர் தான் இந்த வீட்டுக்கும் பாதுகாவலர் ஆவார்" உணர்ச்சிவசப்பட்டு பேசியதைக் கேட்ட மரகதம் திகைத்து நின்றார்.

இதுவரைக்கும் எனது இதயத்தை அலுத்திக்கொண்டிருந்த கவலை இன்றோடு மறைந்தது. "சரி எல்லா விபரங்களையும் அப்புறமா சொல்றேன். முதல்ல இவருக்கு குளிக்க தண்ணீர் வார்த்து சாப்பாட்ட கொடு, நா இவருக்கு உடுப்பு கொண்டு வர்ரேன்."

சொல்லிவிட்டு அலுமாரியில் சலவை செய்யப்பட்டு மடித்து வைக்கப்பட்டிருந்த அவரது சட்டை ஒன்றையும், வேட்டி ஒன்றையும் எடுத்துக் கொண்டு அப்புதியவருக்கு கொடுப்பதற்காக குளியலறையை நோக்கி நடந்தார் பரசுராமன்.

*குன்றின் குரல்*
*1999 ஜனவரி*

# நெத்திக்காசு

அந்த பிரிட்ஷ்காலத்து லயக்கூரைகளில் கவிந்திருந்த பனியை விடிகாலைப்பொழுது வெள்ளைப்புகைமண்டலமாக்கிக் கொண்டிருந்தது. லயங்களின் முன்காம்பராக்களில் கொழுந்துக் கூடைகள் கம்பீரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. லயங்களுக்குள்ளே உறங்கிக் கொண்டிருக்கும் ஜீவன்களின் வாழ்க்கையோடு இந்தக் கொழுந்து கூடைகள் கொண்டிருக்கும் பந்தம் என்ன இன்று நேற்று உருவானதா?

எங்கேயோ கூவிய சேவல்களின் கூக்குரலையும் மீறிப் பக்கத்துக் காம்பராக்களில் எழுந்த 'தடபுடா' சத்தம் ராசாத்தியை எழுப்பிற்று. முதல்நாள் மேல்பெரட்டுமலையில் ஏறி கொழுந்தெடுத்த அசதியும் குசினியில் ஈரவிறகுடன் போராடியதால் ஏற்பட்ட கண்ணெரிவும் அவளை இன்னும் கொஞ்ச நேரம் படுத்திருக்கக் கூறின. அந்த அசதியைப் பார்த்தால் ஆகுமா? தன்னோடு சேர்ந்த நான்கு ஜீவன்களின் வயிற்றைக் கழுவியாக வேண்டிய கட்டாயம் அவளை விருட்டென எழவைத்தது.

"ஏய் செல்லா, காமாச்சி எந்திரிங்க! ஸ்கோலுக்குப் போவாணமா?அப்படியே சின்னப்பயலையும் உசுப்பி விடுங்க."

ராசாத்தியின் குரல் கேட்டதும் அடித்துப் பிடித்துக் கொண்டு எழும்பினர் 'செல்லா' என அழைக்கப்பட்ட செல்வியும் காமாச்சி என அழைக்கப்பட்ட காமாட்சியும். இருவரும் பக்கத்திலிருந்த தோட்டப் பள்ளிக்கூடத்தில் முறையே மூன்றாம். முதலாம் ஆண்டுகளில் படிக்கின்றார்கள். எல்லோராலும் 'சின்னப்பய' எனச் செல்லமாக அழைக்கப்படுகின்ற குமரேசு இப்போதுதான் நான்கு வயதை முடித்திருந்தான்.

தாயோடு சேர்ந்து செல்லாவும் காமாச்சியும் காலைக்கடன்களை முடித்துக் கொண்டனர். குசினிக்குள் நுழைந்து அடுப்பை மூட்டி கேத்தலை ஏற்றிவிட்டு திரும்பிய ராசாத்தியின் பார்வையில் இன்னமும் படுக்கையில் இருந்து எழும்பாத குமரேசு தட்டுப்பட்டான்.

"ஏலே சின்னப்பய! இப்ப நீ எழும்பிறிய இல்லையா? தா பாரு அக்கா இரண்டு பேரும் ஸ்கோலுக்கு பொறப்பட்டாச்சு! அப்ப நீ படுத்தக் கெட! நாங்க கதவ பூட்டிக்கிட்டு போறோம்" என்றாள். பாய்ந்து எழும்பினான் குமரேசு. "அம்மா கதவ பூட்டிக்கிட்டு போனா நா எப்பிடி புள்ளக்காம்பராவுக்குப் போறதாம்?" என்ற யோசனையோடு கரித்துண்டை வாயில் தேய்ததப்படி வெளியே ஓடினான்.

சாயத்தண்ணி ஊற்றி முடித்ததும் ரொட்டித் தகரத்தை அடுப்பில் வைத்து ரொட்டியைத் தட்டிப் போட்டாள் ராசாத்தி. "செல்லா இந்த தேத்தண்ணிய தங்கச்சிக்கும் ஊத்திக் குடுத்திட்டு நீயும் குடி..! சின்னப்பய இன்னமுமா மூஞ்சி கழுவுறான்? அவனுக்குச் சட்டையப் போட்டுவிடு! புள்ளகாம்பாராவில அவன விட்டுப்புட்டுல நான் போவனும்?" ராசாத்தியின் குரலையடுத்து பள்ளிக்கூடத்துக்குத் தயாராகிவிட்ட செல்லா தம்பியை கவனிக்கச் சென்றால்.

செல்லாவும் காமாச்சியும் ரொட்டியைச் சுற்றி எடுத்துக்கொண்டு கையில புத்தகங்களைச் சுமந்தவாறு "அம்மா போயிட்டு வாறோம்" என்றபடி லயத்தை விட்டுக்கிளம்பும் போதுதான் குமரேசு தேநீர் குடிக்க உள்ளே நுழைந்தான். "தா பாரு வெரசுண்ணு ரொட்டியை தின்னுப்புட்டு பயணம் வையி" எனகுமரேசுவை அதட்டிய ராசாத்தி தனக்குள்ளாகவே "இன்னிக்கு எத்தனாம் நம்பரு மலையோ" என அலுத்துக் கொண்டாள்.

துண்டுச் சாக்கை இடுப்பில் வாகாய் கட்டி கொழுந்து கூடையின் பாரம் தாங்காது நைந்து போய் வெட்டுண்டு சிலுப்பிக்கொண்டுருந்த மயிர்கற்றைகளை ஒதுக்கி கொழுந்துக் கூடையைத் தொட்டு வணங்கி

விட்டு எடுத்துக் தலையில் மாட்டியப்படி வேலைக்குப் போகத் தயாராகி விட்டாள் ராசாத்தி.

"சின்னப்பய என்னடா செய்யுற இவ்வுளோ நேரமா?' ஏன் அவள் குரல் கொடுக்கவும் வெளியெ ஓடி வந்தான் குமரேசு . வாயில் ரொட்டித் துண்டைத் திணித்தப்படி புள்ளக் காம்பரா சகாக்களிடம் காட்டி மகிழவென தன் சொத்தாகக் கருதிய தட்டுமுட்டுச் சாமான்கள் அடங்கிய 'சொப்பிங் பேக்கை' கக்கத்தில் இடுக்கியப்படி நழுவிய காற்சட்டையை மேலே இழுத்துக் கொண்டு வந்து நின்ற மகனைப் பார்த்த ராசாத்திற்கு பாவமாக இருந்தது.

"என்ட ராசா! ரொட்டிய தின்னுப்புட்டு ஒரு வாய் தண்ணி குடிச்சுப்புட்டு வா! நா நிக்கிறேன்' என்றாள். அவசரமாக விழுங்கியப்படியே உள்ளே ஓடியவன் தண்ணீரை குடித்து விட்டு ஓடி வந்து "அம்மா சரியம்மா" என்றான்.

ராசாத்தியின் வேகமான நடைக்கு ஈடுக்கொடுக்க முடியாமல் பின்தங்கி விடுகிற குமரேசு தாயின் அதட்டலைத் தொடர்ந்து ஓடிப்போய் தாயோடு இணைந்து நடப்பதும் அப்புறம் வீதியில் காணுகிற சகல காட்சிகளிலும் மனம் ஒன்றிவிட மீண்டும் பின் தங்குவதுமாகச் சென்று கொண்டிருந்தான். பாதையில் போகின்ற வாகனங்கள், நாய், பூனை, காகம், குருவி, எறும்பு என்று எல்லாமே போய் மறைகின்ற வரை அவனது பார்வையும் கூடவே போகும். பாதையில் சாரி சாரியாகப் போகின்ற சீருடை அணிந்த பிள்ளைகளைக் கண்டதும் அம்மா என்றழைத்தப்படி ஓடிச் சென்று அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டான் குமரேசு. அடுத்து அவன் என்ன கேட்கப் போகிறான் என்பதை ஊகித்துக் கொண்ட ராசாத்தி அவன் பேசுவதற்கு இடம் கொடாமல் "டேய் சும்மா தொண தொணக்காம வா!" என அதட்டினாள். அவனா மசிகிறவன்? ஆம்மா நா.. நா எப்பம்மா ஸ்கோலுக்குப் போறது? என விடாப்பிடியாய் நச்சரித்தான் குமரேசு.

அவனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத தன் இயலாமையும் வேலைக்குச் செல்லும் நேரம் தாண்டி விட்ட எரிச்சலும் சேர்ந்து கொள்ள நின்று குமரேசுவை திரும்பி முறைத்தவள் அவனது முதுகில் ஒன்று வைத்து கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். பதில் கிடைக்காத சோகம் தாய் தன்னை அடித்து விட்ட கவலை இரண்டும் சேர குமரேசு அழுதபடியே தாயின் இழுவைக்கு ஏற்ப நடந்தான் இல்லை ஓடினான்.

அழுதபடியே இருந்த குமரேசுவை புள்ளக் காம்பராவில் விட்டு விட்டுச் செல்ல ராசாத்திக்கு கஷ்டமாய்தானிருந்தது. "அழாதேடா ராசா வேலைக்காட்டுக்கு போயிட்டு வாறப்ப உனக்கு மிட்டாயி வாங்கியாறேன்" என்றாள். அழுகை சற்றே மட்டுப்பட சந்தேகத்தோடு தாயை பார்த்தான் குமரேசு. "நெசமாத்தாண்டா" என உறுதி மொழி வாங்கி விட குமரேசு உற்சாகமாய் தாயை வழியனுப்பி வைத்தான்.

ராசாத்தி மேல் டிவிசனிலிருந்து இங்கே வந்து முருகையாவைத் திருமணம் முடித்தவள். அவள் இங்கு வந்தபோது தேயிலைச் செடிகள் எல்லாம் 'தளதள' என்றிருந்தன. செல்லாவும் காமாட்சியும் பிறந்த போது அவர்களது வாழ்வும் கூட 'தளதள' என்று செந்தளிப்பாய்தானிருந்தது. முருகையா இந்தத் தேயிலைகளோடு ஒன்றிப் போனவன். காலையில் எழும்பியதும் சிலருக்கு வெற்றிலையோ புகையிலையோ தேவைப்படுவது போல முருகையாவுக்கு கண்விழித்ததும் தேயிலைச் செடிகளை வருடி அதன் வாசத்தை நுகர்ந்தாக வேண்டும். இந்த புதமையான பழக்கத்தை ராசாத்தி கூட கேலி செய்வாள். "சக்களத்தியப் பாத்திட்டு வந்தாச்சா?" என்று.

ராசாத்தி குமரேசுவை உண்டாகியிருந்த போது இந்நிலமை மாறத் தொடங்கியது. அரசாங்கத்துக்கு சொந்தமாகவிருந்த அநேக தோட்டங்கள் தனியார் வசமாகிய போது நான்கைந்து மாதங்களிலேயே தோட்டத்து சனங்கள் வித்தியாசங்களை உணர ஆரம்பித்தனர். பாக்டரிக்கு வந்து சேருகின்ற கொழுந்துகளின் செழிப்பு குறைய

ஆரம்பித்தது. நிறையும் குறையத் தொடங்கியது. முருகையாவுக்கு தன் பிள்ளைகளையே வெட்டி கொல்வது போன்ற வேதனை கொழுந்துத்தூள் குறைய குறைய வேலைநாட்களும் குறையத் தொடங்கின. கணிசமாகக் குறைந்துப்போன வேலை நாட்கள் மேலும் குறைக்கப்பட்ட போது இயல்பாகவே முன்கோபகாரனான முருகையா கையில் பணப்புழக்கம் இல்லாமல் போன நிலையில் ஒரு நாள் கொதித்தெழுந்தான்.

"என்னப்பா நெனைச்சிக்கிட்டிருக்கீங்க நம்மள. நீங்க பாட்டுக்கு தோட்டத்துல லாபம் வருதுங்கிறத மட்டும் பாக்குறிங்க! தேயிலை செடிகளுக்கு ஒரம் போடணும். ஆத ஒழுங்கா கவனிக்கனுங்கறே எண்ணமே கிடையாது. அப்புறம் எப்படி கொழுந்து வரும்? கடேசில நம்ம வயத்தில அடிக்கிறீங்களே! தூளு எவ்வளவு கெடைக்குமுங்குகிறத மட்டும் கவனிச்சா போதாது. மொதல்ல செடிகளுக்கு உசிரு இருக்கானு பாருங்க" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

தன் குழந்தைகளின் பட்டினியை விட கொழுந்துகளின் கருகல் முருகையாவை மிகவும் பாதித்தது. முதன் முதலில் சண்டை போட்டு விட்டு வந்த அன்று ராசாத்தியிடம் சொன்னான். "ராசாத்தி நம்ம காலத்திலேயே இத்தன பாடா கெடக்குதே . நம்மங்க புள்ளங்க காலம் எப்படி இருக்கப் போகுது? இதுக கொழுந்தெடுத்து பொழச்சாப்பலதான்! ஏன்ன பாடுபட்டும் இதுகள படிக்க வச்சிடனும் ராசாத்தி! படிச்சாத்தான் இந்த ஒலகத்துல சீவிக்க முடியும்." தொடர்நதும் முருகையாவுக்கும் முதலாளிகளுக்குமிடையில் அடிக்கடி வாக்குவாதம் நடந்தது. ராசாத்தி தடுத்தாலும் கூட இது நடந்து கொண்டுதானிருந்தது.

குமரேசுவை பிரசவிக்கவென்று ராசாத்தியை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு விடைப்பெற்று வந்த முருகையா அடுத்த நாட்காலை பாதையோரத்தில் பிணமாய்க் கிடந்தான். "வமிசம் வளர ஆம்புள

புள்ள வேணும் ராசாத்தி" என ஆசையோடு கூறியவன் அக்குழந்தையின் முகம் பாராமலே கொலையுண்டு போனான். சின்னஞ்சிறுசுகளான செல்லாவும் காமாட்சியும் என்ன எதுவென்று புரியாத பதட்டத்தில் அழுதபடி இருக்க, பச்சிளங் குழந்தையின் வீறிட்டலையும் மீறிக் கதறினாள் ராசாத்தி. கொழுந்துகளையே தன் வாழ்க்கையாகக் கொண்டு அதற்காகவே உயிரை விட்டவனின் உடலின் மேல் விழுந்து அவர்கள் கதருகின்ற கோரத்தையும் அந்த தேயிலைக்கொழுந்துகள் பார்த்தபடி தான் இருந்தன.

பொலிஸ் அது இதுவென்று அலைந்ததில் ராசாத்தி கையில் இருந்த காசு காணாமல் போயிருந்தது. "போன மனிஷன் போயி சேர்ந்திட்டான். இனி பணத்த செலவழிச்சு அவ உசிரு திரும்பி வரவா போகுது? புள்ளங்கள காப்பாத்துற வழிய பாப்பியா..... அத விட்டுப்புட்டு" ஊர்ப் பேச்சின் நியாயம் புலப்பட ராசாத்தி தன்னைச் சுதாகரித்துக் கொண்டு நிமிர்ந்த போது தன் மூன்று குழந்தைகள் மட்டுமே தன் சொத்தாக மிஞ்சியிருப்பதை உணர்ந்தாள்.

ராசாத்தி வேலைக் காட்டுக்குப் போய் உழைப்பது வயிற்றைக் கழுவ சரியாயிருந்தது. கணவனின் விருப்பப்படி செல்லாவையும் காமாட்சியையும் பள்ளியில் சேர்ப்பித்து விட்டாள். நல்லவேளை புத்தகம், சீருடை என அரசாங்கம் உதவியதால் ராசாத்திக்கு அந்தச் செலவுகள் மிச்சம். ஆனாலும் கொப்பி, பென்சில் என்று பிள்ளைகள் கேட்கும் போது வாங்கிக் கொடுத்தாக வேண்டுமே? இந்த செலவே மூச்சு முட்ட வைக்க மூத்தவள் செல்லாவை பாடசாலையிலிருந்து நிறுத்தி விடும் யோசனையோடு ஒரு தடவை பள்ளிக்குப் போனவள் செல்லாவின் வகுப்பு ஆசிரியை கூறிய வார்த்தைகளால் செய்வதறியாது தடுமாறினாள். "வகுப்புல செல்வி ரொம்ப கெட்டிக்காரி அநியாயமா அவளோட படிப்பை வீணாக்கிடாதீங்க. மத்த புள்ளங்க மாதிரியில்லாம ஒங்க கஷ்டத்த அவ நல்லா தெரிஞ்சு வச்சிருக்கிறா. கொப்பி, பென்சில் எல்லாம் வீணாக்காம பாவிப்பா. தயவு செஞ்சு அவள வெலக்கிடாதீங்க." ராசாத்தி ஆசிரியை சொன்னதற்கு தலையாட்டினாள்.

புதிதாக முளைத்திருந்த இந்தப் பிரச்சினை தான் அவளைப் பாடாய்படுத்தியது. குமரேசு பள்ளிக்கு போக வேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருந்தான். அடுத்த வருடத்தில் அவனையும் பள்ளிக்கு சேர்த்தாக வேண்டும். ஆனால் "எப்படியும் மொதமாத ஸ்கோலுக்குப் போறப்ப போட்டுக்கிட்டுப் போறதுக்கு சட்டை, களுசான் தச்சாகணுமே! கொப்பி, பென்சிலு எல்லா கேப்பாங்களே, நா எங்க போவேன் காசுக்கு?" வயிற்றைப் பற்றி எரிகிற இந்த தீயிற்கு புள்ளக் காம்பராவுக்கு போகும் போது சின்னப்பய நெய்வார்ப்பான்."

ஒரு வாரமாய் ஊரே திமிலோகப்பட்டது. ஊரின் கண்ணாக விளங்குகின்ற மாரியம்மன் கோயில் திருவிழா. அந்தத் தோட்டப்பகுதிக்கே உரித்தான ஒரே கோயில் என்ற விதத்தில் அந்த தேர் திருவிழா ஊர்மக்களினால் மிக மிக விசேடமாகக் கொண்டாடப்பட்டது. சின்ன வாண்டுகளுக்கோ இனி இல்லை என்ற சந்தோஷம். விளையாட்டுச் சாமான்கள், தீன்பண்டங்களடங்கிய கடைகள்களை காட்டின. திருவிழா என்றதுமே பெற்றோர், உறவினர்கள் என்று 'சந்தோஷம்' கேட்டு சில்லறை சேர்ப்பார்கள். ஆனால் பாவம் குமரேசு, ஏன் செல்லாவும் காமாட்சியும் கூடத்தான். மற்றவர்களிடம் சில்லறை சேர்ப்பார்கள் மற்றவர்களிடம் சில்லறை குலுங்கும்போது இவர்களிடம் ஒரு செல்லாக் காசுகூட இருக்காது

"சாமி கும்பிட" என பிள்ளைகளோடு கோயிலுக்குப் புறப்பட்ட ராசாத்திக்கு மனசே சரியில்லை. கடவுளிடம் மனமுருக வேண்டினாள். "தாயே எங்கள சோதிச்சது போதும்மா. இனியாவது ஏங்குழந்தைங்க ஆசப்பட்டு கேக்குறத வாங்கிக் குடுக்கிற சக்திய மட்டுமாவது எனக்கு குடு!" கோயிலைச் சுற்றிக்கொண்டு வருகையில் கடைகள் நிறைந்த அந்தப் பகுதியைக் கடக்க ரொம்பக் கஷ்டப்பட்டாள் ராசாத்தி. செல்லாவும் காமாட்சியும் விபரம் தெரிந்தவர்கள். கடையிலிருக்கின்ற எல்லாப் பொருட்களையும் ஆசையாக பார்ப்பதோடு மட்டும் நிறுத்திக் கொண்டார்கள். ஆனால் குமரேசு நேற்றுப் பிறந்த கன்றுக்குட்டியாய்

துள்ளித் திரிந்தான். கடைகளிலுள்ள ஒவ்வொன்றையும் பார்ப்பதும் ஓடிவந்து அம்மாவிடம் ஒப்புவிப்பதுமாக இருந்தான். பார்த்த அத்தனை பொருட்களுமே அவனுக்கு வேண்டியதாயிருந்தன. "அம்மா அம்மா அந்த பெலூனை வாங்கித் தாங்கம்மா" என நச்சரிப்பான். பதிலே பேசாமல் நடப்பாள் ராசாத்தி. "அம்மா பெலூனில்லாட்டி பரவால்ல இந்த கார் பொம்மை நல்லாருக்குமா வாங்கித் தாறீங்களா?" எனக் கெஞ்சுவான். ராசாத்திக்கு கவலையில் உயிர் போனது ஆரம்பத்திலிருந்தே "அம்மா எதுவும் வாங்கித் தரமாட்டாள்" என உறுதியாய் தெரிந்து கொண்டு அமைதியாய் வருகின்ற செல்லா, காமாட்சி இருவரையும் விட நச்சரித்துக் கொண்டே வந்த குமரேசு தன் நப்பாசை அனைத்தும் உடைந்தவனாய் அமைதியாய் வரத் தலைப்பட்ட போது ராசாத்திக்கு செத்து விடலாமா? எனத் தோன்றியது. வீட்டுக்கு வந்த பின்பும் குமரேசு சரியாகவில்லை. அக்கம் பக்கங்களில் கேட்ட ஊதிச் சத்தமும் விளையாட்டுச் சாமான்களோடு சிறுவர்களின் கூச்சலும் அவனை ஏக்கப்பட வைத்தன. படுத்து உறங்கி விட்ட மகனின் கன்னங்களில் காய்ந்து போயிருந்த கண்ணீரின் தடம் ராசாத்தியின் நெஞ்சினைச் சுட்டது.

அடுத்த நாள் காலை எழும்பிய ராசாத்தி அந்தநாள் வயிற்றுப் பாட்டுக்கு என இறுக்கிப் பிடித்து வைத்திருந்த சில்லறைகளைப் பொறுக்கிக் கொண்டு கோயிற் பக்கமாக விரைந்தாள். வரும் போது அவள் கைகளில் ஒரு பை இருந்தது. "ஏய் சின்னப்பய எந்திரி! அம்மா என்ன வாங்கிட்டு வந்துருக்கேனு பாரு" என்றாள். எழும்பிய குமரேசுவின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. மலர்ந்த அவன் கோலம் கண்டு ராசாத்தியின் உள்ளம் நெகிழ்ந்தது. அவனை இழுத்து அணைத்துக் கொண்டவள் சொன்னாள் "ராசா! பெலூனு, பொம்ம எல்லாமே ஒடஞ்சு போயிடும் அதனால அம்மா ஒனக்கு இந்த காசு முட்டிய வாங்கியாந்தேன். இனிமே நீ ஒனக்கு கெடைக்கிற காசையெல்லா இதுல போட்டு சேக்கோணும். அப்பத்தான் நீ ஸ்கோலுக்குப் போறப்ப பொஸ்தவம், கொப்பி, கலரு எல்லா வாங்கலாம்" ஆசையோடு பக்கத்தில் வந்து நின்ற செல்லாவுக்கும்

காமாட்சிக்கும் கையோடு வாங்கி வந்திருந்த கலர் ரிப்பன்களையும் வளையல்களையும் கொடுத்தாள். குடும்பத்தின் அந்த மூன்று ஜீவன்களும் 'யானைப்பசிக்கு சோளப்பொரி' போல கிடைத்த இந்தக் பொருட்களால் தாம் பெரிய சொத்துக்கு சொந்தமாகி விட்ட பூரிப்பில் ஆழ்ந்து போயினர்.

அதன் பிறகு ஒரு வாரத்திற்கு குமரேசுவை அந்த 'காசுமுட்டி' யோடு தான் பார்க்க முடிந்தது. பிளாஸ்டிக்காலான வெள்ளையும் நீலமுமாகக் கோடுகள் போட்ட மேற்புறம் அழகான வளையுடன் காணப்பட்ட அந்த உண்டியலை குழந்தையைச் சுமக்கிறாற் போல் பவித்திரமாய் தூக்கிக் கொண்டு திரிந்தான். தோட்டத்து வேலை பார்த்தால் இனி வாழ முடியாது என ராசாத்தி புரிந்து கொண்டதால் பக்கத்து ஊருக்கு கூலி வேலைக்குப் போகத் தொடங்கினாள். தோட்டத்தில் வேலை செய்த நாட்கள் போக மற்றைய நாட்களில் ஏதாவது கூலி வேலை செய்து காசு புரட்டுவாள். உண்டியலை இடுக்கிக் கொண்டு திரியும் குமரேசுவின் தொல்லை பொறுக்க மாட்டாது வேலை முடிந்து வந்ததும் அவனுக்கென சில்லறை கொடுப்பதும் வழக்கமாயிற்று. எந்நாளும் இரவு படுக்கப்போகுமுன் உண்டியலைக் குலுக்கி அந்த இனிய ஓசையில் லயித்துப் போவான். "சின்னப்பய" ஏதாவது தீன்பண்டங்களை ராசாத்தி இருந்திருந்து வாங்கி வருகின்ற போது குமரேசு பேசுவான். "ஏம்மா இத வாங்காம காசா தந்திருந்தா நா காசு முட்டில போடுவேன்ல. அப்பத்தான் நா ஸ்கோலுக்கு போவ முடியும்" பெரிய மனிஷத் தோரணையில் அவன் பேசுகின்ற போது ராசாத்திக்கு முருகையாவின் ஞாபகம் எழும்.

ஓரளவு கஷ்டத்தைக் குறைக்க முடிந்த இந்த ஊதியத்தால் "பொம்புள புள்ளைங்களுக்குனு எதையும் சேத்து வைக்க முடியுதில்லையே" என்ற ஆதங்கம் ராசாத்தியிடம் ஏராளமாக இருந்தது. இதற்கிடையில் வேலைக்குப் போன இடத்தில் காலில் ஆணி ஒன்று குத்தியதைக் கவனத்திற்கெடுக்காமல் விட்டதில் மூன்று நாட்களாகக் காய்ச்சல். வேலைக்குப் போகாமல் படுத்து விட்டாள்.

குமரேசுவுக்குக் காசு சேர்ப்பதில் ஆர்வம் அதிகரித்திருந்த வேளையில் தாய் வேலைக்குப் போகாதது அவனுக்கு வருத்தத்தைத் தந்தது. "ஏம்மா வேலைக்குப் போவல?"என்றான். "காய்ச்சல் கெடக்குதடா, எப்புடி நா வேலைக்குப் போவேன்" என்றாள் ராசாத்தி. "அப்ப எனக்கு காசுமுட்டிக்குப் போட காசு தரமாட்டியா?" என அதிகாரமாக் கேட்க செல்லாவுக்குக் கோபம் வந்தது. "அடேய் அம்மாவுக்கு காச்சலா கெடக்குதேனு கூட பார்க்காம காசு கேக்கிறியா?" என அதட்டினாள். அவளை முறைத்துப் பார்த்தவன் வெளியே ஓடி விட்டான். தொடர்ந்து தாய் வேலைக்குப் போக முடியாமல் அரற்றியபடி படுத்துக்கிடக்கவே செல்லா, "அம்மா வாங்கம்மா ஆஸ்பத்திரிக்கு போயி மருந்து வாங்கியாறலாம்" என்றாள். "அதெல்லாம் வேணாம் செல்லா! ரெண்டு நாளு போச்சின்னா எல்லா சரியாயிடும்" என மறுத்து விட்டாள் ராசாத்தி.

எழும்பவும் முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தாயிடம் வந்தான் குமரேசு. "அம்மா! எனக்கு நீ காசு தந்து எத்தின நாளாச்சி? ஒரு காசாவது தாம்மா! காசு முட்டில காசு போட்டு ரொம்ப நாளாச்சில்ல," கெஞ்சினான். "சின்னப்பய! அம்மா என்னடா செய்வேன். ஏங்கிட்டா இருந்தா ஒனக்கு தராமலா இருப்பேன்? செத்தா நெத்திக்காசு வைக்கக்கூட ஏங்கிட்ட ஒத்த காசில்லடா" என வருத்தத்தோடு சொன்ன ராசாத்திக்கு ஏனோ கண் கலங்கியது. பார்த்துக் கொண்டிருந்த செல்லா தம்பியை மெல்ல அழைத்துச் சென்று "அம்மா பாவமில்லையா சின்னப்பய. இப்ப போயி அம்மாவ கஷ்டப்படுத்துரியே நல்ல பிள்ளையா போயி வெளையாடு" என அனுப்பி வைத்தாள்.

அன்று இரவு ராசாத்திக்கு ஜன்னி கண்டது. சுயநினைவில்லாமல் அவள் அரற்றிக் கொண்டிருந்ததைக் காணப்பொறுக்காமல் செல்லா பக்கத்து வீட்டுக்கு ஓடி சேதி சொன்னாள். அந்த நடுநிசியில் ஊரே ஓடி வந்தது. "ராசாத்தியை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவணும் யாராச்சும் போயி தலைவருகிட்ட சொல்லி தோட்டத்து லொறியை

கேக்கச் சொல்லுங்கப்பா'' என ஒரு பெரியவர் கூற தலைவரைக் காண ஒரு கூட்டம் போனது. ஆனால் லொறி கொண்டு வருவதில் ஏற்பட்ட தாமதம் ராசாத்தியின் உயிரைக் கொண்டு போனது. ஆம்! முதலாளிகளிடமிருந்து லாபத்தை எதிர்பாராமல் தம் உயிரைக் கொடுத்து உழைத்த ஜீவன்களின் ஜீவமரணப் போராட்டத்தின் போதும் உதவி செய்யாத அந்த முதலாளிகளுக்காக உழைப்பதைவிட உயிரை விடுவதே என ராசாத்தி நினைத்தாள் போலும்.

தந்தையையும் பறி கொடுத்து தாயையும் இழந்து நிற்கின்ற சோகம் தாங்காது தாயின் உடலில் விழுந்து கதறி அழுதனர். செல்லாவும் காமாட்சியும் இவர்களது துக்கத்தைக் கண்ட ஊரே கண்ணீர் விட்டது. தாயின் பிணத்தின் நெற்றியின் மீது "நெத்திக்காசு" வைக்கப்பட்ட போது செல்லாவுக்கு தாள முடியாமல் போனது. "தம்பி அம்மாகிட்ட காசு கேட்டு கரைச்சப்படுத்துவியே இனி என்னடா பண்ணுவ. யாருகிட்ட காசு கேக்கப்போற? நமக்கு இனி யாரிருக்கா?" கதறினாள் அவள். தனக்கு காசு தர யாருமில்லை என்ற எண்ணமே குமரேசுவுக்கு அழுகையை வரவழைத்தது.

ராசாத்தி தன் இறுதிப் பயணத்தை ஆரம்பித்தாள். மகன் குமரேசு முன்னால் 'தீ முட்டி' தூக்க செல்லாவும் காமாட்சியும் கதறிக் கதறி வழியனுப்ப, ராசாத்தி பயணமானாள். கூடவே சென்ற குமரேசுவுக்கு "அம்மா தனக்கு காசு தராமலே போய் விட்டாளே" என்பது தாள மாட்டாத கவலையைக் கொடுத்தது. "நா காசு கேட்டதால அம்மா செத்து போச்சோ" என்ற சந்தேகமும் இடையிடையே எழுந்தது.

சுடுகாட்டில் ராசாத்தியின் பிணம் இறக்கப்பட்டது. அப்போது அவளது நெற்றியிலிருந்து அந்த "நெத்திக்காசு" நழுவி குமரேசுவின் காலடியில் விழுந்தது. சட்டென்று குனிந்து அதை எடுத்த குமரேசுவுக்கு "அம்மா எனக்கு காசு தந்து விட்டாள்" என்ற சந்தோஷத்தில் அழுகை வந்தது. கதறிக் கதறி அழுத குமரேசுவை அடக்க வழி தெரியாமல் திணறியது கூட்டம்.

ஒருவாறு தாயின் சிதைக்கு தீ மூட்டி அவளை வழியனுப்பிவிட்டு ஆற்றில் மூழ்கி எழுந்த குமரேசுவின் பிடியினுள் அந்த நெத்திக்காசு பத்திரமாய் இருந்தது.

"எட்டுக்கு கும்பிடுவதற்காக செலவுக்கு அம்மா காசு வைத்திருக்காளா" என்ற பெரியவரின் கேள்விக்காக வீட்டிலுள்ள சகல சாமான்களையும் செல்லா புரட்டி எடுத்து விட்டாள். செல்லா வயதில் சிறியவளென்றாலும் மூத்தவள். ஆகையால் சில பொறுப்புக்கள் அவளுக்கு தானாகவே ஏற்பட்டிருந்தது. எட்டுக்கு கும்பிடுவதற்காக வீட்டில் இருந்த சில சாமான்களை விற்கலாம் என தீர்மானித்த போது தான் அந்த முடிவையும் எடுத்தாள் செல்லா.

அம்மா தந்த கடைசிக் காசை ஏனோ காசு முட்டியில் போட விரும்பவில்லை குமரேசு. அதைக் கவனமாக ஓரிடத்தில் ஒளித்து வைத்திருந்தான். அவன் யாராவது எடுத்து விடுவார்களோ என்ற பயத்தில் "பூனை தன் குட்டியைத் தூக்கிச் செல்வது போல" தன்னோடு எல்லா இடமும் எடுத்துச் செல்ல தொடங்கினான். எங்காவது விழுந்து தொலைந்து விடுமோ என்ற பயத்தில் காசு முட்டியிலேயே போட்டுவிடுவது எனத் தீர்மானித்து உள்ளே நுழைந்தவன், அடுத்தநாள் "எட்டுக்கு கும்பிடுவதற்காக" வாங்கி வைக்கப்பட்டிருந்த சாமான்களில் மோதிக் கொண்டான். தன் காசு முட்டியை எடுப்பதற்காக காம்பராவுக்குள் நுழைந்தவனின் கண்ணில் வெள்ளையும் நீலமுமாக கோடுகள் கேட்ட பிளாஷ்டிக்கிலான அந்த உடைந்த துண்டு பட்டுத் தெறித்தது!

*இன்னுமொரு காலடி 1998*
*மறுபிரசுரம் "கொழுந்து"*
*அக்டோபர் 1998*

8 ............................ரோஹினி முத்தையா

# சட்டி சுட்டுவிடும்

தேயிலை மலையிலிருந்து மாணிக்கம் தலைதெறிக்க ஓடி வந்தான்.

“நம்ம கன்னையாவ பாம்பு கடிச்சிருச்சி. புல்லு வெட்டிக்கிட்டு இருக்குறப்ப விரியன் கடிச்சிருச்சாம். பின்னால தூக்கிட்டு வாராங்க” என்ற மாணிக்கத்தின் பதற்றம் கேட்டவர்களையும் தொற்றிக் கொண்டது. அதற்குள் கன்னையாவை இருவர் சுமந்துவந்து அந்த எஸ்டேட்டின் வைத்தியசாலையில் கிடத்தினர். வைத்தியர் தேவையான முதலுதவிகளைச் செய்தாலும் உடனடியாக நகர வைத்தியசாலைக்குக் கொண்டு போகும்படி கூறிவிட்டார். அதற்குப் பிறகுதான் எல்லோரும் அங்குமிங்கும் ஓடுகிறார்கள்.

“ஐயையோ! தோட்டத்து லொறியும் காலயிலயே டவுனுக்குப் போயிருச்சே. இப்ப என்ன செய்கிறது” என எல்லோரும் பதறியபடி நிற்க, ஆபத்பாந்தவனாய் அத்தோட்ட முகாமையாளரின் கார் வந்து நிற்கிறது. காரின் பின் இருக்கையில் முகாமையாளரோடு அவரின் மனைவியும் அலங்கார பூஷிதையாய் அமர்ந்திருக்க டிரைவர் தலையை காருக்கு வெளியில் நீட்டி விபரமறிய விழைகிறான். அதற்குள் யாரோ நிலைமையை எடுத்துச் சொல்ல முகாமையாளரது மனம் கணக்கு போடுகிறது. பாம்பு கடித்தவனை காரில் ஏற்றினால் இவனுக்குத் துணையாக இரண்டு மூன்று பேர் வருவார்கள்; பிறகு நாம் கல்யாணத்திற்கு போன மாதிரிதான் என அவரது அன்பு மனைவியும் காதைக் கடிக்க, டொக்டரை அருகில் அழைத்து ஆங்கிலத்தில் ஏதோ கதைக்கிறார். டொக்டரும் கோயில் மாடாய் தலையை ஆட்டிக் கொண்டு நிற்க, புரியாத அவர்கள் பேச்சை வாய்பிளந்து கேட்டபடி கூட்டம் நிற்கிறது.

பேச்சு முடிய கார் 'விர்'ரெனப் பறக்கிறது. "அவுங்க அவசரமா போகணுமாம், போற வழியிலே எம்புலன்ஸ"க்கு சொல்லிட்டுப் போறாங்களாம்; அது வந்து ஏத்திகிட்டு போகும்; நோயாளிய எம்புலன்ஸ"லதானே கொண்டு போகணும்'' என டொக்டரும் முகாமையாளருக்கு சரியாய் தாளம் போடுகிறார். கூட்டம் எதுவும் செய்ய இயலாது முணுமுணுத்தபடி நிற்கிறது.

அந்த எஸ்டேட்! போக்குவரத்து மற்றும் எல்லா வசதிகளிலுமே பின்தங்கித்தான் இருந்தது. ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டும் தலைகாட்டும் பஸ் சில நாட்களில் அதுவுமின்றி காலை வாரிவிடும். எந்த வேலைக்கும் 'நடை'வண்டிதான். எஸ்டேட் தேவைகளுக்கென ஒரு வாகனம் வழங்கப்பட்டிருந்தது. அதைவிட பக்கத்து எஸ்டேட்டுக்கும் இதற்கும் என சேர்த்து ஒரு எம்புலன்ஸ் வழங்கப்பட்டிருந்தது. அதுவும் கூட பக்கத்து 'எஸ்டேட்'டின் பொறுப்புதான். பரம்பரையாய் அங்கு காலம் தள்ளுபவர்கள் கூட நடந்து போவது வருவதைத்தான் பெருமையாய் பீற்றிக் கொள்வார்களே தவிர இதைப் பற்றியெல்லாம் அவர்கள் அக்கறைப்பட்டுக் கொண்டதில்லை. இப்படி ஏதாவது அவசர சமயங்களில் மட்டும் தடுமாறுவார்கள்.

தோட்ட முகாமையாளர் சொன்னபடி ஒரு மணி நேரம் கழித்து கன்னையாவை ஏற்றிக்கொண்டு போக 'எம்புலன்ஸ்' வந்ததுதான் மிச்சம். பாதி வழியிலேயே கன்னையா தன் வாழ்வை முடித்துக்கொண்டார். இடுப்பிலொன்றும் வயிற்றிலொன்றுமாய் குழந்தைகளை சுமந்து கொண்டு கன்னையாவின் மனைவி கதறிய கதறல் சுற்றி நின்றிருந்தவர்களை யெல்லாம் உலுக்கியது. "அவசரத்துக்கு கூட உதவாத இந்த துரை எங்களுக்குத் தேவையில்லை'' என இளைஞர் பட்டாளம் வீராவேசமாய் முழங்கியது. கன்னையாவின் நல்லடக்கத்தைத் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். "இந்தத் துரையை அனுப்புற வரைக்கும் யாரும் வேலைக்குப் போவதில்லை. மனிதத்தன்மையில்லாத இவன் எங்களுக்குத் தேவையில்லை'' என கோஷமிட்டபடி முகாமையாளரது

வாகனம் செல்லும்போது கல்லெறிந்து தம் எதிர்ப்பைக் காட்டினர். அவர்களது. ஆவேசத்தைக் கண்டு முகாமையாளர் அரண்டு போனதால் சட்டப்படி தனக்கு பாதுகாப்பைத் தேடிக் கொள்கிறார். எந்நேரமும் போலீஸ் பாதுகாப்போடு பங்களாவினுள் அடைக்கலமானார். ஆவேசம் இருந்தளவு அறிவுபூர்வமாகச் சிந்தித்து செயலாற்ற முடியாத கூட்டம் மௌனமாய் தன் வேலை நிறுத்தத்தைத் தொடர்கிறது.

வேளா வேளைக்கு உணவு, உயர்ரக குடிவகை என உபசரிக்கப்பட்ட போலீஸாரும் முகாமையாளருக்கு விசுவாசமாய் உழைத்தனர். பற்றாக்குறைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு வேறு அறிவுரை வழங்கினர். "இந்த ரோட்டு செய்யணும்; ஸ்கூல் கட்டணும்னு முயற்சி செய்யாமே...... தேவையில்லாம ஏன் ஸ்டிரைக் பண்ணுறீங்க உருப்படியா எதையாவது செய்யப் பாருங்க" என சிங்களம் கலந்த அரைகுறை தமிழில் போலீஸார் மொழிந்தது சிலருக்கு உறைத்தது.

தொடர்ந்து ஒரு வார கால வேலைநிறுத்தம் சில 'பெரிசு' களை முணுமுணுக்க வைத்தது. வாரந்தோறும் புதன்கிழமை கிடைக்கும் அரிசி, மா என்பன அந்த வாரம் கிடைக்காது போனதால் பல தொழிலாளர் வீட்டு அடுப்படிகளில் பூனை உறங்கியது. 'பசி வந்திட பத்தும் பறந்து போகும்' என்பதை நிரூபிப்பதாய் பெரியவர்களின் அங்கலாய்ப்பு கேட்டது. "வாகனம் கெடைக்காமலா கன்னையா செத்தான்? இவன் விதி அவ்வளவுதான். பாம்பு படிச்சு சாகணும்னு அவன் தலையெழுத்து போய்ச் சேர்ந்தான்" என கிழவர்கள் முணு முணுக்க அவர்களுக்கு சார்பாக கிழவிகளும் தொண தொணத்தனர்.

"இப்ப இவனுங்க எல்லாரையும் பட்டினி போட்டு கொன்னுடுவாங்க போலருக்கே. புருசன பறிகொடுத்துட்டு இருக்கிற புள்ளதாய்ச்சிய காப்பாத்த நம்மளாவது நல்லாருக்க வேணாமா" என கன்னையாவின் தாயாரே புலம்பியபோது வேலைநிறுத்தம் செய்வோரின் மன உறுதி சிறிது ஆட்டம் கண்டது. "முப்பது நாளும் வேல செஞ்சே

வயிறார சாப்பிட முடியாது, இதுல வேல ஸ்டுரைக்கு அது இதுன்னு......." என மூலைக்கொருவராய் முனங்கியது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த இளைஞரையும் மனம் மாற வைத்தது.

வேலைநிறுத்தம் செய்வது வரி, ஆனால் சாப்பாட்டுக்கு என்ன வழி, ஒவ்வொரு நாளும் வேலை செய்தால்தானே சம்பளம்..... இப்போதே ஆறு நாட்களாய் வேலையில்லை. ஒரு நாளைக்கு எழுபத்து ரெண்டு ரூபாபடி இப்போதே எவ்வளவு நட்டம்? என ஒவ்வொருவரும் மனக்கணக்கு போட ஆரம்பித்தனர். தங்களுக்குள் தளர்வடைந்தாலும் வரட்டுப் பிடிவாதத்தில் பெரியவர்களைக் கடிந்து கொண்டனர். முக்கியமாய் மாணிக்கம் வெகுமும்முரமாய் கோஷமிட்டான்; போஸ்டர்கள் எழுதினான் என்றாலும் வருமானமில்லாத அவர்கள் வாழ்க்கை அவர்களைத் தளர வைத்தது.

உயரதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையிலும் ஒரு முடிவு கிடைக்காது காலதாமதம் ஏற்பட்டபோது பட்டினி பலரையும் தாலாட்டத் தொடங்கியிருந்தது. அடுத்த வாரமும் அரிவி, மா கிடைக்காத நிலைமை அவர்களால் சமாளிக்க முடியாதளவுக்குப் போனதால் வேலை நிறுத்தம் புஸ்வாணமாய் போனதுதான் மிச்சமானது. மறுபேச்சின்றி தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு மீண்டும் வேலை செய்யக் கிளம்பியபோது தோட்ட முகாமையாளர் வெற்றிப் புன்னகை செய்தார். நியாயம் அவர்கள் பக்கமிருந்தும் அதை நிலைநாட்ட முடியாதவர்களாய் அவர்கள் நின்றபோது பரிதாபப்படத்தான் முடிந்தது.

நியாயம் பேசினால் தாங்களும் தோட்ட முகாமையாளரின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் உத்தியோகத்தர்களும் உள்ளுக்குள் நத்தையாய் சுருண்டனர்.

யார் வாழ்ந்தாலும் எவர் தாழ்ந்தாலும் காலம் தன் கடமையில்

தவறுவதே இல்லை. நாட்களை வாரங்களாய் மாதங்களாய் விழுங்கி விட்டிருந்தது.

அடுத்த சில மாதங்கள் அமைதியாய் கழிந்தாலும், வேலை நிறுத்தத்தில் மும்முரமாய் செயற்பட்டவர்களின் மேல் தோட்ட முகாமையாளர் ஒரு கண் வைத்தே இருந்தார். அதற்கு ஒரு சந்தர்ப்பமாய் அந்த ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால், அநேகமானோர் நகரத்தை நோக்கிப் படையெடுத்திருந்தனர். அன்றும் டொக்டர், நர்ஸ், டிரைவர் என எல்லோரும் எஸ்டேட்டை விட்டு வெளியேறிவிட்ட நிலையில் மாணிக்கத்துக்கு சோதனை மனைவியின் மூலம் வந்தது. பிரசவ வேதனையில் துடித்த மனைவியைப் பார்க்க மருத்துவர் இல்லாது திண்டாடிப் போனான் மாணிக்கம். நகர வைத்தியசாலைக்குப் போக வாகனமிருந்தும் டிரைவர் இல்லாது போனதுதான் சோதனையானது.

பக்கத்து எஸ்டேட்டிலுள்ள எம்புலன்ஸுக்காக அவசர செய்தியனுப்புவதென்றாலும் தொலைபேசி என்பதெல்லாம் இன்னும் அங்கு அறிமுகமாகாத ஒன்று. வாகனம் என்பது தோட்ட முகாமையாளரிடம் மட்டுமே இருந்ததால் பரபரத்து ஓடி நிலைமையைப் பதறியபடி விளக்கினான் மாணிக்கம்.

அமைதியாக செவிமடுத்தவர் சாவதானமாய் கூறிய பதில் மாணிக்கத்துக்கு வெந்த புண்ணில் வேல் பாச்சியது போல் இருந்தது. "காருதானே வேணும்?" எடுத்துக்க டிரைவர் லீவுல போய்ட்டான். நாளைக்குத்தான் வருவான்" என அவர் கேலியாகச் சிரித்தபோது, அவர் அவனைப் பழிவாங்கி விட்டது. மாணிக்கத்துக்கு மட்டுமல்ல உடன்வந்தவர்களுக்கும் கூட புரிந்தது. ஆனால் எதுவும் செய்ய இயலாத கையாலாகாத்தனத்தோடு அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

ஐந்து மைல் தொலைவிலிருக்கும் அடுத்த எஸ்டேட்டுக்குப் போய் எம்புலன்ஸைக் கொண்டு வரும்வரை கூட அவள் தாக்குப் பிடிக்கமாட்டாள் என்பது தெரிந்தும் கடைசி முயற்சியாய் அங்கும் இருவர் ஓடினர். அவர்கள் திரும்பும் முன், எதுவும் முடியாது எல்லோரும் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே தாயும் சேயும் கண்களை நிரந்தரமாய் மூடிக்கொண்டனர்.

"இதுதான் நான் அன்னைக்கே அவனுக்கு சொன்னேன். துரையை பகைச்சுக்காதடா ஒரு நாள் இல்லேன்னா இன்னொரு நேரத்துக்கு அவரு ஒதவி நமக்கு தேவப்படுமுன்னு தலையால அடிச்சிகிட்டேன் கேட்டானா?" என இறந்து போன கன்னையாவின் தந்தையே நாக்கில் நரம்பின்றி விமர்சித்தபோது மாணிக்கத்துக்கு 'சுருக்'கென்று தைத்தது. இவர்களுக்காக அவரை பகைத்துக்கொண்டது முட்டாள்தனமாகப்பட்டது. பற்றாக் குறைக்கு கன்னையாவின் மனைவி வேறு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தாள். "அவரு போய்ட்டாலும் இந்த மகராசன் தொரையால நானும் புள்ளைகளும் ஒரு கொறையுமில்லாம இருக்குறோம்." என முகாமையாளரை வாயார வாழ்த்தியது மாணிக்கத்துக்கு எரிச்சலாய் இருந்தது. அவளுக்கென்ன? பிள்ளைக் காப்பகத்தில் வேலை கிடைத்தது வசதியாய் வாழ வைக்கிறது. அவரவர்க்கு வசதி கிடைத்த பிறகு மற்றதெல்லாம் இரண்டாம் பட்சமாகி விடுவது மாணிக்கத்துக்கு அப்போதுதான் புரிந்தது.

மாணிக்கத்தின் மனைவியை அடக்கம் செய்யும்போதே அவனைச் சேர்ந்தவர்கள் கொதித்தார்கள். "இதோட எத்தன முற தொர அவனோட பணக்கார திமிர காட்டிட்டான்! இந்த முற அவனை வெரட்டாம விடுறதில்லை. பட்டினி கெடந்து செத்தாலும் பரவாயில்லை. அவன் போறவரைக்கும் ஸ்டுரைக்கு" பண்ணனும் என வீரமுழக்கம் செய்ததைப் பார்க்க மாணிக்கத்துக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது. இந்தக் கொதிப்பு எத்தனை நாளைக்கு? ஒரு வாரத்துக்கோ

அல்லது ஒரு மாதத்துக்கோ இருக்கும். வசதி கிடைத்தவுடன் கண்ணையாவின் மனைவி போலவோ தந்தையைப் போலவோ நாக்கு நாலா பக்கமும் புரண்டு பேசும் என நினைக்க வெறுப்பு வந்தது.

சிந்தித்துப் பார்த்ததில் அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை எனத் தோன்றியது.

பணம், படிப்பு, பதவி என எல்லா வகையிலும் உயர்ந்தவர்களால் எதையும் சாதிக்க முடிகிறது. ஆனால் படிப்புமில்லாது, உழைத்தால்தான் ஒவ்வொரு நாளும் உணவு என வாழ்க்கையை ஓட்டும் தொழிலாளர் வர்க்கம் என்ன செய்யும்? எல்லோரும் ஒரே நோக்கில் ஒற்றுமையாய் இருந்தாலாவது எதையாவது சாதிக்கலாம். ஆனால் அதற்கும்தான், ஒன்று மேட்டுக்கிழுத்தால் மற்றது பள்ளத்துக்கிழுக்கும் போது என்ன செய்வது?

இதெல்லாம் அந்த நேரத்துக்கு உழும்பும் கொதிப்பு, அது உடனே அடங்கிவிடும் அல்லது அடக்கப்பட்டு விடும் என்பது புரிந்தவனாய், வேலை நிறுத்தம் செய்யத் திட்டமிட்டிருக்கும் கூட்டத்தினின்றும் விலகி நடக்கிறான் மாணிக்கம்.

*கலை ஒளி முத்தையாப்பிள்ளை*
*நினைவுச் சிறுகதைப் போட்டியில்*
*பரிசுப் பெற்றகதை - 1994*

9 .........................சுகந்தி வெள்ளையகவுண்டர்

# விடியல் எப்போது?

காலை சூரியன் முகிற் போர்வைக்குள் இருந்து சோம்பலாய் எட்டி பார்த்தான். தேயிலை தளிர்களில் வெண்பனி முத்துகளை வானமங்கை இறைத்து விட்டிருந்தாள். சில்லென்று வீசிய காற்றில் யூக்கிலிப்பிட்ஸ் மரங்களின் வாசனையும் சேர்ந்து வீசியது.

"சரசு அப்ப நா மலைக்கு போறேன். ஒன்பது மணிக்கு தேத்தண்ணி கொண்டு வந்துரு. தம்பி பயலை தனியா வுட்டுட்டு நீ எங்கெட்டும் புள்ளைகளோடு வெளையாட போயிராத. வீட்டையும் கவனமாக பார்த்துக்க என்னா."

இப்படி அடுக்கடுக்காய் வந்த கட்டளைகளுக்கு சரி சரி என்ற பாவனையில் தலையாட்டினாள் சரசு. சரசுக்கு ஐந்து வயதுதான் ஆகிறது. எண்ணையே கண்டிராத பரட்டைத் தலையும், எப்போதும் ஒழுகிக் கொண்டிருக்கும் மூக்கும் சரசு இன்னும் தனது தேவைகளை நிறைவேற்றி கொள்ள தெரியாத சின்னவள் என்பதை தெளிவாக்கி கொண்டிருந்தது.

"அப்ப நா போயிட்டு வாரேன், தேத்தண்ணி கொண்டு வர மறந்துறாதே" என்று கூறியபடி குறுக்குப்பாதையில் இறங்கி மலையை நோக்கி நடக்கத் தொடங்கினான் மூக்கன்.

தந்தையின் தலை எப்போது மறையும் என்று பார்த்துக் கொண்டிருந்த சரசு "ஏ சின்னபொண்ணு வா மாங்கொட்ட எத்தி வெளையாடலாம்" என்று அடுத்த வீட்டுச் சிறுமியை அழைத்தாள்.

பாதையின் ஓரத்தில் தன்னிச்சையாய் வளர்ந்திருந்த மூக்குத்தி

பூக்களும், மஞ்சள் பூக்களும் பனித்துளியில் ஒளிந்து பளிச்சென்றிருந்தது. பாதையொட்டி சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் ஓடையில் நண்டுகளும் தவளைகளும் துள்ளிகொண்டிருந்தன.

ஆனால் மூக்கையனின் மனமோ இவ்வற்புதக் காட்சிகளில் படியவில்லை. சோகம் அவன் மனதில் மண்டிக்கிடந்தது. துாரத்தே தெரிந்த தேயிலை மலையில் பெண்கள் கொழுந்து பறிப்பது தெரிந்தது. இப்பெண்களை பார்க்கும் போது தன் மனைவியின் முகமும் அவன் மனத்திரையில் வந்து நிழலாடியது.

ராமாயி அன்றும் வழமைபோல் காலையிலே எழுந்த கணவனின் தேவைகளை நிறைவேற்றி தனது பிள்ளைகளான சரசு, ராமு இருவரையும் பிள்ளை மடுவத்தில் விட்டுவிட்டு மலைக்குப் போனாள். மூக்கனுக்கு அன்று கவாத்து வெட்டும் வேலை ஒரு திரை வெட்டி நிரை தேயிலையை வெட்டுவதற்குக் குனிந்தபோது, அடுத்த நிரையில் கவாத்து வெட்டிக்கொண்டிருந்த ராமையா, "மூக்கையா அண்ணே அங்க பாருங்க நம்ம சின்னதம்பி மாதிரி யாரோ பனிய ரோட்டுல ஓடி வாராங்க" என்றான். "அட நம்ம சின்னதம்பிதான், ஏ இப்படி மூச்சிரைக்க ஓடி வாரான்" என்று கேள்விக் குறியோடு பனிய ரோட்டை நோக்கினான் மூக்கன்.

ஓடி வந்த சின்னதம்பி மூக்கன் அருகில் வந்து "அண்ணே ஓங்க பொஞ்ஞாதி ஒம்பதா நம்பர் மலையில் கொழுந்து எடுக்கையில் மயங்கி விழுந்து பேச்சி மூச்சில்லாம கெடக்கையும் ஆளுகயெல்லா வீட்டுல துாக்கி வந்து போட்டு இருக்காங்க" என்று மூச்சிரைக்கக் கூறினான். இதைக் கேட்ட மூக்கனுக்கு மனம் பதறியது. "ஐயோ ராமாயிக்கு என்னாச்சு" என்று அரற்றியபடி ஓட்டமும் நடையுமாக வீட்டையடைந்தான்.

அங்கே லயத்தில் மூக்கன் வீட்டு வாசலில் முன்னால் வேடிக்கை பார்ப்பதற்காக ஒரு கூட்டம் குழுமியிருந்தது. மூக்கன் அந்தக் கூட்டத்தை

விலக்கிகொண்டு வீட்டினுள் நுழைந்தான். அங்கே ஸ்தோப்பு என்று சொல்லப்படும் முன்னறையில் ராமாயியை ஒரு சாக்கில் கிடத்தியிருந்தார்கள். மூக்கன் அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டு "ராமாயி ஒனக்கு என்னாச்சு? காலையில கூட நல்லாதானே இருந்த" என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டான். ராமாயிக்கு மயக்கம் தெளிந்திருந்தாலும் கண்கள் விட்டத்தை வெளித்து நோக்கியபடி இருந்தன. வாய் ஏதோதோ உளறியபடி இருந்தது.

"அது ஒன்னுமில்லப்பா. ராமாயி எதையோ பாத்து பயந்துருக்கு. நம்ம பூசாரி முனியாண்டிய கூப்பிட்டு விபூதி புடிச்சு போட்டா எல்லா சரியாயிரும்" என்றாள் பக்கத்தில் அமர்ந்திருந்த நல்லம்மா கிழவி. சுற்றியிருந்த பெண்கள் கூட்டத்திலும் இந்தக் கருத்து ஆமோதிக்கப்பட்டது. மூக்கையனுக்கும் நல்லம்மா கிழவி சொல்வது சரியென்றே மனதுக்குபட்டது.

அன்று இரவு மூக்கையன் வீட்டில் ஓர் இறையில் பெண்களும், ஆண்களுமாக ஏழு எட்டு பேர் அமர்ந்திருந்தார்கள். நடுவில் ராமாயியை படுக்க வைத்திருந்தார்கள். முனியாண்டி பூசாரி அவள் அருகில் அமர்ந்து கொண்டு "டுண், டுண், டுண், டுண்....." என்ற தாள ஒலிக்கேற்ப உடுக்கையை அடித்தபடி தலையை முன்னும், பின்னும் வெட்டி வெட்டி இழுத்தும் கழற்றியும் அருள் ஆடினார். அவரின் முன்னால் ஒரு தட்டில் விபூதியும் அதன் பக்கத்தில் எழுமிச்சைப் பழமும் இருந்தன.

முனியாண்டி பூசாரியின் அருள் ஆட்டத்தை சுற்றியிருந்தவர்கள பயபக்தியோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

நேரம் ஆக ஆக பூசாரியின் அருள் ஆட்டமும் உடுக்கை சத்தத்தின் வேகமும் கூடிக்கொண்டே சென்றது.

பக்கத்தில் இருந்த சன்னாசிக் கிழவர் "இப்படி ஆடிக்கிட்டிருந்தா எப்புடி நீ யாரு காடனா, மாடானா, வெள்ளாவி கருப்பனா இல்ல

ரோத முனியா சொல்லு", என்று அதட்டினார்.

ஏய் என்னையாடா யாருன்னு கேக்கிற? "நா தாண்டா மாடசாமி" என்று அருள் ஆட்டத்தினூடே கூறினார் பூசாரி.

மூக்கனும் சுற்றியிருந்தோரும் தங்கள் குலதெய்வம் மாடசாமிதான் பூசாரியின் மேல் வந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டனர்.

"ஆ உன்ன பாத்துதான் ராமாயி பயத்துருக்கா நீ எதுக்காக இங்க வந்துருக்க, உனக்க இஷ்டமானதை வாங்கிதாரன் கோழியா, கெடாவா, கள்ளா, சாராயமா, இல்ல பட்டுதுணியா என்னா வேணும் கேளு என்றார் மீண்டும் சன்னாசி கிழவர்."

"டேய் எனக்கு பச்சை முட்டையும், வெட கோழியும் படைச்சியின்னா நா போய்யிருவண்டா! இல்லேன்னா இந்த பெண்ண விட்டு நா கொண்ட இட சேரமாட்டேண்டா" என்று கோபக்குலலோடு கூறியபடி பக்கத்தில் வைத்திருந்த எலுமிச்ச பழத்தை எடுத்து வாயில் வைத்து நரநரவென்று கடித்தார் பூசாரி.

உடனே சன்னாசி கிழவர், சாமி மலையேறப்போகுது என்று கூறியபடி விபூதி தட்டை எடுத்து பூசாரியிடம் கொடுக்க அவர் அருள் ஆடிக்கொண்டே விபூதியை பிடியாய் அள்ளி ராமாயியின் தலையில் போட்டார். பின்னர் சிறிது சிறிதாக அவரின் அருள் ஆட்டம் தணிந்தது. சுற்றியிருந்தவர்களும் அவரிடம் விபூதி வாங்கிக் கொண்டார்கள்.

மற்ற நாட்களில் இந்நேரமெல்லாம் சாராய தவறணையில் போய் தண்ணி அடித்துவிட்டு அங்கேயே விழுந்து கிடக்கும் ஆண்களில் பூசாரியும் ஒருவர் என்று அங்கு கூடியிருந்தவர்கள் அறிந்தவர்களாயினும், இந்த சமயத்தில் பூசாரி அவர்கள் கண்ணுக்கு நடமாடும் தெய்வமாகத் தெரிந்தார்.

சன்னாசி கிழவர் தொண்டையை செருமிக் கொண்டு "ஏம்ப்பா மூக்கா, நம்ம குலதெய்வம் மாடசாமிதா வந்துருக்கு. அது கேட்டத நாம குறைவில்லாம செஞ்சா அது பெரிய மனசு பண்ணிப் போயிரும். அதனால நாளைக்கு நீ டவுனுக்கு போயி பூசாரி எண்ணென்ன சாமான் செல்றாறோ அதெல்லாம் வாங்கிட்டு வந்துரு என்னா" என்றார். பூசாரி சொல்லும் சாமான் பட்டியலில் சாராயமும் இருக்கும், அதில் நமக்கும் ஒரு பங்கு கிடைக்கும் என்று மனத்தினுள் நினைத்துக்கொண்டார்.

மூக்கனும் "சரி அப்படியே செஞ்சிறேன்" என்றான்.

அடுத்த நாள் காலை "ராமாயி எழுந்திருச்சி இந்த தண்ணிய குடிபுள்ள நேத்துலோ்ந்து நீ ஒன்னுமே சாப்புடல" என்று கூறியபடி ராமாயியை எழுப்பிய மூக்கனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

"ஐயோ ராமாயி எங்களையெல்லாம் அனாதையாக்கிட்டு போயிட்டியா" என்ற மூக்கனின் அலரல் அந்த லயத்தை ஒட்டியிருந்த தேயிலை மலைகளில் பட்டு எதிரொலித்தது. மூடநம்பிக்கை ராமாயியின் உயிரை மட்டும் குடித்ததோடு ஓய்ந்து விடுமா? காலம் தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும்.

*கலைஒளி முத்தையாபிள்ளை*
*நினைவுச் சிறுகதைப் போட்டியில்*
*பரிசு பெற்றகதை - 1994*

**10**..............................செ. கோகிலவர்த்தனி

# பென்ஷன்

ராசம்மா!

வேலைவிட்டு வந்த அவள் காலையிலிருந்து இவ்வளவு நேரமும் முதுகில் சுமையாய் அழுத்திக் கொண்டிருந்த கொழுந்துக்கூடையை வாசல் சுவர் ஆணியில் ஒரு நீண்ட பெருமூச்சுடன் மாட்டிவிட்டு மனச்சுமையோடு அடுக்களைக்குள் நுழைந்தாள்.

அவளது நீண்ட பெருமூச்சுடன் கூடிய மனவேதனைக்கு ஒரு நீண்ட பெரிய காரணமும் இருந்தது.

இன்று மாலை கொழுந்து நிறுக்கும் மடுவத்தில் வைத்து கணக்கப்பிள்ளை ஐயா சொன்ன செய்திதான் அது. கணக்கப்பிள்ளை இப்படித் தான் சொன்னார்.

"ராசம்மா நீ நாளையிலிருந்து வேலைக்கு வரவேணாம். ஓனக்கும் சேர்த்து பத்துப்பேருக்கு வயசு சரியாய் போனதால பென்ஷன் குடுக்கப்போறதாம்! நேத்து ஒபிஸ்ல தொரே சொன்னது! நாளக்கி ஒண்ணாம் தேதி தானே? அதனால அந்த பத்துப்பேரையும் வீட்டில் இருக்க சொன்னது தொரே!" என்று துரையின் கட்டளையை உயர்வாக விளித்து கூறிவிட்டு அந்த சகோதர மொழி கணக்கப்பிள்ளை தன் கடமையே கண்ணானார்! ராசம்மாவுக்கோ தன் காதுகளையே நம்பமுடியவில்லை! என்ன தான் வயது சரியாகப் போய் விட்டது.

அரசாங்கமே முன்வந்து பென்ஷன் கொடுக்க முற்பட்டாலும் அதனை மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் அல்லது ஜீரணித்துக்கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு இன்னும் வரவில்லைத் தானே?

பென்ஷன் என்றதும் இவ்வளவு நாளும் அங்கங்கே சிறிது சிறிதாக சிதறிக்கிடந்த கவலைகளெல்லாம் எப்படியோ தொடர்புப்பட்டு ஒன்றாக மனதில் வந்து உட்கார்ந்து கொண்டு மனதை அலைக்கழிக்கத் தொடங்கி விடுமல்லவா?

ராசம்மாவுக்கும் இந்த நிலமைதான். இந்த நிலமைக்கு ஆளாவாள் என்று அவள் நினைக்கவேயில்லை. தான் பெற்ற புள்ளைகளே தனக்கு துரோகம் செய்யும் என்று எந்தப் பெற்றோரும் நினைக்கமாட்டார்கள் தானே? பணம் என்று வரும் போது எல்லோரும் பங்காளிகள் மட்டும் என்பதை ஏனோ பிள்ளைகள் உணர்ந்திருப்பது போல பெற்றோர் உணர்ந்திருப்பதில்லை.

ராசம்மாவின் புருஷன் சரியான குடிகாரன். இரண்டு பையன்கள் தான் ராசம்மாவுக்கு இருவருக்குமே வயது பதினெட்டை தாண்டி விட்டது. நாகரீக மோகமும், ஆரம்பத்தில் பெற்றோர் கொடுத்த செல்லமும் இந்த சாதாரண கூலிவேலையை பெற்றோருடன் சேர்ந்து செய்ய அவர்களுக்கு மனம் இடந்தரவில்லை!

ராசம்மாவின் கணவன் முனியாண்டியும் ஓய்வு பெற்று இப்போது மூன்று வருடங்களாகி விட்டன. அதன் ஞாபகார்த்தமாக இருப்பது அவர்கள் வீட்டிலிலுள்ள ஒரு கெசட்டும். டீவியும் மட்டும்தான். மிகுதியெல்லாம் கணவனின் குடிக்கு முன்னாலும் பிள்ளைகளின் ஆடம்பரத்திற்கு முன்னாலும் பனியாகக் கரைந்து போனது.

இடையில் ஏற்பட்ட வீட்டு கஷ்டம் கூட பையன்களின் மனதை மாற்றவில்லை! நாள் முழுவதும் அந்த பாழாய்ப் போன கிரிக்கட்டை விளையாடுவதும் கடன் வாங்கியாவது சினிமா போவதுமாய் இருந்தனர். இப்போதெல்லாம் முனியாண்டி படுக்கையை விட்டு எழும்ப கூட முடியாத நிலையில் கைகால்கள் வலுவிழந்து காசநோய்க்கு அடிமையாகி விட்டான். ராசம்மாவின் சம்பாத்தியம் எந்த மூலைக்கு?

இந்த நிலையில் கணவனின் நோய்க்கு மருந்து வாங்க அவள் கையில் ஏது பணம்? மாசக் கடைசியில் ஏற்படும் சமாளிக்க முடியாத சாப்பாட்டுப் பிரச்சினையால் வீட்டிலுள்ள பொருட்கள் ஒவ்வொன்றாக அடகுகடையில் தஞ்சம் புகுந்தன.

இருந்தாலும் ராசம்மாவுக்கு மட்டும் மனதில் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை! இரண்டு பிள்ளைகளும் ஆண்பிள்ளைகள் தானே? என்றாவது ஒரு நாள் மனந்திருந்தி தொழில் செய்து நம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையிருந்தது.

எண்ணி மூன்றே மாசமே ராசம்மாவின் ஓய்வுப் பணம் வந்து விட்டது. மொத்தப் பணத்தையும் அப்படியே வங்கியில் போட்டுவிட்டால் அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலேயே சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம் என்று ராசம்மா நினைத்தாள். ஆனால் மகன்மார்களோ இதற்கு நேர்மாறாய் சிந்தித்தார்கள். ஆனால் முன்னதை விட தரமான டீவியும், கெசட்டும் வாங்க வேண்டும். அத்தோடு வீட்டுக்கு மின்சாரம் எடுக்க வேண்டும் என்பதே பிள்ளைகள் இருவரினதும் கனவாக இருந்தது. தமது கனவை செயற்படுத்தவும் முனைந்தார்கள். இதையெல்லாம் கேட்ட ராசம்மாவுக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை!

ஏற்கனவே கணவனின் பென்ஷன் காசும் பிள்ளைகளின் ஆசையினால் வீணாகி விட்டது. கணவனும் நோயாளியாகி விட்டான்! மேல் வீட்டு முனியம்மாவும் இப்படிதான் தன் பிள்ளைகள் தனக்குதவுவார்கள் என்றெண்ணி பென்ஷன் காசு முழுவதையும் பிள்ளைகள் நால்வரிடமும் கொடுத்து விட்டு இப்போது அடுத்த வேளை சாப்பாட்டுக்கே அல்லாடிக் கொண்டிருக்கிறாள். இந்த நிலை தனக்கும் வராது என்பது என்ன நிச்சயம்? சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்த ராசம்மாவை பின்புறமிருந்து வந்த கூக்குரல் சுயநினைவுக்கு கொண்டு வந்தது. ராசம்மாவின் இளைய மகன் குமார் தான் குக்குரலிட்டவாறு பதட்டத்துடன் ஓடி வந்துகொண்டிருந்தான். வந்த வேகத்தில் "அம்மா! அண்ணா பணிய லயத்திலுள்ள புஷ்பாவை கூட்டிக்கிட்டு வாரான்! நாளக்கி அந்தப் புஷ்பாவை ரெஜிஸ்டர் செய்துக்கப் போறானாம்!

அதனால் அம்மா எனக்குரிய பணத்தை இப்பவே கொடுத்துரு! நான் எங்கேயாவது போயிடுறேன்! அவன் வந்தா பிரச்சினை பண்ணுவான்" என்று மூச்சுவிடாமல் கூறிமுடித்தான்! ராசம்மாவுக்கோ மனம் துணுக்குற்றது.

இந்தப் புஷ்பாவும் வேலைவெட்டி இல்லாதவளாச்சே!எந்நேரமும் மினுக்கிக் கொண்டு ரோட்ரோமாக அல்லவா நின்றுக்கொண்டிருப்பாள். போயும் போயும் அவளையா பெண்டாட்டியாக்கிக் கொண்டான்! இனி நமது கதி என்ன? ஏற்கனவே வீட்டில் ஒருவரும் வேலைக்குப் போவதில்லை. இப்போதே இளைய மகன் பணத்தில் பங்கு கேட்கிறான்.

ராசம்மா ஒரு வித முடிவோடு எழுந்தாள்.

அப்போது அம்மா என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.அங்கு அவளது மூத்தமகனும் புஷ்பாவும் நின்று கொண்டிருந்தனர். இளைய மகனோ வீட்டை விட்டு கிளம்புவதற்கு ஆயத்தமாய் வாயிற்படியோரம் நின்றிருந்தான்!

ஓங்கிய குரலில் ராசம்மா கூறினாள். "இவ்வளவு நாளும் ஒங்க இஷ்டத்துக்கு நா விட்டுக்கொடுத்திட்டேன்!" என்னாக்காவது ஒரு நாள் நீங்க ரெண்டுப் பேரும் திருந்திவீங்க, வேல வெட்டிக்கு போவீங்கன்னு எதிர்பார்த்தேன் ஆனா நீங்க திருந்தல! தாயும் புள்ளையுமானாலும் வாயும், வயிறும் வேற தான் ஒங்கப்பன் பணத்தையும் அநியாயமா செலவு செஞ்சிட்டிங்க. ஆனா என் பணத்துல ஒரு சல்லிக்காசு கூட உங்க ரெண்டு பேருக்கும் தரமாட்டேன். ஒங்க மாதிரி புள்ளைகள நம்பினா எங்க மாதிரி பெற்றோர் எல்லாம் ரோட்ல அநாதையா பிச்ச எடுக்கணும். நீங்க ரெண்டுப் பேரும் எக்கேடு கெட்டாவது போங்க. நாளக்கி நா மொத்தப் பணத்தையும் வங்கில போடபோறேன். எங்க ரெண்டு பேரோட கடைசிக்காலத்துக்கும் அது போதும்" என்று உறுதியாக்க கூறிவிட்டு உள்ளே சென்றாள் ராசம்மா இருமிக் கொண்டிருந்த கணவனுக்கு தேநீர் சுடவைக்க!

# 11. ..............................இரா. சர்மிளாதேவி

## *விதி வரைந்த பாதை வழியே...*

வாசலையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் முனியாண்டி. என்றோ சொன்னேன் மன்னித்துக் கொள்ளுங்கள். வாசல் கூட்டி முனியாண்டி. அப்படிச் சொன்னால் தான் எல்லோருக்கும் தெரியும். டொக்டர், லோயர், டீச்சர் என்ற வகையில் அவனுக்கு இடப்பட்ட காரணப்பெயர் அது. கரிய நிறம், சுருட்டை முடி, பரட்டைத் தலை, உமட்டுச் சாயம் பூசாமலே சிவந்து காணப்படும் உதடுகளும், பற்களும், செய்யும் தொழிலைப் பிரகனப்படுத்திக் கொண்டிருக்கும் ஈர்க்குக் குச்சி கைகளும், கால்களும், மடித்துக் கட்டிய சாரம், சாரத்துக்குக் கீழே அரையடி நீளத்துக்கு என்ன நிறம் என்றே கண்டுபிடிக்க முடியாத அளவில் ஒரு காற்சட்டை இது தான் முனியாண்டி. தோட்டத்திலே அவன் கைபடாத இடமே இல்லை என்று கூறலாம். காரணம் அவன் ஒரு மனித தூரிகை.

“ஏ முனியாண்டி அங்க என்ன வேடிக்க பார்க்கிற?” வந்தமா வேல வெட்டிய சட்டு புட்டுன்னு பார்த்தமான்னு இல்லாம என்ன பார்வ வேண்டிக் கெடக்கு” தோட்டக் கங்காணி முதல் துரை வரை தன் மீது காட்டும் அதிகாரத்தை முனியாண்டி மீது காட்டிக் கொண்டு நின்றாள் குப்பம்மா. ஏன் என்று தெரியவில்லை அந்தக் தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்து வேலை செய்பவர்களுக்குக் கூட அவனைக் கண்டால் ஓர் ஏளனம். லயங்களிலே உள்ள அழுக்குகளை எல்லாம் அகற்றும் அவன் மீதோ அழுக்குகளை வாரி இறைப்பதிலேயே குறியாக இருந்தார்கள் அத்தோட்டத்து மக்கள் பூஜியத்துக்குள்ளே ராஜியத்தை ஆளுகின்ற மாக்கள்.

முனியாண்டியைக் கண்டாலே ஏளனம். “வாசக்கூட்டிப் பய, இந்தக் கன்றாவிய அள்ளிப்புட்டு எப்படித்தான் சோறு தின்னுறானோ

தெரியல சீ......... நெனைக்கவே வயித்தப் பொரட்டுது. வாந்தி வார மாதிரி இருக்குது" என்பாள் ஒருத்தி. "அதுக்கென்னா செய்யிறது அது அவனோட பரம்பரத் தொழிலு. அப்பன் செத்ததால புள்ள செய்யிறான். இவன் செத்தா, ஒன்னு பெத்து விட்டு இருக்கானே ராஜாவோ கூஜாவோ அவன் செய்திட்டுப் போறான். இவன் கெட்ட கேட்டுக்கு தொர உத்தியோகமா கிடைக்கும்?"

சடாரென நிமிர்ந்தான் முனியாண்டி. அவன் கண்கள் கோபக் கனலைக் கக்கின. நெஞ்சம் பதறியது. உதடு துடித்தது. நினைத்ததை எல்லாம் சொல்லி விடுவதற்கு அவனென்ன தோட்டத் துரையா? ஏழைக்கே உரிய அமைதியோடு அதேவேளை அழுத்தமாக இருந்தான். தன் மகனை வாசல கூட்ட அனுப்புவதில்லை என்று.

முனியாண்டிக்கு என்று ஒரு கூடு இருந்தது. மனைவி காத்தாயி, மகன் ராஜா. "ஏண்டி பாத்தி நம்ம புள்ள ராஜா, எதிர்காலத்தில ராஜா மாதிரி இருக்காண்டி. கோட்டு சூட்டு போடனுண்டி. தஸ்சு புஸ்சுன்னு இங்கிலிசுல பேசனுண்டி. வாசக் கூட்டி மவனேன்னு சொல்லுற இந்தத் தோட்டமே அவன் பார்த்து மூக்குல வெரல வைக்கனுண்டி. இப்பவே அவன தொர தொரன்று மூச்சுக்கு முன்னூறு தடவ ஏன் கூப்பிரேன்னு தெரியுமா? அப்பவாவது நான் நெனச்சது பலிக்காதான்னு ஒரு நப்பாசைதான்" அவன் நினைவுகள் கோட்டு சூட்டு ராஜாவுடன் ஐக்கியமாகின. காத்திக்கும் ஆசை தான் மகனை அக்கோலத்தில் காண்பதற்கு எட்டடி காம்பராவில் வாழும் அவர்களது நியாயமான ஆசை அது.

ராஜா பெயருக்கு ஏற்றாற் போல ராஜாவாக இல்லாவிட்டாலும் அப்பனையும் ஆத்தாளையும் அப்படியே உரித்து வைத்திருந்தான். கறுத்தத் தும்புத் தடிக்குக் காற்சட்டை, சேட் போட்டது போன்ற ஒரு தோற்றம். லயத்துக் குழந்தைகளுக்னே உரிய அனைத்து இலசட்ணங்களையும் பெற்றுத் திகழ்ந்தான். அதிசயம், ஆனாலும் உண்மை. மழைக்குக் கூட பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கியிராத

பெற்றோருக்குப் பிறந்த அவன் மிக நன்றாகப் படிப்பது தான். இத்தனைக்கும் ஒரு டியூசன் கிடையாது. சாப்பாடு கிடையாது, உடுப்பு கிடையாது என்பது மட்டுமே அவனுக்கு கிடைக்கக்கூடியது. அதனால் என்ன? கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்குமாம். அவன் விடயத்திலே தெய்வத்துக்கு இந்தச் சிரமம் கூட இருக்கவில்லை. பழைமை வாய்ந்த அக்கூரை அடிக்கின்ற காற்றினால் பிய்ந்தே கிடந்தது. தன்னுடைய முயற்சியை மட்டுமே துணையாகக் கொண்டு படித்த அவனுக்கு அன்று பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்து விட்டது. முனியாண்டியின் கூட்டுக்குள்ளும் ஒளி பாவ தொடங்கியது. சந்தோஷப் பூக்கள் பூக்கத் தொடங்கின.

"டேய் மச்சான் ராஜா கெம்பஸ்சுக்கு வந்து நாலு வருஷமாச்சிது நீர் தான் உம்மட வீட்டுக்கு எங்கள கூட்டிப் போகல்ல. எங்கட ஊருக்கென்றாலும் வாவண்டா வடக்குப் பக்கம் போறதென்டா நினைச்சும் பார்க்க முடியதது. எங்கட ஊர் கிழக்கில தானே இருக்கிறது. ஜாலியா போயிட்டு வருவம்" என்றான் கபிலன். கபிலனுடன் சேர்ந்து ஏனைய பிரதேச மாணவர்களும் "வாவண்டா மச்சான்" என்றழைக்கவே, கிழக்குப் பிரதேசத்தைப் பார்க்கும் ஆசை ராஜாவினுள்ளும் துளிர் விட்டது. பல்கலைக்கழகப் படிப்பை முடித்து விட்டு ஒவ்வொருவரும் தத்தமது ஊருக்குச் சென்றால் அவர்களுக்கென்றே ஆயிரம் பிரச்சினைகள் காத்திருக்கும். பின்னர் எங்கே ஊர் சுற்றிப் பார்ப்பதற்கு நேரம் கிடைக்கப் போகின்றது? கிடைக்கின்ற நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள திட்டமிட்டான் ராஜா. ஆம் ஆசை முன்னின்று இழுக்க, விதி பின்னின்று தள்ள கிழக்கு நோக்கிப் புறப்பட்டான் அவன்.

பஸ் கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. பல்கலைக்கழகத்துக்கு வந்ததால் தான் கண்டியையே பார்க்க நேர்ந்த ராஜாவுக்கோ எல்லாமே அதிசயமாக இருந்தது. பஸ்சினுள்ளே ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்தது வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்தாலும் மனம் மட்டும் கரையோரப் பிரதேசத்திலேயே லயித்திருந்தது. கடலைப்

பார்க்க வேண்டும். அதன் அழகை அள்ளிப் பருக வேண்டும்; மணலிலே கால் புதைய நடக்க வேண்டும்; கோயிலுக்குப் போக வேண்டும்; ஆசை தீர நண்டு, மீன், இறால் வகையறாக்களை ஒரு பிடி பிடிக்க வேண்டும்; முக்கியமாக சைக்கிள் ஓட்ட வேண்டும்; அதிலும் டபுள் போட்டு ஓட்ட வேண்டும். பின்னர் இவற்றையெல்லாம் கண்டிக் கடலைக் கூட கண்டிராத அம்மா அப்பாவிடமும் அயலவர்களிடமும் சொல்லிப் பெருமைப்பட வேண்டும்...... அவனது ஆசைகளோ கண்டிருக்கும் கிழக்குப் பிரதேசத்துக்கும் இடையில் உள்ள தூரத்தை விட அதிகமாக இருந்தன.

பஸ் ஒரு குழுக்கலுடன் நிற்கவே சிந்தனை கலைந்து சுற்றும் முற்றும் பார்த்தான் ராஜா. "டேய் மச்சான் செக்கிங் பொயின்ட் இறங்குவோமடா. ஆ... மச்சான் யுனிவர்சிட்டி ஐடின்டி கார்ட்டை எடுத்து வெளியே வைத்துக்கொள். அப்போது தான் இவன்கள் ஒன்றும் கேட்க மாட்டான்கள்" ஏதோ பழக்கப்பட்டது போல சொல்லிக்கொண்டே செயலில் ஈடுபட்ட கபிலனைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. ராஜாவுக்கு. ஏதோ ஒரு வழியாக செக்கிங் என்ற பெயரில் நடந்த போஸ்மாஸ்ட்டம் எல்லாம் முடிந்து மீண்டும் பஸ்ஸில் ஏறி இருந்தபோது ராஜா கேட்ட முதல் கேள்வி. "மச்சான் இது மட்டும் தானா செக்கிங் பொயின்ட் அல்லது இன்னும் இருக்கின்றதா?" அவன் கேட்ட கேள்வியே செக்கிங் பொயின்டில் அவன் பட்ட அவஸ்தயைக் காட்டியது. "கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் அவன் செக்கிங் பொயின்டில் மாட்டிக் கொண்டு வாட வேண்டும்" என்று கூறிச் சிரித்த கபிலனோ இதெல்லாம் சர்வசாதாரணம் என்ற ரீதியில் உட்கார்ந்திருந்தான். ராஜாவுக்கோ முதன் முதலாக நாட்டுச் சூழ்நிலை நினைவுக்கு வரவே மனதிலே இனம் புரியாத பயம் ஏற்பட்டது. கூடவே களைப்பும் ஏற்பட உறங்கிப் போனான். பின்னர் அவன் எழுந்திருந்தது செக்கிங் பொயின்ட்டுக்களில் மட்டும் தான்.

"மச்சான் எழும்பன்டா ஊர் வந்துவிட்டது. ஊர் பார்க்க வந்தவன் இப்படியா நித்திரை கொள்ளுறது" கபிலனின் குரல் கேட்டு கண்

விழித்த ராஜா பஸ்சுக்குள் இருந்தே சுற்றும் முற்றும் பார்த்தான். என்ன அழகான இடம் சுற்றும் முற்றும் சன நடமாட்டம் தெரிந்தது. ஆனாலும் இனம் புரியாத பீதியொன்று அவன் மனதில் இருந்து கொண்டே இருந்தது. "மச்சான் சனம் எல்லாம் இறங்குதுகள் வா நாமும் இறங்குவோம்" ஊர் காற்றைச் சுவாதித்த மகிழ்ச்சியில் உற்சாகமாகவே இறங்க ஆயத்தமானான் கபிலன். அடி மனதிலே பயம் இருந்தாலும் கபிலனின் உற்சாகமும் மிகுந்து காணப்படும் சன நடமாட்டமும் தெம்மைத் தரவே புதிய உலகத்தைத் தரிசிக்கும் மகிழ்ச்சியில் எண்ணங்கள் ஆயிரம் சிறகடிக்க பஸ்சை விட்டு இறங்கும் பொருட்டு முதற்படியில் காலடி வைத்தான் ராஜா. அவன் வைத்த இறுதிப் படியும் அதுதான் என்பதை அங்கே சற்றும் எதிர்பாராதவகையில் கேட்ட வெடிச்சத்தம் நிரூபித்தது. ஆம் சில்லென்று தெறித்த ராஜாவின் செந்நீர் பட்டு அந்நிலம் சிவந்தது.

"நா பெத்தராசா வாயில மண்ண அள்ளிப் போட்டுட்டு போயிட்டியே" வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுத முனியாண்டி காத்தாயின் குரல் மலை முகடுகளில் பட்டுத் தெரித்தது.

*சிகரம் 1999*

# லயக் காம்பரா

உயர்ந்த வளர்ந்த அந்த ஆலமரத்தின் கிளைகள், இலைகள் எல்லாம் ராமையாவின் ஓங்கிய குரலைக்கேட்டு சலசலத்தன. "நா இப்ப கிட்டத்தப் பத்து வருஷமா இங்கு சமூக சேவை சங்கத்துல தலைவரா இருந்திருக்கிறேன். தோட்டத்தோட நல்லதுக்காக நா சொல்றதெல்லாம் கேட்டுக்கேட்டு எனக்குரொம்ப ஒத்தாசையா இருந்தா ஒங்கள என்னால் மறக்க ஏலாது. பெரியவங்க தாய் மாருக, தம்பிமாருக, தங்கச்சிமாருக உல்லாருக்கும் நா நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். நீங்கள்லாம் பெரிய மனசு பண்ணி உங்கள்ல ஒருத்தர இந்த சங்கத்தோட புதுத் தலைவராகத் தெரிவு செய்யணும். இதுதான் நா விரும்புறது என்னால..........."

ராமையா பேச்சை முடிப்பதற்குள் கூட்டத்திலே ஒரு பரப்பரப்பு. "இந்தளவு, பத்து வருஷ காலமும் தோட்ட மக்களின் நலனுக்காக உழைத்த ராமையாவுக்கு திடீரென்று என்ன நடந்தது? ஏன் இந்த முடிவு எடுத்தார்? எல்லோர் மனதிலும் இதே கேள்வி நிமிர்ந்து நின்றது.

ராமையாவின் மனைவி கனகம்மாளுக்கு கூட ஆச்சரியம். என்ன! இந்த மனுஷனுக்கு பயித்தியம் கியித்தியம் புடிச்சிருக்குமோ? வீட்ல வச்சி எங்ககிட்ட கூட ஒண்ணுமே சொல்லலியே என்று ஆச்சிரியப் பட்டவாறு ராமையாவை பார்த்தாள்.

" தலைவரு எங்கள மன்னிக்க வேணும். நீங்க எடுத்திருக்கிற முடிவால இந்தத் தோட்டத்து ஜனங்களே வழி தெரியாம தவிக்கிறோம். உங்களத் தவர தோட்டத்துல அறிவாலயும் அனுபவத்தாலயும் பெரியவங்க யாரும் இருக்கிறதா எங்களுக்கு தெரியல தலைவரு முடிவ மாத்திக்கணும். எங்கடசங்கத்துல தொடர்ந்து நீங்களே

தலைவராக இருக்கணும்."

"ஆமா. ஆமா சுந்தரம் சொல்றது சரிதான். நாங்களும் அதையே தான் சொல்றோம்"

கூட்டத்தில் சிலரது குரல் ஓங்கி ஒலித்தது.

ராமையா எழுந்து சொன்னார்.

"எல்லாரும் சொல்றத. என்னால் ஏத்துக்க முடியாததுக்கு என்ன மன்னிச்சிருங்க..... நீங்கள்லாம் வளர்ந்து வர்ற சமூகத்துல உள்ளவங்க. உங்களுக்கு புதுப்புது சிந்தனைகளை தூண்டி விடுற ஒரு தலைவர் அவசியம். அவர் மூலமா தோட்டத்து மக்கள் குறைகள் நீக்கப்படனும். ஒண்ணு கேக்கிறேன் சுந்தரம்! நீயே பதில் சொல்லு. நம்ம ஊருக்கு ஒழுங்கான பஸ்ஸுகள அந்தந்த நேரத்துக்கு போடச் சொல்லி, மேலிடத்துக்கு எத்தன மனு எழுதி போட்டிருப்போம்.....? ஏதாவது நடவடிக்கை எடுத்தாங்களா.....?

" பன்னிரண்டு மனு சாமி. அது... அரசாங்கத்துல இருந்து ஒரு பதிலுமே வரலீங்க..." என்றான் சுந்தரம்.

"ம்ம் கேட்டுக்குங்க. நம்ம ஊருக்கு ஒழுங்கான பஸ் சேவை, நேரத்துக்கு நேரம் நடக்கனும்னா அந்த பன்னிரண்டு மனுவுக்கு கூடுதலா மனு எழுத வேணும். நா இன்னும் பொடியனாவே இருந்திருந்தா, இதெல்லாம் செஞ்சி குடுப்பேன். ஆனா என்ட வயசுதான் பார்த்தாலே சொல்லிடுவீங்களே, அறுபதுக்கு மேலன்னு, அங்கயும் இங்கயும் அலைஞ்சி கோரிக்கைய நிறைவேத்தி வைக்க, துடிதுடிப்புள்ள ஒருத்தர் அவசியம். அதுக்கு என்னைய போல ஒருத்தர் தலைவராக இருந்தா முடியாது.......

கூட்டம் ராமையாவின் பேச்சை ஆமோதிப்பதாக மௌனம்

சாதித்தது.

"சரி இப்ப புது தலைவர நீங்களே தெரிவு செய்யிங்க" என்றார். ராமையா "தலைவருக்கு வணக்கம். நம்ம தலைவரா நாங்கள்ளாம் முழு மனசோட பால சுந்தரத்த தெரிவு செஞ்சிருக்கோம்."

ஆறுமுகம் கூட்டத்திலிருந்து எழுந்து சொன்னான்.

" பால சுந்தரம் தலைவரா இருக்க விரும்புறவங்க கைய ஒசந்துங்க பாக்கலாம்" என்றார் ராமையா கூட்டத்தைப் பார்த்து. எல்லோரது கைகளும் உயர்ந்தன.

"அப்ப எல்லோருக்கும் விரும்பந்தானே?" உற்சாகமாக கேட்டார் ராமையா. அவரது உற்சாகத்துக்குக் காரணம் தனக்குப் பின் நேர்மையான சமூகப் பற்றுள்ள ஒருவன் தோட்டத்தின் தலைவனாகிறான் என்பதே.

பாலசுந்தரம், அரசியல் வாடை அடிக்காமலே ஓட்டுகளில்லாமலே சங்கத் தலைவர் பதவியை பொறுப்பேற்றான்.

"நம்ம பழைய தலைவருக்கு ஒரு பாராட்டு விழாவைவச்சி கௌரவப்படுத்த சனங்க விரும்புறாங்க" பாலசுந்தரம் மக்களின் விருப்பத்தை வெளியிட்டான்.

"த பாரு பாலா! நம்ம தோட்டத்து சனங்க கஷ்டத்திலே பொறந்து, கஷ்டத்திலே வளர்றவங்க. மாச சம்பளம் கெடைக்க முன்னமே பிள்ளைகள்ட ஸ்கூல் செலவு, பஸ் செலவு, வீட்டு சாமான் கல்யாணம் - சடங்கு அப்பிடின்னு ஏகப்பட்ட செலவுக முன்னால் நிக்கும். இப்பிடி இருக்கிற நேரம் எனக்கு கஷ்டப்படுகிற தோட்டத்து சனங்ககிட்ட காசு சேத்து ஒரு பாராட்டு விழாவையும் வச்சா அது நல்லா அமையாது. இன்னும் இந்த தோட்டத்து பிள்ளைக டவுண்

ஸ்கூலுக்கு போயி படிக்க ஒழுங்கான பஸ் வசதி இல்ல. இந்த மாதிரி நம்ம தோட்டத்துல ஏகப்பட்ட பிரச்சினைக. அதுக்கெல்லாம் முடிவு கண்டாலே என்னைய பாராட்டி கௌரவப்படுத்தின மாதிரிதான்" ராமையா பேசிக் கொண்டே போனார்.

உயர்ந்த மலைகளெல்லாம் ராமையாவின் கீழே இறங்கி விட்டதாக உணர்ந்தான் பால சுந்தரம். ராமையாவின் அறிவுரையில் பாலசுந்தரம் விழித்துக் கொண்டான்.

டவுன் ஸ்கூலுக்குச் சென்று படிக்கும் பிள்ளைகளைக் கண்டு கதைத்தான். பஸ் பிரச்சினையைப் பற்றிக் கேட்டுத் தெரிந்ததுக் கொண்டான். ஆடி மாதக்காற்று வந்து அந்த தோட்டத்தையே ஒரு உலுக்க உலுக்கி விட்டது. காற்றோடு கலந்த குளிர், ஆளையே ஆட்டிப் படைத்தது. இந்த மாதமே இப்படியென்றால்! மார்கழி, தை மாதங்களில் கேட்கவும் வேண்டுமா? டவுண் ஸ்கூலில் படிக்கும் மாணவர்கள் பல தினங்களுக்குப் பாடசாலைக்கு முழுக்கு போட்டு விட்டு வீட்லிருப்பர்.

அநேகமாக காலையில் உள்ள பஸ் தம்பலகல தோட்த்தை அண்மிக்கும். விடிந்ததும் விடி யாததுமாக லயத்து சங்கு ஓசையிலே பெண்கள் குறிப்பாக தாய்மார் எழுந்து விடுவர். சுருண்டு படுத்திருக்கும் பிள்ளைகளை உழுப்ப அவர்கள் படும் பாடு அப்பப்பா! அரை மணித்தியால எழுப்பல். தண்ணீா பனிக்கட்டியாக குளிரும். நேரமிருந்தால் சில வீட்டில் சுடுநீா கழுவல். இல்லா விட்டால் பச்சைத் தண்ணீர்தான். இரண்டு துண்டு ரொட்டிகளை பேப்பரில் சுற்றினால் இனி ஓட்டம் தான்.

"பஸ் போயிடும் வெரசா போ" இப்பேச்சு அதிகாலையில் சுப்பிரபாதமாகிய லய காம்பராக்கள் அநேகம்.

அன்று சங்க கூட்டத்தில் ஜனங்கள் பஸ் பிரச்சனை பற்றிதான்

பாலசுந்தரத்திடம் முறையிட்டனர்.

"தலைவர்! நம்ம மக கிருஷ்ணவேணி, டவுண்ஷ்கூலுக்கு போய்படிக்கிறா. தெனமும் அவுங்க டீச்சரு வகுப்புக்குள்ள மகள எடுக்க மாட்டாங்களாம். என்ன ஏன் லேட்டாகி வந்தன்னு டீச்சர் கேப்பாங்களாம். பஸ் வர லேட்டாகிடுச்சி அதனாலதான்னு சொன்னா தெனமும் உங்க எஸ்டேட்டுல இருந்து வர்ற பிள்ளைங்க இப்படித்தான் படிக்க கள்ளத்தனம் பண்ணிக்கிட்டு லேட்டாகி வர்றது. நாளையில இருந்து முதல் பஸ்ஸுல வரணும். இன்னிக்கி இன்ரவல் வரைக்கும் வெளியில நில்லுங்க. இப்படி சொல்லுவாங்கலாம்.

ஆமா நம்ம பழனி சொல்றதும் உண்மதாங்க. உங்களுக்குத்தான் தெரியுமே. இங்க வருஷத்துல முக்கால் வாசி நாள் மழை. அதுலயும் ஒழுங்கா பஸ் இருக்கிறது. கால்வாசி நாள். அப்பிடி பாத்தாலும் டிரைவர்மாருக மழை பெய்யிறதுனால மரம் முறிஞ்சி விழுந்துருக்கு, மண் சரிவு நடந்துருக்கு அப்பிடினுவாங்க. இல்லாட்டி நல்லா குடிச்சிட்டு பஸ்ஸ கொண்டு போயி பாறையில மோதிட்டு பஸ் ஒடச்சிருச்சினுவாங்க. இந்த நெலமையில நம்ம புள்ளங்க எப்படிங்க முன்னுக்கு வர்றது......?

என்று உணர்ச்சி வசப்பட்டு கேட்டான் வடிவேலு. ஆமா இதுக்கு நாம ஒரு முடிவு எடுக்கணும் ஊர் சனங்கள் பேச ஆரம்பித்தனர். பெரியவங்க எல்லாரும் அமைதியா இருக்க. அதுக்கு ஒரு நல்ல முடிவோட உங்களையெல்லாம் நான் அடுத்த கூட்டத்துல சந்திக்கிறேன்.

பாலசுந்தரம் மீண்டும் அரசாங்கத்துக்கு மனு எழுதிப் போடும் யோசனையில் விடை பெற்றான். கூட்டத்திலிருந் சிலருக்கு தலைவர் பாலசுந்தரத்தின் மீது கோபம் ஏறியது. முந்தி இருந்த கிழடும் இப்படித்தான் மனு எழுதிப்போட்டு போட்டே பந்து வருஷங்கள கடத்திக்கிட்டு இருந்திச்சி. இவரும் என்னடான்னா................

பாலசுந்தரம் சமூக சேவை சங்கத் தலைவராகியதிலிருந்து

பத்து மனுக்கள் எழுதி அனுப்பிவிட்டான். இதுதான் நா எழுதுற கடேசி மனு என்றவாறு எழுதி அனுப்பினான்.

அந்த தோட்டத்துப் பிள்ளைகள் படிக்கும் டவுண் ஸ்கூல்களின் பெயர்களை குறித்துக் கொண்டான். சில அதிபர்கள் தோட்டத்துப் பிள்ளைகள் பஸ்ஸிற்கு படும் சிரமத்தை அறிந்திருந்தனர். சிலர் பிரச்சினையை எடுத்துக் கூறியதும் ஐயோ! பாவம் பிள்ளைகள் அரசாங்கத்திற்கு அதைப் பற்றி அறிவிக்கலாமே என அனுதாப்பட்டு அறிவுரையும் வழங்கினார்கள்.

ஒரு அதிபரைக் காண்பதே குதிரைக் கொம்பு விடயமாகியது. பாலசுந்தரத்தைக் கண்டும் காணாதது போல சில நாட்கள் இருந்தார். பிறகு வியாழன், வெள்ளி நாட்களில் வாருங்கள் என்று சொல்லிவிட்டு மீட்டிங் சரியான வேலை என தலைமறைவாகி விடுவார். ஒரு கிழமை அலைச்சலின் பின் அதிபரைக் காணப் போனான். அதிபரிடம் விளக்கினான். பஸ் நிலை சீரடையும் வரை மாணவர்களை வகுப்பிற்கு வெளியே நிறுத்த வேண்டாம் என ஆசிரியர்களிடம் கூறுகிறேன் என்றார்.

பாடசாலையிலிருந்து வெளியில் வந்ததும் மணிக்கூட்டு கோபுரத்தைப் பார்த்தான். நேரம் பதினொன்றை அண்மித்தது.

பஸ் தரிப்பிடத்தை நோக்கி நடந்தான். “இன்னக்கி 503 நெம்பர் பஸ்ஸு போகாதாம். உடஞ்சி போச்சாம்.” யாரோ சொன்னார்கள். பாலசுந்தரர்ரிற்கு மனசுக்குள்ளே சரியான எரிச்சல்.

“இந்த பாழாய்ப் போன பஸ்ஸால் எத்தனை வேலைகள் தடைப்படுகின்றன” என அந்த இடத்தில் நின்றவர்களில் நினைக்காதவர்களே இல்லை எனலாம். ஏய் பாலா என்னா ஆளே தெரியாம ரொம்பவும் மாறிட்ட?

எங்கோ பார்த்துக் கொண்டு நின்ற பாலாசுந்தரத்தை அந்தக்

குரல் சுய நினைவுக்கு கொண்டு வந்தது. "நீ....நீ... சுரேஸ் இல்ல...." என்று குரலுக்குரியவனை நோக்கினான் பாலசுந்தரம்.

சுரேஸும் பாலசுந்தரமும் ஒன்றாகப் படித்தவர்கள். பாலா டவுண் ஸ்கூலில் படிக்கும் காலத்தில் பஸ் இல்லாத நேரங்களில் உதயனின் வீட்டில் தங்கிவிடுவான். பிரிந்தவர் கூடினால் இனி கேட்கவும் வேண்டுமா? இருவரும் குசலம் விசாரிப்பதோடு பழைய நினைவுகளை ஞாபகப்படுத்தி மகிழ்ந்தனர்.

"என்னா பாலா உங்க ஊருக்கு பஸ்ஸுக்கு சிரமம் தானா?" பாலாந்தரத்தின் முகத்தைப் பார்க்கவே தெரிந்தது. நீண்ட நேரமாக நின்று கொண்டிருக்கிறான். ஸ்கூலுக்கு போகும் காலத்திலும் இப்படித்தான். பஸ் தரிப்பிடத்தில் மணிக் கணக்காய் காத்திருந்து விட்டு சுரேஷ் வீட்டுக்குப் போவான். வியர்வை உடையை நனைத் திருக்கும். பசியால் முகம் வாட்டமாயிருக்கும். இன்றும் அதே பாலசுந்தரம் அதே நேரத்தில்...... அதனால் தான் சுரேஷ் கேட்டான்.

"ம்ம்.... என்ன.... கேட்ட பஸ் இல்லையான்னா.....? அதுக்குத் தானே இவ்வளவு நாளா அலஞ்சிக் கிட்டிருக்கிறேன். ஒழுங்கா பஸ் போடுங்கன்னு அமைச்சர்ல இருந்து ஜனாதிபதி வரைக்கும் மனு எழுதி போட்டாச்சி. இன்னைக்கும் ஒரு மனு எழுதி தபால்ல சேர்த்தேன்" என்று பதிலளித்தான். பாலசுந்தரம்.

பாலா நீ எழுதிப் போட்ட மனு எல்லாம் அவங்களுக்கு கெடச்சிருக்கான்னு பார்க்கணும். அதோட நீ எழுதிப் போட்டுக்கிட்டிக்கிற நேரத்துக்கு அமையச்சரையே கண்டு பேசியிருக்கலாந் தானே......? என்று கேட்டான் சுரேஷ்.

"சீ சொல்றதிலையும் உண்மை இருக்குத்தான். ஆனா நம்ம தோட்டத்து சனங்க பயப்புடுறாங்க. அமைச்சர கண்டு பேசினா ஏதும் பிரச்சினை வந்திடுமோன்னு........ பாலா! நம்ம மலையக சமூகம் இன்னும்

முன்னேறாம இருக்கிறதுக்குக் காரணமே பயம் தான். நாங்க யாருக்கு பயப்புடணும்? நம்ம ஓட்டுக்கள்லாம் சேர்ந்துதானே அவுங்க பதவிக்கு வந்ததே. இப்பிடி இருக்கிற நேரம் நாம சும்மா பயந்துக்கிட்டு இருந்துடக் கூடாது. அமைச்சர் ஒரு பதிலும் சொல்லாட்டி மறியல் போராட்டம் நடத்துங்க. நாம குனிய குனிய நம்மள குட்டுறவங்களும் கூடுவாங்க."

பாலசுந்தரத்திற்கும் சுரேஷ் சொல்லுவது நியாயமாகவே பட்டது. "ஆங்.... எனக்கு நேரமாகிடுச்சி... அப்ப நா போயிட்டு வாரேன் பாலா." நா சொன்னபடி செய் என்ன? பதிலுக்கு காத்திராமல் பாலசுந்திரத்திடமிருந்து விடை பெற்றான் சுரேஷ். பாலசுந்தரம் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி இரண்டைக் கடந்திருந்தது.

"இந்த சனியன் புடிச்ச பஸ் எப்படிதான் நேரத்துக்கு வந்திச்சு." பக்கத்தலிருந்த சுப்பையா வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு சொன்னது நன்றாக பாலசுந்தரத்திற்கு கேட்டது.

ஸ்கூல் விட்டதும் மாணவர்கள் கூட்டம் பஸ் தரிப்பிடத்தை சூழ்ந்து கொண்டது. முதல் நாள் சம்பளம் கிடைத்த களிப்பில் வீட்டுச் சாமான்கள் வாங்க வந்தவர்களெல்லாம் சோர்வோடு இருந்தனர்.

"காலையிலிருந்து நிற்க நாங்க மரமா என்ன?" என்ற என்ற கேள்வி அவர்கள் முகத்தில் அப்பிக் கிடந்தது. ராசம்மா, சுந்தரம், கனகம்மாள், பாஸ்கரன் எல்லோரும் சாமான் மூட்டைகள் மீது உட்கார்ந்திருந்தனர்.

ஒருவாறு பஸ் லடபுடா சத்தத்துடன் வந்து சேர்ந்தது. அப்போது நேரம் நான்கு மணி. அந்த ஊருக்கு எப்போதுமே ஒற்றைக் கதவு பஸ்தான். பஸ்ஸின் கண்ணாடிகள் பாதியளவாக இருக்கும். முழுக் கண்ணாடி உள்ள இரட்டைக் கதவு பஸ்ஸில் பயணம் செய்வதற்கும் குடுத்து வச்சிருக்கணும். இது ஊர் மக்களது அபிப்பிராயம்.

கண்டக்டர் உள்ளே நகர்ந்து டிக்கட் எடுக்க ஆரம்பித்தார். பாலசுந்தரம் எட்டு ரூபாவைக் கொடுத்தான். கண்டக்டர் டிக்கெட்டை கொடுத்து விட்டு மெதுவாக நகரப் போனார்.

"டிக்கட்டுக்கு எவ்வளவு?" கேட்டான் பாலசுந்தரம்.

"எட்டு ரூபா என்றான் கண்டக்டர்!"

"பஸ்ஸுக்கு ஏழு ரூபா அம்பது சதம். அப்ப அம்பது சதம் கூடுதலா ஏன் எடுத்தீங்க?"

மெதுவாக, ஆனால் கண்டிப்பான குரலில் கேட்டான் பாலசுந்தரம்.

"யோவ் உம்மட கதையெல்லாம் சங்கத்தோட இருக்கட்டும். இங்க வந்து பெரிய கதையெல்லாம் கதைக் காதீர்."

தன்னுடைய புட்டு கிழப்பிவிடுமா என்று பயந்தார் கணடக்டர். "நீங்க ஒருத்தர் கிட்ட அம்பது சதம் கொள்ளையடிச் சிங்கன்னா பஸ்ல நாற்பது பேர்கிட்டேயும் இருவது ரூபா கொள்ளையடிச்சி சம்பாதிப்பிங்க. அந்த இருபது ரூபாவுக்கு நாங்க நாயா அலைஞ்சி எவ்வளவோ கஷ்டப்பட்டுகிறோம்னு ஒங்களுக்கு தெரியுமா?" பாலசுந்தரம் சத்தமாய்க் கேட்டான்.

"என்னா இங்க சத்தம்?" எல்லோரையும் தள்ளிக்கொண்டு டிரைவர் முன்னால் வந்தார். கண்டக்டர் விளக்கினார். இருவரும் பாலசுந்தரத்தைப் பிடித்து பஸ்ஸிற்கு வெளியே தள்ளினர்.

கை, கால் மூட்டுகளில் ஏற்பட்ட சிராய்வையும் பொருட்படுத்தாமல் சுதாகரித்துக் கொண்டு எழுந்தான் பாலசுந்தரம்.

"பஸ் புறப்பட்டு தூரத்தே போய்க் கொண்டிருந்தது.

யோவ் டிரைவரு பஸ்ஸ நிறுத்துய்யா நாங்களும் எறங்க்கிறோம்.

பஸ்ஸிலிருந்தவர்கள் கோரஸ் பாடினர்.

பஸ் நின்றது.

நாளைய மறியல் போராட்டத்தின் முதற் கட்டம் அதுதான்.

பாலசுந்தரத்தோடு அம்மக்களும் மலையை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

*மலையக சிறுகதை போட்டியின்*
*பரிசுக்கதை 1997*

# குறிஞ்சி மலர்களின் படைப்பாளிகளைப் பற்றி..............

01. பேராதனை ஷர்புன்னிஷா

1933 இல் அட்டனில் பிறந்த மலையகத்தின் மூத்த பெண் எழுத்தாளரான பேராதனை ஷர்புன்னிஷா முஸ்லீம் மாதர்கள் கல்வி பற்றி உணராத காலத்திலேயே எழுத்துத் துறையில் ஈடுபட்டவர். சிறுகதை, கவிதை, கட்டுரை எனப்பல எழுத்து வடிவங்களில் ஈடுபாடு கொண்டவர்.

02. பூரணி

இன்றைய தலைமுறையினர்க்கு தெரியாத படைப்பாளி, இவரின் சிறுகதைகள் மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்க்கிறது. தொண்டு செய்வதில் ஆர்வம் கொண்டு துறவியாராகிவிட்டார்.

03. புசல்லாவ ஸ்மாலிஹா

சிறுகதை, கவிதை, நாடகம், மெல்லிசை பாடல்கள் என்று பலத்துறைகளிலும் தம் கை வண்ணத்தை காட்டியவர். இவரின் கவிதைகள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளன. சர்மிளாவின் இதயராகம் தமிழ் திரைப்படத்திற்கு இரண்டு பாடல்களை எழுதியுள்ளார்.

04. அட்டன் சாந்தாராஜ்

அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிப்புந்தவர். ''செய்தி'' பத்திரிகையின் மூலம் எழுத்துலகிற்கு அறிமுகமானவர். திருமதி ராஜகோபால் தனது பெயருடன் கணவனின் பெயரையும் இணைத்து இலக்கிய உலகில் உலா வருகிறார்.

05. ஷாந்தி மோகன்

குன்றின்குரல் நடத்திய எழுத்துப்பயிற்சி பட்டறையின் மூலம் சிறுகதைத் துறைக்கு அறிமுகமமானவர் கவியரங்குகளில் தனது வல்லமையை வெளிப்படுத்தியவர். ஆசிரியராக கடமையாற்றுகிறார்.

06. அக்னஸ் சவரிமுத்து

கலை இலக்கியங்களில் ஈடுபாடுள்ள இவர் பாடசாலை அதிபராக பணியாற்றுகிறார். பாடசாலை நாடகங்களில் நடித்து பரிசும் பெற்றுள்ள இவர் மலையக பாரம்பரிய கலைகளில் ஈடுபாடுகொண்டு அதனை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ளவர்.

07. பாலரஞ்சனி சர்மா

மாத்தளை மண் தந்த படைப்பாளி, சிறுகதை, கவிதை, மெல்லிசை பாடல் என தன் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். ஆசிரியையாக தன் பணியினை தொடர்கிறார்.

08. ரோஹினி முத்தையா

நாவல் நகரைச் சேர்ந்தவர். ஆசிரியையாகப் பணிபாற்றுகிறார். இவரது ஆக்கங்கள் பல வானொலியில் ஒலிப்பரப்பாகியுள்ளன. தினகரன், வீரகேசரி போன்ற தேசிய பத்திரிகைகளிலும் இவரது படைப்புகள் இடம் பெற்றுள்ளன.

09. சுகந்தி வெள்ளையகவுண்டர்

நுவரெலியா கந்தப்பளையச் சேர்ந்த இவர் நு / நல்லாயன் மகளிர் கல்லூரியில் பயின்றவர். இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

10. செ. கோகிலவர்த்தனி

தோட்டப்பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகத்தில் பணியாற்றும் இவர். ஹட்டன் புக்கோயலைச் சேர்ந்தவர். ''குன்றின்குரல்'' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் இடம் பெற்றுள்ளார்.

11. இரா. சர்மிளாதேவி

பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். இவர் தனது பட்டப் படிப்புக்காக ''மலையக சஞ்சிகைகளை'' ஆய்வு செய்துள்ளார். விமர்சனத் துறையிலும் ஈடுபாடு கொண்டுள்ளார்.

12. சிவாஜினி சதாசீவம்

மலையக கலை இலக்கியப் பேரவையின் எழுத்துப்பயிற்சி பட்டறையில் பங்குபற்றியவர். இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றுள்ளார்.

அடுத்த வெளியீடுகள்

எஸ். முரளிதரனின்

# தீ வகத்து ஊமைகள்

(கவிதைத்தொகுதி)

கொழுந்து

சிறுகதைகள்

மலையக வெளியீட்டகம்

# குறிஞ்சி மலர்கள்

1. பேராதனை ஷர்புன்னிஷா
2. பூரணி
3. புசல்லாவை ஸ்மாலிஹா
4. சாந்தா ராஜ்
5. ஷாந்தி மோகன்
6. அக்னஸ் சவரிமுத்து
7. பாலரஞ்சனி
8. ரோஹினி முத்தையா
9. சுகந்தி
10. செ. கோகிலவர்தனி
11. இரா. சர்மிளாதேவி
12. சிவாஜினி சதாசிவம்

மலையக வெளியீட்டகம்
த. பெ. இல. 32,
கண்டி.

ISBN : 955-9084-08-9

Printed by : Unilanka's Tel : 074-614438